கல்கி

KALKI 17·10·1976
75 காசு





பிஸ்கட் என்றால் இதுதான்—சுவைக்கும்

வைட்டமின்களுக்கும்
போஷாக்குக்கும் இதுதான்:

பிரிட்டானியா

க்ளுக்கோஸ்-D



பிரிட்டானியா க்ளுக்கோஸ்-Dயுடன மற்றொரு முன்னணி ரக க்ளுக்கோஸ் பிஸ்கட்டை ஒப்பிட்டுப் பார்த்த பரிசோதனைகளில் தெள்ளத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது: வைட்டமின் சத்திலும், மொத்த போஷாக்குத் தன்மையிலும் உயர்ந்தது க்ளுக்கோஸ்-D பிஸ்கட் தான். இனிமைக்கும், சுவைக்கும், முறுமுறுப்புக்கும், அதிகமாக விரும்பப்படுகிறது. சக்தி வேண்டுமா— க்ளுக்கோஸையும் விட 20 சத விகிதம் அதிக சக்தியைத் தருகிறது க்ளுக்கோஸ்-D. பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D பிஸ்கட்— தித்திக்கும் சக்தி!



எனவேதான், வேறெந்த க்ளுக்கோஸ் பிஸ்கட்டையும் விட அதிக மக்களைக் கவர்ந்துள்ளது பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D

பிரிட்டானியா பிரிட்டானியா பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை

லின்டாஸ்-BBC-GL-10-140 TM

கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலை தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள், அசல் சரிகை, அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்,

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.



தீபாவளி சிறப்புத் தள்ளுபடி பருத்தி 10%, பட்டு 15%

தீபாவளி வரையில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் விற்பனை உண்டு

பம்பாய் & தில்லியில் கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்கள்

கோ-ஆப்டெக்ஸ் அஜந்தா ஹவுஸ், 164, டாக்டர் D. N. ரோடு, பம்பாய்-

மற்றும் பம்பாயிலுள்ள இதர கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும் கிடைக்கும்

யமுனா கோ-ஆப்டெக்ஸ் ஹேண்ட்லூம் சூப்பர் மார்க்கெட்.

ஸ்டூட்டி பில்டிங், 41-42, நைவாலா பிளாக் L, பேங்க் தெரு, கரோல்பாக், புது தில்லி-5

மற்றும் தில்லியிலுள்ள இதர கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும் கிடைக்கும்


உடம்புவலி உங்களைத் தாக்கும்போது
ஸாரிடான் கொண்டு அதைத் தாக்குங்கள்.
உடம்புவலி மற்றும் தலைவலியிலிருந்து ஸாரிடான் மட்டுமே வெறும் நிவாரணத்தைக் காட்டிலும் அதிகப்பலன் தருகிறது. அதன் விசேட கலவை முறை வலியைப் போக்கும்போதே களைப்பை நீக்கிப் புத்துயிரளிக்கிறது. இங்குதான் ரோஷின் சர்வதேச ஆராய்ச்சி உங்களுக்காக செயல்படுகிறது.
Saridon

பெடல் மிதிக்காமல் ஓடும்...
பயணத்தில்
உற்சாகம் கூடும்!




புதிய ராலீ என்ஜின்
RT 35
இணைத்திடவே—
உங்கள் சைக்கிள்
தானே
இயங்கிடுமே!

சைக்கிளுக்கென்றே, தனிப்பட்ட முறையில் டிஸைன் செய்யப்பட்ட ராலீ என்ஜின் RT 35 அதிக மைலோட்டம் அளிக்கிறது.

சீரிய சிறப்பியல்புகள்:

- எளிதான, எடை குறைந்த, கையடக்கமான என்ஜின்— இந்த வகையில் இந்தியாவில் கிடைப்பது இது ஒன்றுதான்.
- சைக்கிளில் எவ்வித மாற்றமும் இன்றி பொருத்தலாம்.
- எரிபொருள் செலவு கிலோமீட்டருக்கு 4 காசுகள் மட்டுமே.
- பராமரிப்புக்கு, பெரும்பாலும் இடம் வைக்காதது.
- நீங்கள் விரும்பும்போது, பெடல் செய்யவும் வசதி கொண்டது.



ராலீ என்ஜின் RT35

தயாரித்து விற்பனைக்கு விடுப்போர்:
ராலீஸ் இந்தியா லிமிடெட்
என்ஜினியரிங் பிரிவு
21, ரேவலின் ஸ்ட்ரீட்,
பம்பாய் 400 001


U-RE-8 TAM (R)

ராலி இஞ்சின் RT - 35 டீலர்கள் Bicycle Appli ation

தமிழ்நாடு:

1. அக்ரோ இஞ்ஜினியர்ஸ் & டிரேடர்ஸ்,
   11/87, வெங்கடசுவாமி ரோடு
   ஆர்.எஸ். புரம், கோயமுத்தூர் - 641 002
2. லக்ஷ்மி இஞ்ஜினியரிங் கார்ப்பரேஷன்
   13, பிஷப் ஹீபர் பில்டிங்ஸ்
   மேல புலிவார் ரோடு, திருச்சி - 2
3. யூனியன் டிரேடர்ஸ்
   காங்கிரஸ் பில்டிங்ஸ், 111, மவுண்ட் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை-6
4. தன்ராஜ் டையிஸ் & கெமிகல்ஸ்
   10, எம்.பி.எஸ். ரோடு, வேலூர் - 632 004

மரம் மற்றும் உலோக மேற்புறங்களின் பளபளப்பான :பினிஷுக்கு ஸிக்மாரின் மற்றும் ஸிக்மாலாக் எனுமல்கள்.



...ஒளிக் கதிர்களின் பளபளப்பான வண்ணங்களைப்போல!

- வெண்மை என்றும் மாறாத வெண்மை— பழுப்படைவதில்லை, சிராய்வதில்லை, உரிவதில்லை.
- நீடித்துழைக்கும் பளிச்சிடும் இயற்கையான வண்ணங்கள்.

கதவுகள், ஜன்னல்கள் மற்றும் பர்னிச்சருக்கு வண்ணம் பூச

ஸிக்மாரின்

சூப்பர்பைன் ஸிந்தெடிக் எனுமல்

ஸிக்மாலாக்

ஜெனரல்-பர்ப்பஸ் ஸிந்தெடிக் எனுமல்

ஸிக்மா பெயிண்ட்ஸ்-'டச்' சிறப்புடன்

ஸிக்மா பெயிண்ட்ஸ் லிட்., 221, டி.என். ரோட், பம்பாய் 400 001

டிஸ்ட்ரிபியூட்டர்கள்: M/s. இண்டோகெம் லிமிடெட், நமாஸி பில்டிங் 52-54, ரத்தன் பஜார், சென்னை - 600 003. போன்: 37602



பம்பாயில் ஸ்டேட் பாங்கின்
தலைமை அலுவலகம்

போய்ச்சேரும் இடம் இந்தியா!

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களில் பெரும்பாலோர் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் அயல் நாட்டு அல்லது இந்திய நாணய நான் ரெஸிடெண்ட் (எக்ஸ்டர்னல்) கணக்குகளைத் துவக்குவதால் பெரும் லாபம் உண்டாகிறது என்று உணர்ந்துள்ளார்கள்.

காரணம்?

ஸ்டேட் பாங்க் க்ரூப் இந்தியாவில் நாடு பூராவிலும் பரவி உள்ள 5600க்கும் அதிகமான கிளைகளைக் கொண்டிருப்பதால் அவர்கள் தங்களுக்கு வசதியான கிளைகளில் கணக்கைத் துவக்க முடியும்.

அத்துடன் கீழ்க்கண்ட நன்மைகளையும் பெறுகிறார்கள்

* ஆண்டுக்கு 5½% லிருந்து 10% வரை வருமான வரியில்லாத வட்டி.
* வெளிநாட்டில் தங்கியிருக்கும் போதும் இந்தியாவுக்குத் திரும்பி வந்து 7 வருடங்கள் வரையிலும் சொத்து-வரி கிடையாது.
* சுட்டுத் தொகையை வெளி நாட்டில் சுலபமாகப் பெறலாம்.
* செலாவணி விகித கஷ்டங்கள் இல்லை.

இலவச சிற்றேடுக்கு எங்களுக்கு எழுதுங்கள். அல்லது நீங்கள் விரும்பினால், வெளிநாட்டில் உள்ள உங்களுடைய நண்பர்களுக்கோ, உறவினர்களுக்கோ அல்லது நீங்கள் தொடர்பு கொண்ட வியாபார நிலையங்களுக்கோ, உங்களுடைய வாழ்த்துகளுடன் இந்த விவரங்களை நாங்களே நேராக அனுப்புகிறோம். அவர்களுடைய முகவரிகளை எங்களுக்கு எழுதுங்கள்.

இன்டர்நேஷனல் டிவிஷன்,
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா,
தபால் பெட்டி இலக்கம் 10121,
பம்பாய் 400 021.


ஸ்டேட் பாங்க்
இந்தியாவின் மிகப்பெரிய பாங்க்

CHAITRA-SBI-119 TAM


''வாதுமை ஒன்றுதான் உங்கள் கூந்தலுக்கு வேண்டிய இயற்கையான போசாக்குச் சத்து அவ்வளவும் உடையது''
என்கிறார் அனிதா ராபின்ஸ்
எக்ஸ்போர்ட் ஹவுஸ் நிர்வாகி
ஆரோக்கியமுள்ள கேசம்தான் செழுசெழுவென்று ஒளிவீசி நிலைபெறும். செழுமை மின்னும் கூந்தலுக்கான லியூர் வழியினுக்கு மூலாதாரம், ஒரு பழங்காலப் பாரம்பரைச் செல்வம்: வாதுமை—தேங்காய், கடலை ஆமணக்கு ஆகிய எதனையும் விட அதிக இயற்கைச் சத்துள்ளது.
வரண்ட கேசத்திற்கு விசேஷப் பயன்தருவது லியூர் ஆல்மண்ட் ஹேர் ஆயில். இரு வழிகளில் அது வேலை செய்கிறது—பகலிலே, கேச அலங்கரிப்புத் தைலமாகப் பயன்படும், இரவிலே, கேச டானிக்காக உபயோகிக்கலாம்.
லியூர்
''என் கேசத்திற்கு வசீகரமூட்டுது லியூர்; ஆல்மண்ட் ஹேர் ஆயில் ஒளிவீசம் வளமூட்டுகிறது'
Creative Unit-A 2309-Tam.

பாருங்கள் எப்படி ப்யூரிடாஸ் ஃபில்ட்டர்கள் சாதாரணக் குழாய் நீரை வடிகட்டி அசுத்தங்களை நீக்கி நூற்றுக்கு நூறு தீங்கற்ற நல்ல குடி நீராக ஆக்கிவிடுகிறது

நீர்வழிப் பரவும் நோய்களான காலரா, டைஃபாயிடு, சீத பேதி, இரைப்பை-குடல் அழற்சி முதலியவற்றைத் தடுத்துக் காக்க இதைவிட மேலான உத்தரவாதம் எதுவுமில்லை.



உங்கள் ஆதரவுக்குரியவர்களுக்கு ஆதரவளியுங்கள். இன்றே பெறுவீர் ஒரு ப்யூரிடாஸ்.

அசல் ப்யூரிடாஸ் ஃபில்ட்டர்களையே வாங்குகிறீர்கள் என்பதை உறுதி செய்ய மேற்புற அறைக்கு மேலுள்ள ப்யூரிடாஸ் முத்திரையைப் பார்த்து வாங்குங்கள். ப்யூரிடாஸ் பெயரும் பதிவு எண் 196501ம் அடிப்புற உலோகத்தின் மீது இருப்பதையும் கவனியுங்கள்.



ப்யூரிடாஸ் இலேசானது, உடையவே உடையாது, தூக்கிச் செல்ல வாகானது, துப்புரவாக்க இலகுவானது.



பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு நவீனமான வசதிகள்

BALSARA பல்சாரா & கம்பெனி (பிரை.) லிட்.
43, [illegible] ரோடு, பம்பாய் 400 001

CHAITRA BLS19 TAM Rev.

Interpub/GSC/2/76 Tml



அமிர்தாஞ்சனம்

தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு அனைத்துக்கும் குணமளிக்க இல்லந்தோறும் இருக்கவேண்டிய நல்ல மருந்து.









வலி, ஜலதோஷம், சுளுக்கு ஆகியவற்றிற்கு சிறிதளவு அமிர்தாஞ்சனம் தடவுங்கள். அதன் சிறப்பான பத்து மருந்துகளின் கலவை வியக்கத்தக்க வகையில் உங்களுக்கு நிமிஷத்தில நிவாரணமளிப்பதை உணர்வீர்கள். சிக்கனமான ஜாடி, சிறிய பாட்டில் மற்றும் மலிவு விலையில் அடக்கமான டப்பாவிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சனம்
80 ஆண்டுகளுக்கு
மேலாக நம்பகமான
குடும்ப நிவாரணி



அமிர்தாஞ்சன் லிமிடெட்

AM-1255



இனிமை கொஞ்சும்
தனிமையில்...
"லக்ஷ்மி, நீ பாலியெஸ்டர் கலவைகளின்
நாகரிகக் கவர்ச்சி... லக்ஷ்மி, கிளர்ச்சியூட்டும்
நிறங்கள், அடக்கமான கோடுகள், கட்டங்கள்,
இழைச் சேர்க்கைகள் இவற்றின் மூலம் என்னை
பிரமிக்கச்செய்கிறாய்.
லக்ஷ்மி—நீ உண்மையிலேயே தெய்வீகமானவள்."
® 67% பாலியெஸ்டர்/33% காட்டன் இணைந்த ஷர்ட்டிங்
80% பாலியெஸ்டர்/20% காட்டன் இணைந்த ஷர்ட்டிங்
67% பாலியெஸ்டர்/33% விஸ்கோஸ் இணைந்த ஷர்ட்டிங்.
Lovable Lakshmi
® ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்
தி லக்ஷ்மி மில்ஸ் கம்பெனி லிமிடெட்
கோயமுத்தூர் 641 037.

SAA/LM/1887 R

வைட்டமின் பற்றாக்குறையினால் ஏற்படும் களைப்பை எதிர்க்க:




டாக்டர்கள் சிபாரிசு செய்யும் வைட்டமின்களும் தாதுப்பொருள்களும் ரோஷ் விடாமினெட்ஸ் ஃபோர்டேயில் அடங்கியுள்ளன.

இன்றைய வாழ்க்கை முன்போல் அல்ல. அவசியமான உணவுபதார்த்தங்களின் விலை ஆகாயத்தை எட்டிப்பிடிக்கின்றது. கிடைக்கும் பொருள்களோ, ஊட்டச்சத்துடனும், தளதளவென்று புதுமையாகவும் இருப்பதில்லை. காலை பலகாரம், மற்றும் மதிய உணவு வெகு அவசரமாகச் சாப்பிடப்படுவதுடன், அவற்றன் ஊட்டச்சக்தியும் முழுமையாக இருப்பதில்லை. இந்த ஊட்டப்பற்றாக்குறை அலுவலகத்திலும், வீட்டிலும், தொழிற்சாலையிலும் நம்மை களைப்பிற்கும், சோர்விற்கும் உள்ளாக்குகிறது. இந்த வைட்டமின் பற்றாக்குறையை எதிர்ப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது ரோஷ் விடாமினெட்ஸ் ஃபோர்டே—சமமான ஆகாரத்திற்கு அத்தியாவசியமான 11 வைட்டமின்கள் மற்றும் 5 தாதுப் பொருள்களின் சாரம். தினமும் காலையில் ஒரு ரோஷ் விடாமினெட்ஸ் ஃபோர்டே உட்கொள்ளுங்கள். களைப்பை எதிர்க்க ஒரு கவசம் போன்றது இது.

ரோஷ்

விடாமினெட்ஸ் ஃபோர்டே

ட்ரேட் மார்க்



'டானிக் மாத்திரை'


ஒரு ரோஷ் விடாமினெட்ஸ் ஃபோர்டே காலைதோறும் உங்களுக்கு 20 பைசாவுக்கும்* குறைவிலே!

* உள்ளூர் வரிகள் தனி




RP 8979

லதாவுக்குத்
தேவை பொங்கி வரும் நுரை




தீபாவுக்குத்
தேவை பொலிவு தரும் சலவை





ரம்யா
இவர்கள் இருவரையுமே திருப்தி செய்கிறது

பொங்கி வரும் நுரை–
பொலிவு தரும் சலவை



விலைப்பட்டியல்:
700 கிராம் ரூ. 8.23
500 கிராம் ரூ. 6.14
300 கிராம் ரூ. 4.01
50 கிராம் (பாக்கெட்) ரூ. 0.71
சலவைக் கட்டி (135 கிராம்) ரூ. 1.28
வரிகள் தனி

இத்தரமான தயாரிப்பை அளிப்போர்:
அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, தமிழ்நாடு
விற்பனையாளர்கள்: பாரி & கம்பெனி லிமிடெட்

SAA UP/2120



"எழில் கொஞ்சும் மங்கையருக்கு குமரனோடு குலவாத நாளும் வீணே!"

ஆம்! தரமிக்க, குமரனின் பட்டு வகைகள் நங்கையரைக் கட்டித் தழுவிடும் இன்பத்திற்கு இணையேது? கனவுலகை மிஞ்சும் கற்பனை நயம் டிசைன்கள், பார்டர்கள், வண்ணக் கோலங்கள்.

"பட்டாடை உடுத்திடவே பண்டிகையும் வாராதோ" என ஏங்க வைக்கும் இன்பச் சுரங்கம்—குமரனின் கோலாகல பட்டு வகைகள்.

இந்தத் தீபாவளிக்கு குமரன் பட்டு புடவைகள் பாவாடைகள் வாங்கி விட்டீர்களா?

குமரன் சில்க்ஸ்

2, நாகேஸ்வரராவ் ரோடு,
(பனகல் பார்க் எதிரில்)
தியாகராய நகர்.
சென்னை 600 017
போன்: 443544

Sarath



கல்கி

1976
அக்டோபர் 17
ஐப்பசி 1

"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

போடு புதிர்!

கவர்க் கடிகாரத்தைத் துடைத்துக் கொண்டிருந்தேன். அப்போது அதைத் தாங்கிக் கொண்டிருந்த ஆணி கழன்று விட்டிருக்கிறது. நான் கவனிக்கவில்லை. கையை எடுத்ததும் கடிகாரம் கீழே விழுந்து விட்டது. வருத்தத்தோடு அதைத் தூக்கச் சென்றபோது அதிலுள்ள கண்ணாடி இரண்டு இடங்களில் கீறல் விழுந்து மூன்று துண்டுகளாக உடைந்திருந்தது. அதில் எந்தத் துண்டின் வழியே பார்த்தாலும் டயலில் உள்ள நம்பர்களின் கூட்டுத் தொகை ஒரே மாதிரியாக இருந்தது.


அப்படியானால் எப்படி உடைந்திருக்கும்?

— வெ. சுப்புராமன்



பிறந்த 3ம் மாதம் தொடங்கும் முதல் திட உணவு குழந்தையின் வருங்கால வாழ்வையே தீர்மானிக்கத் தக்கது.

பால் மட்டும் கொடுத்தால் போதாது என்கிறார்கள் டாக்டர்கள்



டாக்டர்கள் சிபாரிசு செய்வது

ஃபாரெக்ஸ்®

விரைவான முழு வளர்ச்சிக்கான
சரிவிகிதச் சத்து நிரவிய திட உணவு



பச்சிளம் தேகமும் மூளையும் வேகமாக வளரத் துடிப்பவை. அதற்கு ஈடுகொடுக்கப் பால் மட்டும் போதுமானதாகாது. தாய்ப்பாலிலிருந்து கெட்டி உணவுக்கு மாறவேண்டும்—மூன்றும் மாதமே; மென்றுதின்னப் பழக்குங்கள்... மேன்மையான வளர்ச்சிக்குத் திறவுகோலாக உதவும் திட உணவு ஃபாரெக்ஸ் ஒன்றுதான்—பச்சிளம் நீரண உறுப்புகளுக்கு உகந்தது.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்; காரணம்,

தாய்ப் பால் விடுக்கும் தலையாய மாதங்களில் பாப்பாவின் பத்துவித வளர்ச்சிகளுக்கும் நிறைவுதரும் **ஒப்பற்ற சரிவிகிதச் சத்துணவு இதுவே.**

இரத்தச் செழிப்புக்கும் தெம்புக்கும் கல்லுசிதமான அளவுக்கு (இதுபோன்ற வேறெந்தத் திட உணவிலும் அமையாத அளவுக்கு) இரும்புச் சத்து; எலும்புக்கு உறுதியும், பல்லுக்குப் பலமும் தரும் கால்ஷியம், வைட்டமின் D2; மூளையும் உடலும் விரைந்து வளர உகந்த புரதச் சத்துக்கள்; வளரும் உடம்புக்குத் தேவையான சக்தி— இவ்வளவும் அடங்கியது ஃபாரெக்ஸ்; எனவே... பாலூட்டும் பழக்கத்தை மாற்றுவதற்கான வேறு எந்த திட உணவையும் விட அதிகமாக அதிகத் தாய்மார்கள் ஆதரிப்பது ஃபாரெக்ஸ். பழங்கள், காய்கறிகள், பருப்பு, இறைச்சி, முட்டை போன்ற எந்த முக்கிய உணவுடனும் கலந்து கொடுக்க இனிமையானது ஃபாரெக்ஸ். மென்றுதின்னப் பழக்க... கூடிய விரைவிலே குடும்ப உணவுகளிடம் குழந்தையை இனிதே வரவேற்க...

அதி உன்னதமான முதல் திட உணவு ஃபாரெக்ஸ்.

இலவசமான எமது ஃபாரெக்ஸ் கைப் புத்தகம், 2-ரூபா தள்ளுபடித் திட்டம்— இரண்டையும் பற்றி அறிய, எழுதுங்கள்.

(புத்தகம், எந்த மொழியில் எனக்கு குறிப்பிட்டு) உங்கள் பெயர், விலாசத்தை எழுதி, 25 பைசா தபால் வில்லையோடு அனுப்புக இம் முகவரிக்கு: தபால் பை நம்பர் 19119, பம்பாய் 400 025.



கிளாக்ஸோ

LIL.GF. 53-140 TM

தேவகானம் தொடரட்டும்!

காந்தி ஜெயந்தி விஜயதசமி இரண்டும் சேர்ந்து கொண்டது அக்டோபர் இரண்டாம் தேதியன்று. அன்றுதான் புதுதில்லியில் ராஜாஜியின் சிலை நிறுவுவதற்கென இரண்டாவது உதவிக் கச்சேரியைத் தலைநகரிலேயே நிகழ்த்தினார் ஸ்ரீமதி எம். எஸ். உத்தேசிக்கப்பட்ட இரண்டு லட்ச ரூபாயும் இரு உதவிக் கச்சேரிகள் மூலமாக வசூலாகி விட்டது. எனவே அன்றைய தினம் ராஜாஜியின் நினைவும் அவரை அறிந்த அனைவரது உள்ளங்களிலும் சதா குடிகொண்டிருந்தது. இம்மூன்று புனித நினைவுகளோடு நான்காவதாக ஓர் எண்ணமும் எழுந்தது. இதே விஜயதசமி திருநாளில் தானே உலக அமைதிக்காக ராஜாஜி இயற்றிய ஆங்கிலப் பாடலை முதன் முதலாக ஸ்ரீமதி எம். எஸ். ஐ. நா. சபை அரங்கில் பாடினார் என்ற ஞாபகம் வந்து உலக அமைதிக்காக நம்மைப் பிரார்த்திக்க வைத்தது. நான்கோடு ஐந்தாக ஒரு மகிழ்ச்சிகரமான விஷயத்தையும் எடுத்துக் கூறி ஆனந்தித்தார்கள் தலைநகர்வாழ் அன்பர்கள். ஸ்ரீமதி எம். எஸ். அண்மையில்தான் அறுபதாண்டு பராசக்தியிடம் வரம் வேண்டிப் பிரார்த்தித்த பாரதி அத்தகைய திறமை வந்தடையத் தேவையான குண நலன்களையும் வழங்குமாறு வாணியிடம் வேண்டுகிறான் :

தெளிவுறவே அறிந் திடுதல்;
 தெளிவுதர மொழிந்திடுதல்;
 சிந்திப்பார்க்கே
களி வளர உள்ளத்தில் ஆனந்தக்
 கனவு பல, காட்டல் கண்ணீர்த்
துளிவர உள்ளுருக்குதல், இங்கிவை
 யெல்லாம்
 நீ அருளுந் தொழில்களன்றோ ?

இன்று எம். எஸ். பெற்றுள்ள குண நலன்களைத்தான் அன்றே பாரதி வர்ணித்து வாணியிடமும் வேண்டி நின்றானோ என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா ?

ஐந்து குணங்களை யொட்டி ஐவர் நினைவு வருகிறது நமக்கு. ராஜாஜி, டி. கே. சி., கல்கி, சதாசிவம், எம். எஸ். என்ற ஐம்பெரும் நபர்களிடையே நிலவிய நட்பின் நெருக்கமும் அன்பின்

கல்கி மலர் 36 இதழ் 12

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

நிரம்பப் பெற்றார் என்ற செய்திதான் அது. ஆங்கிலக் கணக்குப்படி செப்டம்பர் 16 பிறந்த நாள். நமது வழக்கப்படி புரட்டாசி பரணி — ஆம் தரணி ஆளும் பரணிதான் !

இந்த ஐந்து நினைவுகளும் பழனிப் பஞ்சாமிர்தமாக இனிக்கவே அன்று தலைநகரில் உற்சாகம் அலைமோதியது. மறுநாள் பத்திரிகைகள் வாயிலாகத் தமிழகத்துக்கும் அந்த அலைகள் பரவின.

இதன் தொடர்பாக வேறு ஐந்து அம்சங்களும் நம் நினைவுக்கு வருகின்றன. அவை ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களிடம் உள்ள ஐம்பெரும் குணங்கள். இசைக் கலையில் அபார ஆற்றல், அத்துடன் கூடவே அசாதாரணமான அடக்கம், தெளிவுற மொழிதல், பக்தி பரவசமாகிப் பாடிக் கேட்பவரையும் இறையுணர்வில் ஆழ்த்துதல், தமக்கென்று வாழாமல், பிறருக்காகவே வாழ்க்கையை அர்ப்பணித்தல் ஆகியனதாம் அந்தச் சிறப்பு இயல்புகள்.

''பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்'' என்று உறவும் சரித்திரத்தில் இடம் பெறுகிற ஒரு கலாசார மறுமலர்ச்சியையே தோற்றுவித்தது. இந்த ஐவருடனும் கலை ஆர்வத்தாலும், கவிதா மோகத்தாலும் அறிவாற்றலாலும் கவரப்பட்டு நட்புக் கொண்ட அறிஞர்களும் கலைஞர்களும் ஏராளம். அது ஒரு பண்பாட்டுப் பாற்கடல். அந்தப் பாற்கடலில் பிறந்த அமுதம் எம். எஸ்ஸின் இசை. எனவேதான் அந்த இசையைப் பருகும் பாக்கியம் பெற்ற நாம், ''தேவகானம் என்றால் இதுதான்'' என்று சொல்லி மகிழ்கிறோம். அவரோ தமது சிறப்புக்கள் அனைத்தையும் தமது கணவர் ஸ்ரீ சதாசிவத்தின் பாதங்களில் சமர்ப்பித்து வணங்கி மகிழ்கிறார்.

அறுபதாண்டு நிரம்பப் பெறும் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களிடம் நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்றவர் பலர். எட்ட இருந்து அவர் கலையை ரசித்து மகிழ்ந்தவர் எண்ணி மாளாத அளவினர். அவரை ஒரு கலைத் தேவதையாகவே மதித்து வணங்குவோரும் உண்டு. இப்படி லட்சோப லட்சம் மக்களின் இதயங்களில் வீற்றிருந்து

இறை யுணர்வை ஊட்டி வருபவர்தாம் ஸ்ரீமதி எம். எஸ். என்றாலும் கல்கி வாசகர்களிடம் அவருக்கு ஒரு தனி அபிமானமும் கல்கி வாசகர்களுக்கு அவரிடம் விசேஷ மதிப்பும் என்றுமே நிலவி வருபவை.

ஆரம்ப காலத்திலிருந்து இந்தப் பத்திரிகையின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் தமது கணவர் ஸ்ரீ சதாசிவம் எடுத்துக் கொண்ட நேரடி முயற்சிகளுக்குத் தோன்றாத் துணையாக இருந்தவர் ஸ்ரீமதி எம்.எஸ். இதன் தூய்மையைக் காப்பதிலும் கௌரவத்தைப் பேணுவதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் ஸ்ரீ சதாசிவம் என்றால் அவரின் இதயமாக விளங்குகிறார் ஸ்ரீமதி எம். எஸ்.

எனவே இசை உலகமும், ரசிகர் உலகமும், பக்தியும் பண்பும் பரப்பும் பெரியார்களது கூட்டமும் சதாசிவம் தம்பதிக்குப் பல்லாண்டு கூறி வாழ்த்தும்போது நாம் கல்கி வாசகர்கள் சார்பில் நமது விசேஷ வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தேவ கானம் தொடரட்டும், தெய்வ அருள் பெருகட்டும்.

சாசனம் பற்றிச் சிந்திப்போம்-2

அரசியல் சாசனத்தின் நாற்பத்திநாலாவது மாறுதல் மசோதாவின்படி அரசு பிறப்பிக்கும் ஒரு சட்டம் அரசியல் சாசனத்துக்குப் புறம்பானதா என்பதைப் பரிசீலிக்க சுப்ரீம் கோர்ட் மட்டுமே உரிமை பெற்றுள்ளது. அப்படி ஆராயும்போது குறைந்தபட்சம் ஏழு நீதிபதிகள் தீர்ப்பளிக்க அமர வேண்டும். புறம்பானது என்று தீர்மானமாக மூன்றில் இரண்டு பங்கு நீதிபதிகள் அவ்வாறு தீர்ப்பளிக்க வேண்டும்.

இந்தச் சாசன மாறுதல் சுப்ரீம் கோர்ட்டைப் பலவீனப்படுத்துவது மட்டுமல்ல, சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளிடையே கட்சி மனப்பான்மை வளரவும் வழி வகுக்கும் என்று கருதுகிறார் அறிஞர் திரு கே. சந்தானம்.

சுயராஜ்யாவில் அவர் மேலும் எழுதியுள்ளதன் சாராம்சம் பின்வருமாறு:

ஒரு எம். எல். ஏ. தேர்தலின்போது செய்த தவறுகள் அல்லது பதவிக் காலத்தில் நடந்து கொண்ட தவறான விதம் காரணமாகப் பதவி இழக்கும் சூழல் ஏற்படலாம். மீண்டும் தேர்தலுக்கு நிற்கும் வாய்ப்பையும் அவர் இழக்கலாம். அவர் இந்த உரிமைகளை இழக்கத்தான் வேண்டுமா, அப்படியானால் எத்தனை காலம் அந்த உரிமைகளை இழந்துவிட வேண்டும் என்று தீர்மானிக்கும் பொறுப்பைக் குடியரசுத் தலைவரிடம் விடுகிறது புதிய சாசன மாறுதல். குடியரசுத் தலைவர் தேர்தல் கமிஷனின் யோசனைப்படி நடக்க வேண்டும் என்கிறது.

ஏற்கெனவே இந்த அதிகாரங்கள் ஆளுநரிடம் இருந்தன. அவற்றைத் தற்போது குடியரசுத் தலைவருக்கு மாற்றுகிறது 44வது மாறுதல் மசோதா.

குடியரசுத் தலைவர் மத்திய அமைச்சரவையின் ஆலோசனைப்படி நடக்க வேண்டியவராகிறார். மத்திய அமைச்சரவை, குறிப்பிட்ட எம். எல். ஏ. எந்தக் கட்சியைச் சேர்ந்தவரோ அதே கட்சியைச் சேர்ந்ததாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. எனவே அரசியல் நோக்கங்கள் இதில் குறுக்கிடலாம். இதைத் தவிர்க்கப் பழையபடி ஆளுநரிடமே இப்பொறுப்புக்களை ஒப்படைப்பது நல்லது.


44வது மாறுதல் மசோதாவின்படி இந்தியா முழுவதற்கும் நெருக்கடி நிலைப் பிரகடனம் அறிவிப்பதற்குப் பதில் அவசியமான பகுதியில் மட்டும் பிரகடனம் செய்ய அரசு உரிமை பெற நினைக்கிறது. இதில் ஆட்சேபணை ஏதுமில்லை. ஆனால் புதிய மாறுதலின்படி இந்த நெருக்கடி நிலைப் பிரகடனம் கால வரையறையின்றி நீடிக்கலாம்! அத்தருணத்தில் ஜனநாயகம் என்பது நிச்சயமற்ற ஒன்றாகிவிடும். எனவே இந்த ஷரத்தில் கண்டிப்பாகப் பின்வரும் திருத்தங்கள் செய்யப்படவேண்டும்.

தேசத்துக்கு வெளியே இருந்து தோன்றும் ஆபத்துக்கான நெருக்கடி நிலைப் பிரகடனம் என்றும் உள்நாட்டு நிலவரம் காரணமாக நெருக்கடி நிலைப் பிரகடனம் என்றும் பிரிக்க வேண்டியது அவசியம். முதலில் குறிப்பிட்ட பிரகடனம் எதிரி நாட்டுப் படையெடுப்பு நிகழ்ந்தால் மட்டுமே அறிவிக்கப்பட வேண்டும். இந்திய மண்ணில் பகைவர்கள் போரிடும் வரையில்மட்டுமே அது நீடிக்க வேண்டும்.' உள்நாட்டுக் கலவரம் எனில் நெருக்கடி நிலைப் பிரகடனம் அந்தப் பகுதிக்கு மட்டுமே அறிவிக்கப்பட வேண்டும். ஆறு மாதங்கள் மட்டுமே நீடிக்க வேண்டும். அதன் பிறகும் நீடிப்பதாயின் அதற்குப் பாராளுமன்றத்தைக் கூட்டி விவாதித்து அதன் அங்கீகாரம் பெற வேண்டும்.

44வது மாறுதல் உள்பட அரசியல் சாசனத்தில் பாராளுமன்றத்தால் செய்யப்படும் எந்த மாறுதலையும் எந்த நீதிமன்றமும் விசாரிக்க அல்லது பரிசீலிக்க இனி முடியாதவாறு ஒரு ஷரத்தை 44வது மாறுதல் மசோதாவில் புகுத்தி யிருக்கிறார்கள்.

இந்த மாறுதலின் விளைவாக பாராளுமன்றம் தன்னைத் தானே ஒழித்துக் கட்டிக் கொள்ளலாம்; அடிப்படை உரிமைகள் உள்பட அரசியல் சாசனத்தில் எந்தப் பகுதியையும் நீக்கிவிடலாம்; எதிர்க் கட்சிகளுக்குத் தடை விதிக்கலாம்; ஏக கட்சி ஆட்சி ஏற்படுத்தலாம்; வயது வந்தவருக்கு வாக்குரிமை' என்பதை நீக்கிக் கட்சி அங்கத்தினர்களுக்கே வாக்குரிமை எனலாம் !

இப்போதுள்ள அரசு இப்படியெல்லாம் செய்யப் போவதில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால் பிரச்னை அதுவல்ல. வளர்ந்து வரும் இந்தியாவுக்கு அரசியல் சாசன ஸ்திரத் தன்மை தேவை. மேற்படி மாறுதல் இந்த ஸ்திரத் தன்மையை நீக்குகிறது. பின்னால் ஒரு காலத்தில் பதவிக்கு வரக் கூடிய புரட்சியாளர்களோ வகுப்புவாதிகளோ மேலே குறிப்பிட்ட விதங்களில் தாறுமாறாக நடக்க இம்மாறுதல் இடம் தருகிறது.


டெலிவிஷன் விவாதத்தில்
கார்டர் ஃபோர்டை
வென்றிருக்கிறார்!
தொழில்
வளர்ச்
திட்டங்கள்
ஆப்பிரிக்கப் பயணம் மேற்கொண்டுள்ள
நமது பிரதமர் அந்நாடுகளின்
தொழில் வளர்ச்சிக்குப் பாரதம்
உதவ வழிகோலுவார்!
ஆப்பிரிக்க நாடுகள்
தொலைஞ்சு போங்க!
நீங்க இங்கே இருக்க லாயக்கில்லே!
மதி
ராமச்சந்திரன்

உயர்தரமான சுவைக்கும் உண்மையான சிக்கனத்திற்கும்

ரிக்கரி
இன்ஸ்டண்ட்



அரை டீஸ்பூன் அளவே போதும்

(தேவைக்கேற்ப குறைத்தோ அதிகமாகவோ உபயோகிக்கவும்)



50 கிராம் சீசாவில் 37 கோப்பைகள்
மற்றெந்த 50 கிராம் சீசாவை காட்டிலும் 7 கோப்பைகள் அதிகமாக ரிக்கரி அளிக்கிறது. ஏனெனில் ரிக்கரி ஸ்டிராங்கானது. இது சிக்கனத்திற்கு ஒரு சிறந்தவழி.



அதிக ஸ்டிராங்கானது, அதிக மணமுள்ளதும்கூட:
ருசியும், மணமும் மிகுந்த ஸ்டிராங்கான தயாரிப்பு. ஆகவே, ஒரு கோப்பை மணமும் ருசியும் மிக்க நல்ல காப்பிக்கு குறைந்த அளவு ரிக்கரியே போதும்.



இப்போது ரிக்கரியின் விலை கணிசமாகக் குறைவு!

50 கிராம் சீசாவுக்கு 50 பைசே விலை குறைக்கப்பட்டுள்ளது.

ரிக்கரி
இன்ஸ்டண்ட்

வறுத்து அரைத்த காப்பியின் சுவையை ஏறக்குறைய அதே விலையில் உங்களுக்கு அளிக்கிறது

NRCM-27-75TAM

ஜீவகாருண்யம் 25

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சங்கராசாரிய ஸ்வாமிகள்

'**நா**ம் எப்படி வாழ்கிறோமோ அப்படியே மற்றவர்களும் வாழ வேண்டும் என்று நினைப்பது உத்தமமான எண்ணம். ஆனால் எண்ணம் உத்தமமாயிருந்துவிட்டால் போதுமா? நாம் டாம்பீகமாக வாழ்க்கை நடத்திக் கொண்டு மற்றவர்களும் அப்படி இருக்க' வேண்டும் என்று ஆசைப்பட்டால் அது நடக்குமா? அப்படியே நடந்து, அமெரிக்கா மாதிரி எல்லோரும் 'லக்ஷுரியஸாக' வாழ முடிந்தால் அது நல்லதுதானா? லௌகிகமான சௌக்கியங்கள் ஜாஸ்தியாக ஆக ஆத்மா விருத்திக்கே வழியில்லாமல்தானே ஆகிறது? எத்தனை போட்டாலும் திருப்தியில்லாமல் கபளீகரம் பண்ணுகிற நெருப்பு மாதிரித்தான் இந்த ஆசை என்பதும். அது எவ்வளவு சௌகரியம் இருந்தாலும் திருப்திப்படாமல் இன்னும் புதிசு புதிசாகச் சௌக்கியங்களைத் தேடிக் கொண்டுதான் இருக்கும். அதிருப்தி, குற்றங்கள் இத்யாதியைத்தான் அமெரிக்காவில் பார்க்கிறோம். சௌக்கியம் என்று நினைக்கிற தேவைகளை விட்டால்தான் சாந்தி கிடைக்கும் என்று அங்கே புத்திசாலிகளாக இருக்கப்பட்டவர்கள் புரிந்து கொண்டுதான் தியானம், யோகம், பஜனை என்று கிளம்பியிருக்கிறார்கள்.

மநுஷ்யனின் ஆத்மாபிவிருத்திக்குப் பிரதிகூலமாக வெறும் லௌகிக ரீதியில் செய்கிற எந்த உபகாரமும் உபகாரமேயில்லை; அபகாரம்தான். எத்தனைக்கெத்தனை எளிமையாக வாழ்கிறோமோ அத்தனைக்கத்தனை ஆத்ம க்ஷேமம். ஆனதால் மற்றவர்கள் எளிய வாழ்க்கையில் இருக்கும்படியாகப் பண்ணுவதுதான் நிஜமான உபகாரம். இதை எப்படிப் பண்ணுவது? நாம் டாம்பீகமாக வாழ்ந்து கொண்டு அவர்களுக்கு உபதேசம் செய்தால் நடக்குமா? ஆகையால் [illegible] அப்படி எளிமையாக வாழ்ந்து [illegible] வேண்டும். ஆகையால், 'நாம் எப்படி வாழ்கிறோமோ, அப்படியே மற்றவர்களும் வாழ வேண்டும்' என்று நினைப்பதற்கு முந்தி, நாம் எப்படி வாழ வேண்டும் என்பதையும் தீர்மானம் பண்ணிக் கொள்ள வேண்டும். 'மற்றவர்கள் எல்லோரும் எப்படி வாழ முடியுமோ, எப்படி வாழ்ந்தால்தான் ஆத்மாபிவிருத்திக்கு நல்லதோ, அப்படித்தான் நாமும் வாழ வேண்டும்; அதாவது ரொம்ப ஸிம்பிளாக வாழ வேண்டும்' என்று முதலில் தீர்மானம் பண்ணிக் கொள்ள வேண்டும்.


வயிறு ரொம்பச் சாப்பாடு, மானத்தைக் காப்பாற்றத் துணி, இருப்பதற்கு ஒரு குச்சு வீடு — இம்மாதிரியான அடிப்படை (basic) தேவைகள் எல்லாருக்கும் பூர்த்தியாக வேண்டும். இதற்கு மேல், ஆசைக்கு மேல் ஆசை, தேவைக்கு மேல் தேவை என்று பறக்க வேண்டியதில்லை. அப்படி மற்றவர்களைப் பறக்காமல் இருக்கச் செய்வதற்காக நாமும் எளிமையாக வாழ வேண்டும். இது பெரிய பரோபகாரம்.

ஏழையோ, பணக்காரனோ எல்லார் குடும்பத்திலும் கல்யாணம் மாதிரியான சுப காரியங்கள், சாவு மாதிரியான அசுபகாரியங்கள் வருகின்றன. இவற்றுக்காக எவனும் கடன்படுகிற மாதிரி நாம் விட்டால் அது நமக்குப் பெரிய தோஷம். அவரவரும் தன்னாலானதை ஐந்தோ, பத்தோ ஏழைப்பட்ட பந்துக்களின் சுபாசுபகாரியங்களுக்கு உதவ வேண்டியது ஒரு பெரிய கடமை. இதை முன்னெல்லாம் சகஜமாகச் செய்து வந்தார்கள். 'பரோபகாரம்' என்று யாரோ மூன்றும் மனிதர்களுக்குச் செய்வதற்கு முன்னால், 'பந்துத்வ'த்தோடு நம்முடைய ஏழைப்பட்ட உறவினர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இரண்டு தலைமுறைக்கு முந்தி இதைச் சொல்ல வேண்டிய அவசியமே இருக்கவில்லை.

அப்போது 'கிழவர் பராமரிப்பு இல்லம்', 'விதவை விடுதி' என்றெல்லாம் வைக்க வேண்டிய அவசியமே இல்லாதிருந்ததற்கு என்ன காரணம்? பந்துக்களே இவர்களைப் பராமரித்து வந்ததுதான். அநேகமாக எல்லா வீடுகளிலும் ஓர் அத்தைப் பாட்டி, மூன்று தலைமுறைவிட்டு ஒரு மாமா தாத்தா என்கிற மாதிரி கிழங்கள் இருக்கும்! தற்காலத்தில் ரொம்பவும் பணக்காரர்களும்கூட வெறும் 'ஷோ'வாக பார்ட்டியும், ஃபீஸ்டும் கொடுக்கிறார்கள்; அல்லது பேப்பரில் போடுகிற மாதிரி டொனேஷன் கொடுக்கிறார்கள்: ஆனால் பந்துத்வத்தோடு தங்கள் குடும்பத்திலேயே வசதி இல்லாதவர்களைச் சம்ரக்ஷிப்பது என்பது இப்போது அநேகமாகப் போயே போய்விட்டது.

அவிபக்த குடும்ப முறை போனபின் அண்ணன் — தம்பி என்பதே போய்விட்டது. முன்பெல்லாம் இப்படி ஜாயிண்ட் ஃபாமிலியாக இருக்கும் போது, தாயார்—தகப்பனார், சிற்றப்பா — பெரியப்பா மார்கள், அவர்களுடைய பத்தினிகள், பிள்ளைகள் — மாட்டுப் பெண்கள் பேரக் குழந்தைகள் என்று ஒரு வீட்டிலேயே 20, 25 பேர் இருப்பார்கள். இவ்வளவு பேர் இருக்கிற போது, அநாதரவான தூர பந்துக்கள் நாலைந்து பேரைக்கூட வைத்துக் கொண்டு சோறு போடுவது ஒரு பாரமாகவே தெரியவில்லை. இப்போதோ அவனவனும் பெண்டாட்டியோடு கத்திரித்துக் கொண்டு தனிக் குடித்தனம் என்று போவதால், கூட ஒருத்தரை வைத்துக் கொள்வது என்றால்

தந்தையர்!



ஒரு பிரெஞ்சுக்காரர் பிரபல அமெரிக்க நாவலாசிரியரான மார்க் ட்வெயினிடம் குறும்பாக இப்படிச் சொன்னார்:

''அமெரிக்கர்களெல்லாம் தங்களுக்கு வேலை இல்லாத நேரத்தில் தங்கள் மூதாதையர்களை அறிந்து கொள்வதிலேயே காலத்தைக் கடத்துவார்கள்.''

இதைக் கேட்ட நகைச்சுவை மன்னர் மார்க் ட்வெயின் கூறினார்: ''நண்பரே இது பரவாயில்லை, ஆனால் பிரெஞ்சுக்காரர்களோ வேலை எதுவும் செய்யாத நேரங்களில் தங்கள் தந்தை யார் என்று அறிந்துகொள்வதிலேயே காலத்தைப் போக்குவர்!''

பிரெஞ்சு நண்பர் மறுபடியும் ஏன் பேசுகிறார்!

விஎஸ்வார்


கூடச் சுமையாகத் தெரிகிறது. எத்தனையோ ஆயிரம், பதினாயிரம் வருஷங்களாக இருந்து வந்த ஏற்பாடுகள் இந்த இரண்டு, மூன்று தலைமுறைகளில் வீணாகப் போய், இங்கிலீஷ் ஃபாஷன் வந்ததில், சூக்ஷ்மமான தர்மங்கள் எல்லாம் நசித்துப் போய்விட்டன.

முதலில் ஏழையான பந்துக்களைக் கவனிக்க வேண்டும். சுபாசுப காரியங்களுக்கு நாம் செலவழித்துக் கொண்டு போக வேண்டும் என்பதுகூட இல்லை. இந்தச் செலவையும் சேர்த்து அந்த வசதி இல்லாத உறவுக்காரனுக்கு அனுப்பி வைத்தால், அவனுக்கு எத்தனையோ உதவியாக இருக்கும். கல்யாணத்தில் நாம் பண்ணுகிற ஆடம்பரங்களையெல்லாம், 'வேஸ்ட்'களையெல்லாம் குறைக்க வேண்டும். இப்போது ஒரு கல்யாணம் என்றால் அதற்கு அவசியமான வைதிக தக்ஷிணைகளுக்குக் கொடுப்பதில்தான் கஞ்சம் பிடிக்கிறோம். பாட்டுக் கச்சேரி, டான்ஸ் கச்சேரி, நாயனம், பாண்ட், ஊர்வலம் என்று வேண்டாத விஷயங்களுக்கு வாரிவிடுகிறோம். வைதிகர்களுக்கு உபகாரம் செய்கிற எண்ணம் வளர வேண்டும். இது இல்லாததால்தான் அடுத்த தலைமுறைக்கு வைதிக காரியம் செய்து வைக்கவே ஆள் கிடைக்காத மாதிரிச் செய்திருக்கிறோம். வேத சம்பந்தமான காரியங்கள் லோகத்தில் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது இருந்து கொண்டிருக்கும்படி பண்ணுவதைவிட ஜன சமூகத்துக்குப் பெரிய பரோபகாரம் எதுவும் இல்லை.

ஒரு பக்கம் ஆடம்பரக் கல்யாணம், இன்னொரு பக்கம் கல்யாணத்துக்குப் பணம் இல்லை என்பதால் பெண்களை வேலைக்கு விடுவது, கடன்படுவது மாதிரியான கஷ்டங்கள் என்றிருப்பது கொஞ்சம்கூட நியாயமில்லை. பரம தரித்திரர்களும் சாஸ்திரப் பிரகாரம் சுபாசுபங்களைச் செய்ய நாம் உபகரிக்க வேண்டும். 'ஷோ' இல்லாமல் சாஸ்திரப்படி மட்டும் செய்வதற்கு நிறையச் செலவே இராது.

என் பரோபகார லிஸ்ட் நீண்டு கொண்டே வருகிறது. அதிலே ஒவ்வொரு 'லொகாலிடி'யிலும் பரம ஏழைகளும் சொற்ப வாடகையில் பெறுமாறு ஒரு கல்யாண மண்டபம், ஒரு அபர காரியஸ்தலம் உத்தரக்கிரியைகள் செய்யுமிடம் ஏற்படுத்துவதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். (தொடரும்)

அன்றும் இன்றும்



நேற்று நிறுவப்பட்டது ஜோதி யூனிபில்ட் பம்பு



இன்றே காணமுடிந்தது இன்ப நாள் இதனை


முன்னேற்றத்தின் இரகசியம்—

ஜோதி யூனிபில்ட் பம்பு

வெற்றி மிகு ஜோடி



ஜோதி
யூனிபில்ட்
பம்பு



ஜோதி
ஸ்டார்ட்டர்

ஆழ ஈர்ப்பு (டீப் ஸக்ஷன்) மூலம் செவ்வனே நீரிறைக்கும் திறன், அன்றாடப் பழுதுபார்ப்புத் தொல்லைக்குத் தீர்வு, மின்சாரச் செலவுகளிலே மிச்சம், நீடித்த ஆயுள்—இவை யாவும் ஜோதி யூனிபில்ட் பம்புகளிலே கிடைக்கும் முக்கிய நன்மைகள். இக் காரணத்தினால் தான் ஜோதி பம்பு காப்பியடிக்கப் படுகிறது. ஜோதி ஆராய்ச்சி நிலையத்தின் ஓயாத முயற்சிகளின் பயனாக, எப்போதுமே விவசாயிகள் இந்தப் பம்பையே கோருகின்றனர்.

ஜோதி லிமிடெட், பரோடா

ஹைட்ராலிக்ஸ் • எலக்ட்ரிகல்ஸ் • பவர் எலக்ட்ரானிக்ஸ்

everest/24r2/JY-tm

கிளை: எய்ர்லைன்ஸ் ஓட்டல், 177/179 மவுண்ட் ரோடு, சென்னை. போன்: 850 07.
விற்பனையாளர்கள்: வி. வி. & கோ., XXX/613, மகாத்மா காந்தி ரோடு, கொச்சி 682 016. ஆட்டோமேட்டிக் பம்ப் ஸ்பெஷலிஸ்ட்ஸ், நம்பர் 4, பாண்டி பஜார், தி. நகர், சென்னை 600 017; ஜயலட்சுமி டிரேடர்ஸ், நம்பர் 2, எர்ரபாலு செட்டி ஸ்ட்ரீட், சென்னை 600 001; ராஜம் & கோ., 61, சதி ரோடு, ஈரோடு; மேலக்கடை எலக்ட்ரிகல்ஸ், 215, மெயின் ரோடு, பெண்ணாடம் 606 105; ஆக்ட் ஏஜன்ஸீஸ், நம்பர் 8, நியூ கொழும்பு ஸ்டோர்ஸ், மாயூரம்; பெர்மியர் இண்டஸ்ட்ரீஸ், 80/81, செம்புதாஸ் ஸ்ட்ரீட், சென்னை 600 001; முருகன் ஆட்டோமேட்டிக்ஸ், காளியம்மன் கோயில் ஸ்ட்ரீட், உசிலம்பட்டி.

அவர்களுக்கு அப்பா வேண்டும்

போட்டிக் கதை: 7

சோம்பல் முறித்தவாறு சோபாவில் மறுபுறம் திரும்பி அமர்ந்தாள் லலிதா. காலை மணி பத்து ஆகியிருந்தும் இன்னமும் அவளுக்குக் காப்பிகூட வேண்டியிருக்கவில்லை. குழந்தைகள் ரவியும், ஜயந்தியும் இல்லாமல் நிமிடங்கள் யுகங்களாய் வளர்ந்தன. 'ஆயிற்று. இந்நேரம் மணி அண்ணா கல்யாணப் பெண்ணின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டிருப்பான்.

மதுரையில் கல்யாணம். நெருங்கிய சில உறவினர்களுக்கு மட்டும் அழைப்பு விடுத்து, வெகு எளிமையாய் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது திருமணம். லலிதாவும் வரவேண்டும் என்பதுதான் மணியின் ஆசை. இரண்டொரு முறை சொல்லியும் பார்த்தான். லலிதா கேட்கவில்லை. ''குழந்தைகளை வேணும்னு அழைச்சுண்டு போ, அண்ணா! நான் வரவில்லை'' என்று கூறி விட்டாள். அவள் மன நிலையை அறிந்து மணியும் வற்புறுத்தவில்லை.



எங்கெங்கோ அலைந்த நினைவுகளை இழுத்துக் கட்டி, வீட்டு வேலைகளில் ஈடுபட முயன்றாள் லலிதா. ஊஹூம். மனம் பிடிவாதமாய்ப் பழைய நினைவுகளிலேயே மெது நடை போட்டது. தன் கட்டுப்பாட்டை மீறிய மனத்தை அதன் பாதையிலேயே ஓட விட்டாள்.

பத்து வருடங்களுக்கு முன்னால் இதேபோல் ஒரு சுப நாளில் அமோகமாய் நடந்தது மணி, லலிதாவின் கல்யாணங்கள். ஒரே மேடையில் சுதாவின் கழுத்தில் மணியும், லலிதாவின் கழுத்தில் சுரேஷும் மங்கல வாத்தியம் முழங்கத் தாலி கட்டினார்கள். மணியும், சுதாவும் அழகிலே ஒருவரையொருவர் மிஞ்சினார்கள் என்றால், லலிதாவையும் சுரேஷையும் ஜோடியாய்ப் பார்த்தவர்கள் எல்லாரும், 'எங்கே தங்கள் கண்ணே பட்டுவிடுமோ' என்று பயந்தார்கள். அப்படியொரு ஜோடிப் பொருத்தம். பெங்களூரில் வேலை மணிக்கு. பானுவும், மீனுவும் பிறந்து சுதா—மணியின் இல்லறத்தை நல்லறமாக்கினார்கள். திருமணமானவுடன் கணவனோடு தனிக்குடித்தனம் நடத்த பம்பாய் சென்ற லலிதா எட்டு வருடங்கள் சுவர்க்கத்தில் இருந்தாள். ரவியும், ஜயந்தியும் வாழ்க்கையை இன்ப மயமாக்கினார்கள். இந்த எட்டு வருடங்களில் அவளும் சுரேஷும் விளையாட்டுக்காகக்கூடப் பிணங்கியதில்லை. இத்தனை சந்தோஷம் தெய்வத்துக்கே பொறுக்கவில்லையோ!

ஒரு நாள், எப்பொழுதும் போல் சிரித்த முகத்தோடு குழந்தைகளுக்கும், அவளுக்கும் 'டாடா' சொல்லிவிட்டு ஆபீஸ் சென்றான் சுரேஷ். அன்று மத்தியானம் மூன்று மணிக்கு ஆபீஸிலிருந்து போன் வந்தது. சுரேஷுக்குத் திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு நிலைமை சீரியஸாகி ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாக. அலறிப் புடைத்துக் கொண்டு டாக்ஸியில் ஆஸ்பத்திரிக்கு விரைந்த லலிதா, கணவனின் உடலோடு வீடு திரும்பினாள். தான் சுயப் பிரக்ஞை இழந்தது, குழந்தைகள் கதறியது, அலறிக் கொண்டு வந்த தாமு, நிலைமையைச் சமாளித்தது, அவன் கொடுத்த தந்தியின் பேரில் அம்மா அப்பா வந்து காரியங்களை முடித்துக் கொண்டு குழந்தைகளையும் தன்னையும் சென்னை அழைத்து வந்தது — எல்லாமே சென்னை வந்து சேர்ந்த பல நாட்களுக்குப் பிறகும் லலிதாவின் இதயத்தை அழுத்தின.

அவள் கணவனை இழந்த அதிர்ச்சியிலிருந்து ஓரளவு மீண்டபோது மூன்றாவது மகப் பேறுக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சுதா திரும்பவில்லை, குழந்தையும் தங்கவில்லை என்ற செய்தியைச் சுமந்து வந்தது மணியிடமிருந்து தந்தி. குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்தான் மணி. தாயை இழந்த குழந்தைகளைப் பார்த்த பொழுதெல்லாம் அழுதாள் லலிதா.

கல்யாணம் முடிந்து புதுப் பெண் வீட்டுக்கு வந்து நான்கு நாட்களாகி விட்டன.

மணிக்கு லீவு முடிந்துவிட்டது. நளினியையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு அன்று பெங்களூர் கிளம்ப விருக்கிறான். காரிலே மணியும், அருகிலே நளினியும் அவனை நெருக்கிக் கொண்டு பானுவும் மீனுவும்.... உற்சாகமாய்ச் சிரித்தபடியே கையாட்டி அவர்களுக்கு 'டாடா' சொல்லி அனுப்பிவிட்டு உள்ளே நுழைந்த போதுதான் ஜயந்தியைக் கவனித்தாள் லலிதா. அவள் கண்களிலே நீர். முகம் சிவந்து, உதடுகள் துடித்தன.

''ஜயந்திக் கண்ணு, என்னம்மா, என்ன ஆச்சு?'' என்று லலிதா பதறினாள். பின்னாலேயே அவள் அம்மாவும், அப்பாவும் குழந்தையை நெருங்கினர்.

ஜயந்தி விக்கினாள். ''பானுவுக்கும், மீனுவுக்கும் புதுசா ஒரு அம்மா கிடைச்சுட்டா. அப்பா, அம்மா, குழந்தைகள்னு அவா இப்ப ஒரு சந்தோஷ குடும்பம். ஆனால்...நானும்மா? பானுவுக்கும், மீனுவுக்கும் ஓர் அம்மா கிடைச்ச மாதிரி எனக்கும் ஓர் அப்பா....''

தேள் கொட்டினாற் போல் துடித்தாள் லலிதா. குழந்தையை மேலே பேசவிடாமல், அவள் கவனத்தை மாற்ற அவள் பட்டபாடு. ஊஹூம்... ஜயந்தி விம்மி அழ ஆரம்பித்தாள். ''அப்பா என்னைப் பெரியவளானதும் 'பாரின்' கூட்டிண்டு போறேன்னாளே, ஸ்கூட்டர் ஓட்ட, கார் ஓட்டக் கத்துக் குடுக்கிறேன்னாளே,' இப்ப எனக்கு யாருமே இல்லையேம்மா.'' லலிதா வெகு சிரமத்தோடு தன் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.


''ஜயந்திக் கண்ணு, உனக்கு என்ன வேணுமோ நான் தரேன், அழாதேம்மா'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டார் தாத்தா.

திடீரென்று வாசலில் டாக்ஸி வந்து நிற்கும் சத்தம். 'வாசலில் யார் என்று பார்' என்று குழந்தைகளை வாசலுக்கு அனுப்பிவிட்டு உள்ளே திரும்பினாள் லலிதா. அடுத்த நிமிடம் ரவியையும், ஜயந்தியையும் இரண்டு தோள்களிலும் ஏந்திக் கொண்டு உள்ளே நுழைந்தான். தாமு! லலிதாவிடமிருந்து ஒரு நிம்மதிப் பெருமூச்சு. ஆஜானுபாகுவான அவன் தோள்களில் குழந்தைகளைப் பார்த்தவுடனே ஒரு நிம்மதி.

சுரேஷின் ஆருயிர் நண்பன் தாமு. நண்பன் என்பதைவிட அவன் உயிரின் மறு பாதி எனலாம். பள்ளிப் பருவத்திலிருந்தே இருவரும் இணைபிரியா நண்பர்கள். கல்லூரிப் படிப்பையும் ஒன்றாய் முடித்துவிட்டு, ஒரே ஊரில், வெவ்வேறு கம்பெனிகளில் வேலையில் அமர்ந்தார்கள். சுரேஷுக்குத் திருமணம் ஆகும் வரை இருவரும் ஒரே அறையில் பிரும்மச்சாரி வாழ்க்கை. தன்னிடம் எவ்வளவு பேண்ட், ஷர்ட் இருக்கிறது என்றுகூட சுரேஷுக்குத் தெரியாது. அவன் துணிமணிகளை வண்ணானுக்குக் கொடுத்து வாங்குவதில் இருந்து, மாதா மாதம் அவன் சம்பளத்தில் இருந்து ஒரு பகுதியை வற்புறுத்தி அவனிடமிருந்து வாங்கி பாங்கியில் அவன் கணக்கில் போடுவது வரை, சுரேஷுக்கு ஒரு 'கார்டியனாக' இருந்தான் தாமு. கல்யாணம் ஆன பிறகும் நட்பு நீடித்தது. தாமு இல்லாமல் சுரேஷின் வீட்டில் ஒரு விசேஷமும்

மைதிலி





அப்படியா!

'வெனிஷியன் ப்ளைண்ட்' (Venetian Blinds) எனப்படும் ஜன்னல் திரைகளை வெனிஸ் நகரில் எப்படி அழைக்கிறார்கள்? 'பெர்ஷியன்' என்று அழைக்கிறார்கள்.

பேஜண்ட்-பாலி

நடக்காது. லலிதா வேடிக்கையாய்க் குறிப்பிடுவாள் சுரேஷிடம், 'தாமுதான் உங்கள் முதல் மனைவி' என்று.

சுரேஷ் அகால முடிவை எய்திய செய்தி அறிந்து அலறிக் கொண்டு வந்த தாமு, லலிதாவின் நிலைமையைப் பார்த்ததுமே தன் துக்கத்தை யெல்லாம் விழுங்கிவிட்டு, குழந்தைகளுக்கும், நிர்க்கதியாய் நின்ற லலிதாவுக்கும் ஆறுதல் கூறி, அவள் பெற்றோரை வரவழைத்து, காரியங்கள் முடிந்த பிறகு சென்னையில் கொண்டு விட்டுச் சென்றான். இது நடந்து இரண்டரை வருடங்கள் ஆகின்றன. இடையில் பல முறை வந்த தாமு இன்றும் வந்திருக்கிறான்.

லலிதாவின் அப்பா குழந்தைகளை அழைத்துக் கொண்டு 'வாக்கிங்' சென்று விட்டார். அம்மா சமையல் அறையில் வேலையாக இருந்தாள். தாமுவிடம் பேசிக் கொண்டிருந்தாள் லலிதா. எங்கெல்லாமோ சென்ற சம்பாஷணை, கடைசியில் தாமுவின் குடும்பத்தினரைச் சுற்றி வந்தது.

''தங்கைகளுக்கெல்லாம் கல்யாணமாகி விட்டது. தம்பிகளும் செட்டில் ஆகிவிட்டார்கள். பின்னே இன்னும் எதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறீர்களாம்? எப்போது எங்களுக்குக் கல்யாணச் சாப்பாடு?'' சுவாதீனமாய்ச் சிரித்துக் கொண்டே கேட்டாள் லலிதா.

''என்ன பதிலையே காணோமே!'' என்று உற்சாகமாய்ச் சீண்டினாள்.

பிறகுதான் ஏன் கேட்டோம் என்று வருந்தினாள்.

ஒரு முறை அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, தலையைத் தாழ்த்திக் கொண்டான் தாமு. பிறகு தலையை நிமிர்த்தி அவள் கண்களை உற்று நோக்கிவிட்டுச் சிவந்து போன தன் முகத்தைக் கைக்குட்டையால் அழுந்தத் துடைத்தவாறு சொன்னான்: ''உனக்காகத்தான் காத்திருக்கிறேன், லலிதா!''

ஆயிரம் தேள்கள் ஒன்றாய்க் கொட்டியது போல் துடித்துக்கொண்டு எழுந்தாள் லலிதா. ''என்ன... என்ன வார்த்தை சொன்னீர்கள், தாமு!'' அதிர்ச்சியில் மேலே பேச முடியாமல் அவள் தொண்டையை அடைத்தது. உடல் ஆடியது. கைகள் வாசற்புறம் நோக்கி நீண்டன. ''போய் விடுங்கள், தாமு!'' என்றாள் லலிதா.

தாமு குறுக்கிட்டான். ''ஒரே ஒரு வார்த்தை லலிதா. எனக்குக் காதல்னா என்னன்னு தெரியாது. பிரதிபலன் கருதாமல் ஒருத்தரை நேசிக்கிறதும், அந்த ஒருத்தரின் நலனுக்காக, சந்தோஷத்துக்காக உயிரையும் கொடுக்கத் தயாராய் இருக்கிறதும்தான் காதல்னா, நான் சுரேஷைக் காதலிச்சேன். உன்னையும் இந்தக் குழந்தைகளையும் மனசார நேசிக்கிறேன்.'' — நடுவிலே பேச முயன்ற லலிதாவைப் பேச விடாமல் மேலே தொடர்ந்தான் தாமு. ''இந்தக் குழந்தைகளைப் பற்றிச் சுரேஷ் எத்தனை கனவுகள் கண்டான்னு எனக்குத் தெரியும், லலிதா. அவன் கனவுகளை நனவாக்கி, உன் முகம் வாடாமல் பார்த்துக்கிறதுதான் வாழ்க்கையில் என் ஒரே லட்சியம்!'' தாமு போய் விட்டான்.

அன்றிரவெல்லாம் லலிதா தூங்கவில்லை. இப்படி ஓர் அபிப்பிராயமா தாமுவுக்கு? தன்னிடம் இப்படி ஒரு கேள்வி கேட்க அவனுக்கு என்ன தைரியம்? இந்த இரண்டரை வருடங்களில் எத்தனையோ முறை அவள் வீட்டுக்கு வந்திருக்கிறான் தாமு. குழந்தைகளைப் பார்க், கடற்கரை, மியூசியம், மிருகக்காட்சிச் சாலை என்று எத்தனையோ இடங்களுக்கு அழைத்துச் சென்றிருக்கிறான். ஏன் சில சமயம் அவள்கூட அவர்களோடு சென்றிருக்கிறாள். அப்பொழுதெல்லாம் தாமுவுக்கு இப்படி ஓர் எண்ணம் இருப்பதாக அவளுக்குச் சம்சயம்கூடத் தட்டியதில்லையே! எத்தனை கண்ணியமாக நடந்து கொள்வான்!

மறு நாள் காலை குழந்தைகளைப் பள்ளிக்குத் தயார் செய்து அனுப்பிவிட்டு, வழக்கம்போல் அவள் தையல் வகுப்புக்குக் கிளம்பும் சமயம், ஹாலில் பேச்சுக் குரல் கேட்டு நின்றாள். முதலில் தாமுவின் குரல். அடுத்து அவள் அப்பாவின் குரல் தெளிவாகக் கேட்டது.

''நீ சொல்றது எனக்குப் புரியுது, தாமு! நீ லலிதா பேரிலும், குழந்தைகளிடமும் காட்டற பரிசுத்தமான அன்பை, பாசத்தை நானும் இந்த இரண்டு வருஷங்களா கவனிச்சுண்டுதான் வரேன். குழந்தைகளோட மன வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்துக்கும், உன்னுடைய உறவும், அன்பும் எந்த அளவுக்கு உதவும்னு எனக்குப் புரியறது. ஆனால் லலிதாவின் நிலைமையையும் புரிஞ்சுக்கணும், இல்லையா? வாழத் துடிக்கிற ஓர் இளம் விதவை மீது கட்டாயமா வைதவ்யத்தைத் திணிக்கிறது எவ்வளவு கொடுமையோ, அது மாதிரி கணவனின் நினைவிலேயே வாழ்நாளைக் கழிக்க விரும்பும் பெண்ணை மறுமணம் செய்துக்கச் சொல்றதும் கொடுமைதான். எப்படி இருந்தாலும் உன் மனத் திண்மையை நான் பாராட்டுகிறேன். இந்த வீட்டுக்கு ஒரு நண்பனாக நீ எப்பொழுதும் வரலாம்.''

அடுத்துத் தாமுவின் கரகரத்த குரல்.

''சார்! ஒரு நல்ல நண்பனாக மட்டும் இருந்து சுரேஷின் குழந்தைகளையும், லலிதாவையும் தொடர்ந்து பாதுகாக்க, அவர்களுக்காக எதையும் செய்ய என்னால் முடியும். ஆனால் சமூகம் அதை ஒத்துக்காது. நம்ம சமூகத்தைப் பொறுத்தவரை ஒரு பெண் தனது கணவனை அல்லது தந்தையை அல்லது கூடப் பிறந்த சகோதரனைத்தான் தனது பாதுகாவலனாக ஏத்துக்க முடியும். சமூகத்தின் இந்த விதியை மீற எனக்குத் துணிவில்லை. தவிரவும் லலிதாவைத் தவிர இன்னொரு

பெண்ணை என் மனசிலே ஏத்துக்க முடியாது. அவளுக்காகக் காலம் முழுவதும் நான் காத்திருக்கத் தயார். அவள் எப்போ தன் முடிவை எனக்குச் சாதகமா மாத்திண்டாலும் எனக்கு அதைத் தெரியப்படுத்தட்டும். நான் வரேன்'' தாமு போய்விட்டான்.

சரசரவென்று மாடியேறிப் படுக்கையில் விழுந்தாள் லலிதா. சொல்லத் தெரியாமல் ஓர் அழுகை குமுறிக் கொண்டு வந்தது. அந்தத் துக்கத்தைக் கலைக்க வீட்டில் யாருக்குமே துணிவில்லை. அழுது அழுது ஓய்ந்தபின், ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாய் முகத்தைக் கழுவிக் கொண்டு ஒரு ஸூட்கேசில் தன்னுடைய, குழந்தைகளுடைய துணிமணிகளை அவசியமான சாமான்களைத் திணித்தாள். பள்ளியிலிருந்து திரும்பிய குழந்தைகளையும் தயார் செய்துவிட்டு, ஹாலில் இருந்த தந்தையை நெருங்கினாள்.

''குழந்தைகளை அழைச்சுண்டு திருச்சிக்குப் போகலாம்னு இருக்கேம்பா'' என்றாள் லலிதா. திருச்சியில்தான் சுரேஷின் அப்பா, அம்மா இருந்தார்கள்.

''திருச்சிக்கா? ஏம்மா? என்ன விசேஷம்? ஏதாவது கடிதாசு வந்ததா?'' அவள் அப்பாவின் குரலில் ஆதங்கம்.

''இல்லேயப்பா. கொஞ்ச நாட்கள் அவர் மனுஷாளோட தங்கினால் மனசுக்கு நிம்மதியாய் இருக்கும்னு தோணறது.'' லலிதா விம்மலை அடக்க உதட்டைக் கடித்துக் கொண்டாள். அவள் தந்தை பதில் பேசவில்லை.

திருச்சிக்கு வந்து நான்கு நாட்களாயின. சுரேஷின் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் லலிதாவையும், பேரக் குழந்தைகளையும் பார்த்ததில் சந்தோஷம். பாட்டி ரவியையும், ஜயந்தியையும் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு, ''தங்க விக்கிரகங்களாட்டமா இவாளை விட்டுவிட்டுப் போக அந்தப் பாவிக்கு எப்படி மனசு வந்ததோ!'' என்று புலம்பினாள். ரவியின் முக ஜாடையில், பேச்சில், சிரிப்பில், நடையில் மறைந்து போன தம் மகனைப் பார்த்து மகிழ்ந்தார் அவன் தாத்தா. குழந்தைகளுக்கு என்னமோ இங்கே ஒட்டவில்லை. பாட்டி வாய்க்கு வாய், ''ஐயோ, பாவம்! தகப்பன் இல்லாத குழந்தை'' என்பதும், ''பத்து வயசுக்குள்ளே தகப்பனை முழுங்கிட்டேயேடா, பாவி!'' என்று கழிவிரக்கத்தோடு புலம்புவதும் ரவிக்குப் பிடிக்கவில்லை. அவன் பெரும்பாலும் வீட்டில் இருப்பதில்லை. சதா நண்பர்களோடு வெளியில் விளையாட்டுத்தான். ஜயந்தி சொல்லத் தெரியாத 'அப்பா' ஏக்கத்தில் வாடுவது லலிதாவுக்குப் புரிந்தது.

அன்று தாமுவிடமிருந்து லலிதாவுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. குழந்தைகளின் நலன் விசாரித்து அவன் கடிதம் எழுதுவதும், அவள் பதில் எழுதுவதும் சகஜம்தான். இம்முறை ஏனோ அவன் கடிதத்தைப் படிக்க அவள் மனம் தயங்கியது. வழக்கம் போலக் குழந்தைகளின் நலனை விசாரித்துக் கடிதத்தை இப்படி முடித்திருந்தான் தாமு:

''....குழந்தைகளுக்கு ஒரு தந்தையின் பாதுகாப்பு தேவை என்பதை நீ எப்போது உணர்கிறாயோ, அப்பொழுது எனக்கு ஒரு வரி எழுது. ஓடோடி வருகிறேன்.'' –தாமு.



பு(கி)ல்லாடி

அகமதாபாத்தில் ஒரு சுவாரசியமான நிகழ்ச்சியைப் பார்க்கலாம். அங்கு ஆண்களும் பெண்களும் வாரத்தில் ஒரு நாள் பசுவுக்குத் தானம் கொடுக்கிறார்கள். இதை 'கோதானம்' என்கிறார்கள்.

பசுவுக்குப் புல், பிற தீவனங்களை வாங்கிப் போடுவது அவர்கள் வழக்கம். இதைப் பயன்படுத்திக் கொண்டு ஒருவர், ஒரு வண்டி நிறையப் புல் கொண்டு வருகிறார். அதைத் தானம் கொடுப்பவர்களுக்கு விற்கிறார். கூடவே, தான் கட்டி வந்திருக்கும் பத்துப் பசுக்களுக்கு ஆகாரமாகப் போடச் சொல்லிக் கேட்கிறார். எப்படி சாமர்த்தியம்! வியாபாரத்துக்கு வியாபாரம்; பசுவுக்குத் தீனிக்குத் தீனி!

-ராமு

தாமுவின் மனத்தை நோக அடிக்காமல் எப்படிப் பதில் எழுதலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த சமயம், கூடத்திலே பெரிய அழுகை சத்தம். தூங்கி எழுந்ததில் இருந்தே பிடிவாதம் பிடித்து அழுது கொண்டிருந்தாள் ஜயந்தி. பால், காப்பி, ஓவல், டிபன் எதுவும் வேண்டாம் என்றாள். பின் என்னதான் வேண்டும்? பாட்டியும் தாத்தாவும் எவ்வளவோ சமாதானப்படுத்தியும், அழுகை அதிகமாயிற்றே தவிர குறையவில்லை. கடைசியில் பாட்டி பொறுமை இழந்தாள். ''தகப்பன் இல்லாமல் வளருகிற பொண்ணு சண்டித்தனம் பண்ணாமல் இருக்குமா? விதவை வளர்த்த பிள்ளையும்....'' பாட்டி முடிக்கவில்லை.

''பாட்டி, நிறுத்து. பேசாதே!'' ரவியின் கூக்குரல்.

வாசற்படியில் ஆக்ரோஷமாய் நின்று கொண்டிருந்தான் ரவி. ''என்னையும் ஜயந்தியையும் என்ன வேணும்னு சொல்லு. எங்க அம்மாவைப் பத்தி அநாவசியமாப் பேசாதே!''

''பார்த்தேளா! எப்படிப் பேசறான்னு. எல்லாம் அம்மா தர்ற செல்லம். அப்பன்காரன் கண்டிப்பு இருந்தா...'' லலிதா மேலே அங்கே நிற்காமல் குழந்தைகளை இழுத்துக் கொண்டு உள்ளே ஓடினாள். வெகு நேரம் வரை அவள் விம்மல் ஓயவில்லை. ரவி தேம்பினான்: ''என்னை மன்னிச்சுடும்மா. ஜயந்தி அப்பாவுக்காக ஏங்கறதைப் பாட்டி புரிஞ்சுக்காமல் அவளைக் கோவிச்சுண்டதும் எனக்குத் தாங்க முடியல்லேயம்மா. அப்பா தவறிப் போனது எங்கள் தப்பாம்மா? பகவான் ஏனம்மா எங்களுக்கு இவ்வளவு பெரிய தண்டனையைக் கொடுத்துட்டார்?''

லலிதா அவன் முதுகை மெல்லத் தடவி ஆசுவாசப்படுத்தினாள். குழந்தைகளைச் சமாதானப்படுத்திய பின்னர், தாமுவுக்குத் தனது சாதகமான பதிலைத் தெரிவித்து, ஒரு வரி எழுதினாள். அவள் மனத்தில் ஒரு நிம்மதி. கடிதத்தைப் படித்தவுடன் தாமு ஓடோடி வருவான். அந்த வலுவான கரங்களின் பாதுகாப்புடன் குழந்தைகளுடன் அவள் புது வாழ்வு தொடங்குவாள்.


லக்ஷ்மியின்
ப்ரீதி
ஸெமி :புல்வாயில்
புடவைகள்
கண்கவர் வண்ணங்களில்
உங்கள் மனதுக்குகந்த
டிசைன்களில் கிடைக்கிறது
தரமான பஞ்சு கொண்டு
செய்யப்பட்டவை
தி
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்
கன்னிப் பூக்களின் கவின்மிகு தோற்றம்
VSK.LMC.P.785 TM.

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

அத்தியாயம் 6

கலைத் திருநாள்

மாமல்லபுரத்தில் சக்கரவர்த்தி மூன்று தினங்கள் தங்கியிருந்தார். அந்த மூன்று நாட்களும் அந்நகரம் ஆனந்த கோலாகலத்தில் மூழ்கிக் கிடந்தது.

முதல் நாள் பட்டணப் பிரவேச ஊர்வலம் வந்தது. சக்கரவர்த்தியையும் அவருடைய திருமகளையும் மாமல்லபுர வாசிகள் அவரவர்களுடைய வீட்டு வாசலில் தரிசித்து உபசரித்து மகிழ்ந்தார்கள்.

மறு நாள் சரஸ்வதி பூஜையன்று காலையில் நகரவாசிகள் தத்தம் வீடுகளில் வாணி பூஜை நடத்தினார்கள். பிற்பகலிலும் சாயங்காலத்திலும் பொது இடங்களில் கலைமகளின் திருநாளைக் கொண்டாடினார்கள். கோயில்கள், மடாலயங்கள், கலா மண்டபங்கள், வித்தியாசாலைகள் எல்லாம் அமோகமான அலங்காரங்களுடன் விளங்கின.

அன்று சக்கரவர்த்தியும் குந்தவி தேவியும் சிவன் கோயில்களுக்கும் விஷ்ணு ஆலயங்களுக்கும் சென்று சுவாமி தரிசனம் செய்து, அர்ச்சகர்களுக்குச் சன்மானம் அளித்தார்கள். கலைக்கூடங்களுக்கும், வித்தியாசாலைகளுக்கும் விஜயம் செய்து, ஆசாரியார்களுக்குப் பொன்னும் புது வஸ்திரங்களும் பரிசளித்தார்கள். அவர்கள் நகரில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போகும்போதெல்லாம் வீதியில் ஜனங்கள் கும்பல் கும்பலாக நின்று பலவித வாழ்த்தொலிகளினால் தங்களுடைய குதூகலத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஆனால், மாமல்லபுர வாசிகளுடைய குதூகலத்தின் முழு அளவையும் மறு நாள் விஜயதசமியன்றுதான் பார்க்கக் கூடியதாயிருந்தது. அன்று திருவிழா நகருக்கு வெளியே நடந்தது.

மாமல்லபுரத்துக்குத் தெற்கே நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் பரவி நின்ற சிறு சிறு குன்றுகளும் பாறைகளும் அன்று அற்புதமான தோற்றம் கொண்டு விளங்கின. பாறைகளின் சுவர்களிலெல்லாம் விதம் விதமான வர்ண வேறுபாடுகளுடன் புராணக் கதைகள் சித்திரிக்கப்பட்டிருந்தன. ஒரு விசாலமான பாறையிலே, நந்த கோகுலத்தில் பால கோபாலன் செய்த லீலைகள், பூதனை சம்ஹாரம் முதல் காளிங்கநர்த்தனம் வரையில் வெகு அழகாகச் சித்திரிக்கப்பட்டிருந்தன. தயிர் கடைந்து கொண்டிருந்த யசோதையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு வெண்ணெய் வேண்டும் என்று கண்ணன் கெஞ்சிக் கொண்டிருந்த சித்திரத்தைப் பார்த்தவண்ணமே வாழ்நாளைக் கழித்துவிடலாம் என்று தோன்றியது.

இரு பிளவாகப் பிளந்திருந்த இன்னொரு பாறையில் ஆகாச கங்கையைப் பூமிக்குக் கொண்டு வருவதற்காகப் பகீரதன் கடும் தவம் செய்த காட்சி சித்திரிக்கப்பட்டிருந்தது. அவனுடைய தவமகிமையினால் கவரப்பட்டுத் தேவர்கள் முனிவர்கள் எல்லோரும் வந்து இருபுறமும் நிற்கிறார்கள். அவர்களுடைய முகங்களிலே வியப்பும் பக்தியும் காணப்படுகின்றன. இந்த ஒப்பற்ற சித்திரக் காட்சியை எழுதிய ஓவியக்காரன் நகைச்சுவை நிரம்ப உள்ளவனாகவும் இருந்திருக்க வேண்டும். ஏனெனில், ஒரு மூலையில் கண்ணை மூடிக் கொண்டு தவம் செய்வதாகப் பாசாங்கு செய்த ஒரு பூனையின் உருவத்தையும் அவன் எழுதியிருந்தான்.

இந்த மாதிரி எத்தனையோ அற்புதச் சித்திரக் காட்சிகள் ஒவ்வொரு பாறை முகப்பிலும் காணப்பட்டன. இந்தக்




காட்சிகளைப் பார்த்துக் கொண்டு ஸ்திரீகளும் புருஷர்களும் சிறுவர் சிறுமிகளும் கும்பல் கும்பலாக அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் பட்டுப் பட்டாடைகளை அணிந்து, திவ்விய ஆபரணங்களைப் பூண்டிருந்தார்கள். ஸ்திரீகள் கூந்தலில் மலர் சூடியிருந்தார்கள். புருஷர்கள் கழுத்தில் பூமாலைகளை அணிந்திருந்தார்கள். எங்கே பார்த்தாலும் ஒரே கோலாகலமாகவும் குதூகலமாகவும் இருந்தது.

ஜனங்களின் குதூகலத்தை அதிகப்படுத்துவதற்குச் சித்திரக் காட்சிகளைத் தவிர இன்னும் பல சாதனங்களும் அங்கேயிருந்தன.


ஆங்காங்கு வாழை மரங்களாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட சிறு சிறு பந்தல்கள் காணப்பட்டன. அந்தப் பந்தல்களில் இசை விருந்துகள் நடந்து கொண்டிருந்தன. ஒரு பந்தலிலிருந்து வீணையின் ஒலி எழுந்தது. இன்னொரு பந்தலிலிருந்து குழலோசை வந்து கொண்டிருந்தது.





வேறொரு பந்தலில் வேதியர்கள் ஸாமகானம் செய்து கொண்டிருந்தார்கள். மற்றொரு பந்தலில் ஓர் இசைப் புலவர் அப்பர்பெருமானின் தேவாரப் பதிகங்களைக் கல்லும் கனியப் பாடிக் கொண்டிருந்தார்.

ஜனங்கள் அவரவர்களுக்கு இஷ்டமான இடத்திலே போய் நின்று சித்திரக் காட்சிகளையும், இசை விருந்துகளையும் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப் பந்தல்களிலும் கூட்டத்துக்குக் குறைவில்லை. அவல் பொரியும் சர்க்கரையும் பானகமும் நீர் மோரும் வந்தவர்களுக்கெல்லாம் உபசரிப்புடன் வழங்கப்பட்டன.



இவ்விதம் கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே ஜனசமுத்திரமாய்த் தோன்றியதாயினும், அந்த ஜனத்திரளுக்கு மத்தியில் ஓரிடத்தில் மிகவும் நெருங்கிய ஜனக்கூட்டம் காணப்பட்டது. இக்கூட்டம் ஒரே இடத்தில் நிலைத்து நில்லாமல் போய்க்கொண்டிருந்தது. அந்தக் காட்சியானது சிறு சிறு அலைகள் எழுந்து விழுந்து கொண்டிருக்கும் சமுத்திரத்தில் ஒரே ஒரு பெரிய அலை மட்டும் தொடர்ச்சியாகப் போய்க் கொண்டிருந்தது போல் தோன்றியது. இந்தப் பெரிய அலைக்குக் காரணமாயிருந்தவர்கள், சக்கரவர்த்தியும் அவருடைய செல்வப் புதல்வியும்தான். நரசிம்மவர்மர் உயர்ந்த ஜாதிப் புரவி ஒன்றின் மேல் வீற்றிருந்தார். குந்தவி தேவியோ பல்லக்கில் இருந்தாள். இவர்களுக்கு முன்னாலும் பின்னாலும் கூட்டத்தை விலக்கி வழி செய்வதற்காக ஒரு சில வீரர்கள் மட்டுமே

சென்றார்கள். அவர்களுக்குச் சற்று முன்னால், சக்கரவர்த்தியின் வருகையை அறிவிப்பதற்காக, ஒரு பெரிய ரிஷபத்தின் மேல் முரசு வைத்து அடித்துக் கொண்டு போனார்கள்.

ஜனத் திரளுக்கு இடையே சென்று கொண்டிருந்த இந்த ஊர்வலம் ஆங்காங்கு நின்று நின்று போக வேண்டியதா யிருந்தது. சித்திரக் காட்சிகளைப் பார்ப்பதற்காகச் சக்கரவர்த்தி நின்ற இடங்களில் எல்லாம் அவர் மேலும் குந்தவி தேவியின் மேலும் பூமாரி பொழிந்தார்கள். நறுமணம் பொருந்திய பனி நீரை இறைத்தார்கள். சந்தனக் குழம்பை அள்ளித் தெளித்தார்கள். ''ஜய விஜயீ பவ!'' என்றும், ''தர்ம ராஜாதி ராஜர் வாழ்க!'' ''திரிபுவன சக்கரவர்த்தி வாழ்க!'' ''நரசிம்ம பல்லவேந்திரர்வாழ்க!'' ''மாமல்ல மன்னர் வாழ்க!'' என்றும் கோஷித்தார்கள்.

சக்கரவர்த்தி ஒவ்வொரு சித்திரக் காட்சியையும் விசேஷ சிரத்தையுடன் பார்வையிட்டு, ஆங்காங்கு பயபக்தியுடன் நின்று கொண்டிருந்த ஓவியக்காரர்களிடமும், சிற்பக் கலைஞர்களிடமும் தமது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு வந்தார்.



இவ்விதம் சுற்றிப் பார்த்துக் கொண்டு கடைசியாக ஊர்வலம் துர்க்கை ஆலயத்தண்டை வந்து சேர்ந்தது. இந்தத் துர்க்கை ஆலயம் மகேந்திர வர்மரின் காலத்திலே குன்றில் குடைந்து நிர்மாணித்தது. திருப்பணி வேலை இடையில் தடைப்பட்டுப் பூர்த்தியாகாமல் இருந்தது. அன்று நடந்த கோலாகலமான விழாக் கொண்டாட்டத்தில் இந்தத் துர்க்கை ஆலயந்தான் நடுநாயகமாயிருந்தது. அந்தப் பாறைக் கோயிலுக்கு எதிரே மிகவும் விஸ்தாரமான பந்தல் போடப்பட்டிருந்தது. அந்தப் பந்தலுக்கு உள்ளேயிருந்து அண்ணாந்து பார்த்தால் அமாவாசையன்று நள்ளிரவில் துல்லியமான ஆகாயத்தைப் பார்க்கிறோமோ? — என்ற பிரமை உண்டாகும். அவ்விதம் பிரகாசமான நட்சத்திரங்களைப் போல் ஜொலித்த எண் கோணப் பொட்டுக்கள் அமைந்த நீலப் பட்டாடையினால் மேல் விதானம் கட்டியிருந்தார்கள். பந்தலின் தூண்களில் விதம் விதமான வர்ணப் பட்டாடைகளைச் சுற்றியிருந்தார்கள். பந்தலுக்கு மேலே வரிசை வரிசையாகச் சிங்கக் கொடிகள் மாலைக் கடற்காற்றில் அசைந்து ஆடிக் கொண்டிருந்தன. பந்தலின் விளிம்புகளில் இளந் தென்னங் குருத்துக்களினாலான தோரணங்கள் தொங்கி ஆடிக் கொண்டிருந்தன.

பந்தலின் மத்தியில், தேவியின் சந்நதிக்கு எதிரே, சக்கரவர்த்திக்கும் அவருடைய புதல்விக்கும் இரண்டு அழகிய சிம்மாசனங்களும், அவற்றைச் சுற்றிலும் வரிசை வரிசையாக இன்னும் பல ஆசனங்களும் அமைக்கப் பட்டிருந்தன. புலிகேசியின் படையெடுப்பினால் தடைப்பட்டுப் போன சிற்பத் திருப்பணியை இந்தத் துர்க்காதேவியின் கோயிலில் விஜயதசமி தினத்தில் மீண்டும் தொடங்குவதாக ஏற்பாடாகி இருந்தது. சக்கரவர்த்தி வருவதற்கு நெடு நேரத்துக்கு முன்னமேயே பந்தலில் மந்திரி மண்டலத்தாரும், மற்ற அதிகாரிகளும் வந்து அவரவர்களுக்குரிய ஆசனங்களில் அமர்ந்து விட்டார்கள். சக்கரவர்த்தியும் குந்தவி தேவியும் பந்தலுக்குள் வந்ததும் சபையினர் அனைவரும் எழுந்து நின்றதுடன், ஜய கோஷங்களும் வாழ்த்தொலிகளும் வாத்திய முழக்கங்களும் வானை அளாவி எழுந்தன.

(தொடரும்)



செஸ் அற்புதங்கள்!

■ 1945-ல் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் ரேடியோ தொடர்பு மூலமே செஸ் பந்தயம் நடந்தது. இது முடிந்ததும் கிராண்ட் மாஸ்டர் பைன் கண்களை மூடியபடியே நான்கு செஸ் பந்தயங்கள் ஆடினார். ஒரு நகர்த்தலுக்குப் பத்து செகண்டுகள் எடுத்துக் கொண்டார். பைன் நான்கு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றார்.

■ 1828 ல் ஹைதராபாத்துக்கும், சென்னைக்கும் இடையே யானையின் முதுகில் செஸ் காய்கள் நகர்த்திப் பந்தயம் நடந்ததாம்!

■ முதன் முதலில் இந்தியாவுக்குக் கிராண்ட் மாஸ்டர் பதவிப் பெற்றுத் தந்தவர் செஸ் விற்பன்னர் மீர் சுல்தான் கான்.

■ நீண்ட நேர செஸ் ஆட்டம் ரிகார்டு இரு ரஷ்ய ஆட்டக்காரர்களால் ஏற்படுத்தப்பட்டது. 1945 ல் பாகுவில் மகாகோனேவும், செக்கோவும் நான்கு நாட்கள் தொடர்ந்து ஆடினார்கள். கடைசியில் 171-வது நகர்த்தலில் கிடைத்தது 'டிரா'!

■ செஸ் கிராண்ட் மாஸ்டர் கபப்ளாங்கா 1918 லிருந்து 1925 வரையில் நடைபெற்ற பந்தயங்களில் ஒரே ஒரு பந்தயத்தில் மட்டுமே தோல்வி பெற்றார். எந்த கிராண்ட் மாஸ்டரும் இந்தச் சாதனையைக் கண்டதில்லை!

■ ஒரு சிறுவன் செஸ் பார்வையாளரை அணுகினான். ''ஆட்டோகிராஃப்'' என்றான். அந்தப் பார்வையாளர், ''நான் செஸ் ஆட்டக்காரர் இல்லை, எந்தத் துறையிலும் சிறந்தவன் இல்லை!'' என்று மறுத்தார். அந்தப் பையன் சொன்னான்: ''செஸ் கிராண்ட் மாஸ்டர் கபப்ளாங்காவோடு நீங்கள் உரையாடியதைக்கண்டேனே! அதுபோதும்!''

■ ஜெர்மன் மொழியில் ''செஸ் பார்வையாளர் பந்தயங்களின் போது எப்படி நடந்து கொள்வது?'' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் வெளியாயிற்று. எல்லாப் பக்கங்களும் காலியாக இருந்தன. கடைசிப் பக்கத்தில் மட்டும் நான்கு வார்த்தைகள் காணப்பட்டன! ''உங்கள் வாயை மூடிக் கொண்டிருங்கள்!''

ஆதாரம்- தமிழ்நாடு செஸ் கழகம் வெளியிட்டுள்ள மலர்

[படம்: நுங்கம்பாக்கம் நகரசபை ஸ்டேடியத்தில் நடைபெற்ற பில்லாரா கோப்பை செஸ் பந்தயத்தில் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த முகம்மது நூரானள், பில்லாரா கோப்பையும் பரிசுத் தொகை நாலாயிரமும் பெற்றார்.]

- குன்றிமணி

பிரச்னைகள் தீர

ஸ்டேன்ஸ்டயர்



ஸ்டேன்ஸ் டயர் ரீட்ரெடுகள் மிகவும் நம்பகமானவை.

ஸ்டேன்ஸ் டயர், புகழ் வாய்ந்த டயர்ஸோல்ஸ் பிரத்தியேக அம்சங்களை வழங்குகிறது — தன்னிகரற்ற நீண்ட உழைப்பு.

ஸ்டேன்ஸ் டயர் சிக்கனமானதும் கூட — ஒரு டயரை பலமுறை ரீடிரெட் செய்ய, கூடுதல் வாய்ப்பு— மிகக்

குறைவான செலவில் பல்லாயிரம் மைல்கள்.

தாமதமின்றி, சேவை பெற உடனே அணுகவும்.

STANESTYRE

ஸ்டேன்ஸ்டயர்

அண்டு ரப்பர் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்

திருச்சி ரோடு, கோயமுத்தூர்

தொழிற்சாலைகள்:—

சென்னை, வேலூர், திருச்சி, சேலம், மதுரை, தூத்துக்குடி, பெங்களூர், மங்களூர், விஜயவாடா, செகந்திராபாத், எர்ணுகுளம், கோட்டயம், கன்னிக்கோட்டை, திருச்சூர்.

MAC (B) ST-1/75


தரம்
நாடுவோர்
தவறாமல்
நாடுவது
ஆனந்தம்
நல்லெண்ணெய்
அழகிய பாலித்தீன்
கேன்களில் அவரவர்
தேவைக்கேற்ப
ஆனந்தம்
V.V.V. & CO., MADRAS 600 012
PHONE 664741

சக்தி பிறக்குது மூச்சினிலே!



"காணி நிலம் வேண்டும் — பராசக்தி
 காணி நிலம் வேண்டும் — அங்கு
தூணில் அழகியதாய் — நன்மாடங்கள்
 துய்ய நிறத்தினதாய் — அந்தக்
காணி நிலத்திடையே — ஓர் மாளிகை
 கட்டித் தரவேண்டும்....
. . . .
முத்துச் சுடர் போலே — நிலாவொளி
 முன்பு வரவேணும்........
 —என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே — நன்றாயிளம்
 தென்றல் வரவேணும்...."

என்ற மகா கவி பாரதியாரின் வாக்கை நிதர்சனமாகக் கண் முன்னால் காணும் வாய்ப்பு பல நூறு மக்களுக்கு 29-9-76 அன்று ராஜாஜி மண்டபத்தில் கிடைத்தது. பாரதியின் கவிதைகளைப் படித்தவர்களுக்கு அவரை நேரில் காணமுடியவில்லையே என்ற ஏக்கம் உண்டாவது இயல்பு. அந்தக் குறையும் அன்று தீர்ந்தது!

ராஜாஜி மண்டபத்துத் தோப்பில் மகா கவியின் வாழ்க்கையையும், அவரது கவிதைகளையும் இணைத்து, கவிஞர் பாரதி, தேசபக்தர் பாரதி, எழுத்தாளர் பாரதி, சமூக சீர்திருத்தவாதி பாரதி, தேவி பக்தர் பாரதி என்ற அவரது பல்வேறு குணவிசேஷங்களையும் அற்புதமாக ஒளி விளக்குகளின் உதவியையும், இசைக் கருவிகளின் துணையையும் கொண்டு காட்டினார்கள்.

தமிழ்நாடு கவர்னர் திரு மோகன்லால் சுகாதியா இந்த 'ஒலி, ஒளிக் காட்சி'யைத் தொடங்கி வைத்தார். செய்தி ஒலிபரப்பு இலாகா மத்திய அரசு அமைச்சர் வி. சி. சுக்லா இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார். பாரதி பிறந்ததிலிருந்து ஆரம்பித்து, அவரது பின்ளைப்பிராயத்துப் பள்ளிக்கூட நிகழ்ச்சிகள், திருமணம், எட்டயபுரம் சமஸ்தான மன்னரால் "பாரதி" என்ற சிறப்புப் பெயரை அடைந்தது, அவருடைய சுதந்திர உணர்ச்சி, கவிதா உணர்ச்சிகளைக் குறைந்த உரையாடல்களோடு விறுவிறுப்போடு காட்டினார்கள்.

இந்தக் கலை நிகழ்ச்சியில் பங்கு பற்றிய கலைஞர்கள் சுமார் நூறு பேர். பாரதியின் பதினேழு கவிதைகள், நல்ல சுருதி சுத்தமாகப் பாடப்பட்டன. தொண்ணூறு நிமிஷங்களில் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. சென்னை நகரின் வரலாற்றில் "ஒலி, ஒளி நிகழ்ச்சி" நடைபெற்றது இதுவே முதல் தடவை. இவ்வரிய நிகழ்ச்சியில் நூற்றிருபதுக்கும் மேற்பட்ட 'ஸ்பீக்கர்கள்' பயன்படுத்தப்பட்டன. நூற்றைம்பது ஒளி விளக்குகள் ஒளி வெள்ளத்தை எங்கிருந்தெல்லாமோ வீசின.

ராஜாஜி மண்டபத்தைச் சுற்றிலும் உள்ள அடர்ந்த மரங்கள் ஒளி வெள்ளத்தில் கனவுலகத்தை நினைவூட்டின. செய்தி இலாகா டைரக்டர் திரு என். கிருஷ்ணமூர்த்தி சபையோரை வரவேற்றுப் பேசினார்.

முதலில் ராஜாஜி மண்டபத்தைச் சுற்றி ஒரே மையிருட்டாயிருந்தது. நிகழ்ச்சி ஆரம்பிக்கும் நேரத்தில் எங்கிருந்தோ வீசிய ஒளிக்கதிர் வியப்பை உண்டாக்கி விட்டது. பிறகு இன்னிசைக் கருவிகளிலிருந்து தாள வாத்தியங்களின் ஒத்துழைப்போடு இசை வெள்ளம் நந்தவனப் பிரதேசத்தில் பரவியது; அப்புறம் வெளிச்சம் பரவியது; அதைத் தொடர்ந்து ஒரு குழந்தையின் அழுகைக் குரல் கேட்டது. — ஆம், அது கவிஞர் பெருமான் விடுதலை வேட்கையோடு பிறந்த அக்கணமே எழுப்பிய குரல்தான்! பிறகு ஒளி வெள்ளத்தில் பாரதியின் பள்ளி வாழ்க்கை; பின்னர் மகா கவியின் திருமணம் வேத விதிப்படி நடைபெற்றது; தொடர்ந்து இதர வாழ்க்கை நிகழ்ச்சிகள்.

பாரதியின் கவிதைகளை உயிர்த் துடிப்போடு பாடியவர் சீர்காழி கோவிந்தராஜன். பாரதியின் இல்வாழ்க்கை அவர் விரும்பிய விதமே ஒரு காணி நிலத்தில் கட்டிய மாளிகையில் அற்புதமாக நடந்தது. கறுப்புக் கோட்டும், மூலைக்கச்ச வேட்டியும், தலைப் பாகையும், முறுக்கு மீசையும் கொண்ட பாரதியை நேரில் பார்க்கப் பரமானந்தமாயிருந்தது. மகா கவியின் விடுதலை வேட்கையும் அதற்காக அவர் எழுப்பிய உரிமைக் குரலும் இந்நாடகத்தின் சிறப்பு அம்சங்கள். நாட்டுப் பற்று, மொழிப் பற்று, தேசிய ஒருமைப்பாடு ஆகியவைகளுக்காகக் கவிஞர் பெருமான் தமது இறுதி மூச்சு வரையில் அயராது பாடுபட்டார் என்பதை நன்றாய் இளைஞர் உள்ளங்களை ஈர்க்கும் வகையில் அமைத்திருக்கிறார்கள்.

ராஜாஜி மண்டபத்தில் ஒரு மாத காலத்துக்குப் பிரதி தினமும் இந்நிகழ்ச்சி நடக்கும். பிறகு தமிழ் நாடு முழுவதிலும் முக்கிய நகரங்களில் நடக்கும். யாவரும் கண்டு களிக்க வேண்டிய நாடகம்.

—விஜயம்.



தீபங்கள் மின்னும் கோலத்திருநாளில் தெய்வீக அழகு சேர்க்கும்
சாந்தி சில்க்
கலை
நயமுடையவை
விலை
நியாயமானவை
நீடித்து உழைப்பவை
நிறைவு தருபவை
பட்டுச் சேலைகள்
பட்டுப்
பாவாடைகள்
நவீன மில்துணி
வகைகள்
நயமுடைய
கைத்தறி
ரகங்கள்.
சாந்தி சில்க்
எம்போரியம்
சென்னைக்கே
பெருமிதம்.
RAJATHI-SS 153
மயிலாப்பூர்
சாந்தி சில்க்
எம்போரியம்
SHANTHI SILK EMPORIUM
5, சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை 4
போன் 74403 ஞாயிறு கடை உண்டு.
இலவசப்பரிசு: எமது விற்பனை ஊக்கத்திட்டத்தில் சேர்ந்து
பரிசும் பயனும் பெறுங்கள்.

அத்தியாயம் 53

கொடூரப் புன்னகை

நடிப்புக் கலை சிரமமானதாக நாடக ஒத்திகைகளின் போது பவானிக்குத் தோன்றவே இல்லை. சமூக சேவா சங்க அங்கத்தினர்கள் பலரும் பார்த்துப் பிரமிக்கும்படி அவள் வெகு இயல்பாகத் தான் ஏற்ற பாத்திரத்துக்கு உயிர் கொடுத்து நடித்தாள். ஆனால் இப்போது மாஜிஸ்திரேட் கோவர்த்தனன் கூறுவது ஒன்றுமே தனக்குப் புரியாததுபோல் நடிக்க நேர்ந்த போதுதான் அந்தக் கலை உண்மையில் எவ்வளவு சிரமமான ஒன்று என்பதை அவள் உணர்ந்தாள். "நீங்கள் எங்கே, எப்போது வேட்டைக்குப் போனீர்கள்? அதிலும் ஒரு புலியைச் சுடும் அதிர்ஷ்டம் உங்களுக்கு எப்படி அடித்தது? ஏலமலைக் காட்டில் அதிகபட்சம் நரி அல்லது ஓநாய் போன்ற துஷ்ட மிருகங்கள்தாம் உண்டு என்று சொல்வார்களே?" என்றாள்.

"இது இரண்டு கால் புலி!" என்றார் மாஜிஸ்திரேட், அவளைக் கூர்ந்து நோக்கியவாறு. "நாலு கால் புலியைவிடப் பயங்கரமானது! கதர்ச் சட்டை போட்டுக்கொண்டு சாது போல் ஊரை ஏமாற்றும்!"

பவானி தன் உணர்ச்சிகளை மறைத்துக் கொள்ள மிகவும் சிரமப்பட்டு, "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?" என்றாள்.

"புரிய வைக்கிறேன், பவானி! இப்படி உட்கார்" என்று கூறி, கோவர்த்தனன் சோபா ஒன்றில் அமர்ந்து பவானியை அருகில் உட்காருமாறு ஜாடை காட்டினார்.

"எனக்கு இப்போ நேரமில்லையே? ஹைகோர்ட்டுக்குப் போக வேண்டிய ஒரு வழக்கை ஆராய்ந்து குறிப்புக்கள் எடுத்துக் கொண்டிருக்கிறேன்" என்ற பவானி அவர் காட்டிய இடத்தில் அமராமல் எதிரே ஒற்றை சோபாவில் அமர்ந்தாள்.

"பாதகமில்லை. இதுவும் ரொம்ப முக்கியமான விஷயம்தான். ரொம்ப நேரம் உன்னைத் தாமதப்படுத்த மாட்டேன், சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன்.... பவானி! இது நாள் வரை நான் உன்னிடம் கூறத் தயங்கிக் கொண்டிருந்த விஷயங்களை இப்போது சொல்லியே தீரவேண்டியிருக்கிறது. இனியும் தாமதிப்பதற்கில்லை. என்னைப் பற்றி இதுவரை உன்னிடம் ஒரு விவரமும் நான் சொன்னதில்லை அல்லவா? இப்போது கூறுகிறேன், கேள்! நானும் உன்னைப் போல் கல்கத்தாவிலிருந்து இங்கு வந்து சேர்ந்தவன் தான்!"

"அப்படியா!" என்று அளவற்ற ஆச்சரியத்துடன் வினவினாள் பவானி.

"ஆமாம்" என்றார் கோவர்த்தனன். "இன்னும் கேள்! என் தகப்பனார் பெயரைக்கூறினால் மேலும் ஆச்சரியப்படுவாய் நீ!"

"கருணாகரனா?"

"கரெக்ட்! என் தம்பி உமாகாந்தன் தான் உன் கல்லூரிக் காதலன்!"

பவானியின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. "அவர் தமக்கு ஓர் அண்ணன் இருப்பதாக என்னிடம் சொல்லவே யில்லையே?"

"தனக்கு ஒரு காதலி இருப்பதாகவும் அவன் எங்களிடம் கூறவே இல்லையே? உங்கள் இருவர் இடையிலும் கல்லூரியில் ஏற்பட்ட சிநேகம் காதலாக மலர்ந்தது என்பதற்கு முதல் அடையாளம், நீ எங்கள் தகப்பனாரைத் தேடிக் கொண்டு எங்கள் வீட்டுக்கு வந்தாயே, அப்போதுதான் கிடைத்தது!"

"நான் கருணாகரனைத் தேடி வந்தது உங்களுக்குத் தெரியுமா?" என்றாள் பவானி வியப்புடன்.

"அப்போது தெரியாது. அச்சமயம் நான் வெளியே போயிருந்தேன். திரும்பி வந்ததும் என் தகப்பனார் சொன்னார்."

"என்ன சொன்னார்?"

"'நல்லவன் போல் நடித்து நம்மையெல்லாம் ஏமாற்றியது போதாதென்று பாவம், இந்த இளம் பெண்ணை வேறு உமாகாந்த் ஏமாற்றியிருக்கிறான்' என்று அனுதாபப் பட்டார்."

"என்னது! ஏமாற்றுவதா?"

"ஆமாம், பவானி! என் அப்பா உமாகாந்த் பற்றி உன்னிடம் என்ன கூறினார்? தேசபக்தத் தியாகி; ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ரகசிய சதித் திட்டத்தில் ஈடுபட்டதால் உள்ளே தள்ளிவிட்டார்கள் என்றுதானே?"

"ஆமாம்."

"அதுவும் ஓர் ஏமாற்று வேலைதான்! அவர் கூறியது முழுப் பொய்!"

"பொய்யா? எதற்காகப் பொய் சொல்லி என்னை ஏமாற்ற வேண்டும்?"

அலை ஓசை

அமரர் கல்கி

''பின்னே, தம் மகன் பாங்கில் கொள்ளை அடித்துவிட்டு அகப்பட்டுக் கொண்டான்; தம்பி என்னுகிறான் என்று ஒரு பெண்ணிடம் ஒப்புக் கொள்ள எந்தத் தகப்பனுக்கு மனம் வரும்?''

'' எனக்குத் தலையைச் சுற்றுகிறது '' என்றாள் பவானி.

''ஸ்டெடி ! ஸ்டெடி !'' என்று அன்பும் ஆதரவுமாகக் கூறியபடியே பரிவுடன் எழுந்து வந்து தன் சட்டைப் பையிலிருந்த கைக் குட்டையால் அவள் நெற்றியில் முத்து முத்தாய் அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்தார் கோவர்த்தனன். உரிமையோடு உள்ளே சாப்பாட்டு அறைக்குச் சென்று அங் கிருந்த மண் கூஜாவிலிருந்து ஜில்லென்ற தண்ணீர் கொண்டு வந்து உபசரித்தார்.

'' இப்படி நீ கலங்கிப் போவாய் என்ப தால்தான் இத்தனை நாள் வரை உன்னிடம் இதையெல்லாம் சொல்லாமலே இருந்தேன், பவானி. என் தம்பி பற்றி அவமானத்துக் குரிய விஷயங்களைப் பேச எனக்கு மனமும் வரவில்லை.''

''இப்போது மட்டும் மனம் வந்ததாக்கும்'' என்றாள் பவானி, கோபத்தை மறைத்துக் கொள்ளாமல்.

'' வேறு வழியில்லை, பவானி ! நீ கோபப் பட்டாலும் நான் கூறித்தான் ஆகவேண்டும். உமாகாந்த் ஜெயிலிலிருந்து தப்பிவிட்டான். அவனைப் பின்தூரத்திக் கொண்டு இரண்டு ஸி.ஐ.டி.கள் அவன் புகைப்படத்துடன் வந் திருக்கிறார்கள். சில காலம் முன்பு எனக்கும் உமாகாந்துக்கும் இடையில் உள்ள உருவ ஒற்றுமை பற்றிக் கேள்விப்பட்டு என்னைப் பார்க்க வந்தார்கள். 'பயங்கரக் குற்றவாளி அவன்; சீக்கிரம் கண்டுபிடியுங்கள்' என்று ஓர் அதட்டல் போட்டு அனுப்பி வைத்தேன். 'இன்று காலை அந்தக் கையாலாகாத பேர் வழிகள் மறுபடியும் என்னிடம் வந்தார்கள்.''

''வந்து....?'' — நெஞ்சத் துடிப்புடன். ஆனால் அமைதி இழந்ததாகக் காட்டிக் கொள் ளாமல் வினவினாள் பவானி.

''ஏலமலைக் காட்டில் அவன் ஒளிந்து இரிந் திருக்கிறான். இவர்களும் விடாமல் தேடி யிருக்கிறார்கள். மலைச் சாரலில் உள்ள சின்னச் சின்ன கிராமங்களிலெல்லாம் விசாரித் திருக்கிறார்கள். கடைசியில் துப்பறிந்து ஒரு குடிசைக்குள் இருந்தவனைப் பிடிக்கப் போன போது அவன் தப்பி ஓடியிருக்கிறான். ஒரு ஸி. ஐ. டி. அவனை நோக்கிக் கைத் துப்பாக்கி யால் சுட்டிருக்கிறான்.....''


ஏற்கனவே பவானிக்குத் தெரிந்த விஷயம் தான் என்றாலும் அவளுக்கு இப்போதும் தூக்கிவாரிப் போட்டது.

''பவானி ! நீ உன் காதலனாகக் கருதி வந்த ஒருவனைப் பற்றி இப்படியெல்லாம் நான் பேச நேர்ந்ததற்காக எவ்வளவு வருத் தப்படுகிறேன், தெரியுமா ? என் தம்பியைக் குறித்து மட்டமாகப் பேச வேண்டியிருக் கிறதே என்பதைவிட அதிகமாக உன் காதல னைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறதே என்பதால் நான் கலங்கி நிற்கிறேன். ஆனாலும் உண்மைகளை எத்தனை நாள் மறைக்க முடியும்? மனதைக் கல்லாக்கிக் கொண்டு கூற வேண்டிய தருணம் வந்துவிட்டது. நீயும் உள்ளத்தைத் திடப்படுத்திக் கொண்டு கேட்டுத்தான் ஆக வேண்டும்.''

'' சொல்லுங்கள் ! அடிபட்ட புலி என்று ஆரம்பத்திலேயே நீங்கள் குறிப்பிட்டதால் அவர் உயிருக்கு ஆபத்தில்லை என்று ஊகிக் கிறேன்'' என்று நாத் தழுதழுக்கப் பேசினாள் பவானி. அவள் கண்களில் தளும்பி நின்ற நீரைக் கோவர்த்தனன் துடைக்க அனுமதி யாமல் ஒருபுறம் திரும்பிப் புடைவைத் தலைப் பால் முகத்தை மறைத்துக் கொண்டாள்.

கோவர்த்தனன் ஏமாற்றம் அடைந்தவ ராக ஒரு பெருமூச்சுடன் திரும்ப வந்து தமது இருக்கையில் அமர்ந்தார்.

''துப்பாக்கித் தோட்டா உராய்ந்து சென்ற காயத்துடனேயே அவன் தட்டுத் தடுமாறி



ஓடியிருக்கிறான். ஏலமலைக் காட்டுப் பகுதிக் குள் புகுந்து இவர்களுக்கு டிமிக்கிக் கொடுத்து விட்டு மாயமாய் மறைந்து விட்டிருக்கிறான். இதுகள் இரண்டும் கையைப் பிசைந்து கொண்டு இன்று காலை என்னிடம் வந்து நின்றன. நன்றாக 'டோஸ்' கொடுத்து அனுப்பினேன்.''

''ஏன், தம்பி தப்பி விட்டானே என்று சற்று சந்தோஷப்படக் கூடாதா ?''

''அது எப்படி முடியும், பவானி ? ஒரு வக்கீலாக இருந்து கொண்டு இப்படிக் கேட் கிறாயே ? சட்டத்துக்குமுன் எல்லாரும் சமம் அல்லவா ? என் தம்பி என்பதால் ஒரு குற்ற வாளி தப்பித்துக் கொண்டதற்காக நான் சந் தோஷப்பட முடியுமா ?''

''அப்புறம் ?''

''அப்புறமென்ன ? அவனுக்குப் பலமாக அடிபட்டிருக்கிறது: அதிக தூரம் போக முடியாது: வைத்திய உதவி இல்லாமல் அதிக நாட்கள் உயிர் தரிக்க முடியாது. எனவே இந்த வட்டாரத்திலேயே யாரிடமாவது

'தஞ்சம்' என்று வந்து சரணடைய வேண்டியதுதான். எந்த டாக்டர் அவனைப் பரிசோதித்தாலும் குண்டு பட்ட காயம் என்று உடனே புரிந்து கொண்டு போலீசுக்குத் தகவல் கொடுத்துவிடுவார். சீக்கிரமே அவன் அகப்பட்டுக் கொள்வான். ஆனால் அடிபட்ட புலி ஆபத்தானதும்கூட. போகிற பிராணன் எப்படி இருந்தாலும் போகப் போகிறது. பின்னோடு இன்னும் நாலு பேரை எமலோகப் பட்டணத்துக்கு அழைத்துப் போகலாம் என்று பழி வாங்கும் உணர்ச்சி எழும். அதனால் தான் முக்கியமாக உன்னை எச்சரிக்க வந்தேன். அவன் இங்கே வந்தாலும் வரலாம். போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யட்டுமா ?'' என்ற கோவர்த்தனன் பவானியை மறுபடியும் கூர்ந்து கவனித்தார்.


'' அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். தோட்டக்காரன், சமையல்காரன் எல்லாரும் இருக்கிறார்கள். மாமா குணசேகரனும் இருக்கிறார். எனக்கென்ன கவலை, அல்லது பயம்? ஒரு ஃபோன் செய்தால் நீங்களும் ஓடி வரப் போகிறீர்கள் !''

''யோசனை பண்ணாதே, பவானி ! ஏதாவது உதவி தேவை என்றால் உடனே ஃபோன் பண்ணு !''

பவானி அதற்கு ஆகட்டும் என்று பதில் கூறவில்லை. அதற்குப் பதிலாக, ''எனக்கு இத்தனை நாட்களாகப் புரியாமலிருந்த ஒரு விஷயம் இப்போதுதான் அர்த்தமாகிறது'' என்றாள்.

'' என்ன அது?''

'' உங்களை முதன் முதலாக ராமப்பட்டணத்தில் பார்த்த போது எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே என்று நினைத்தேன்.



என்னையும் அறியாமல் உங்களிடம் ஒரு மதிப்பும் மரியாதையும் என்னிடம் ஏற்பட்டு வளர்ந்தது. உமாகாந்தின் ஜாடைகளை உங்களிடம் நான் கண்டதால்தான் என் மனம் அப்படி உங்களிடம் கவர்ந்து இழுக்கப்பட்டிருக்கிறது.''

''மதிப்பும் மரியாதையும் உருவாக்கிய கவர்ச்சி மட்டும்தானா பவானி? அதற்கு அதிகமாக ஒன்றுமில்லையா?'' என்று ஏக்கத்துடன் கேட்டார் கோவர்த்தனன்.

பவானி இதற்கும் பதில் கூறாமல், ''எனக்குப் புரியாமல் இருக்கும் இன்னொரு விஷயத்தையும் சொல்கிறேன்'' என்றாள். ''உமாகாந்த் பாங்கில் கொள்ளை அடித்தார் என்பதை என்னிடம் வேணுமானாலும் உங்கள் அப்பா மறைக்கலாம். ஆனால் ஒரு பெரிய பாங்குக் கொள்ளையை எப்படி உலகின் பார்வையிலிருந்து மறைப்பது? பத்திரிகைகள், ரேடியோ எதிலுமே அப்படி ஒரு செய்தி இடம் பெறவில்லையே?''

''என் அப்பாவுக்குக் கல்கத்தாவில் இருந்த செல்வாக்கு உனக்குத் தெரியாது பவானி. இந்தச் செய்தி பத்திரிகைகளுக்கு எட்டவே இல்லை. போலீசுக்குச் சில பத்திரிகை நிருபர்கள் ஃபோன் செய்து கேட்டபோது அவர்கள் கேள்விப்பட்டது வதந்தியாக இருக்கும் என்று போலீஸார் கூறிவிட்டனர். ஏன் தெரியுமா? போலீஸ் ஐ. ஜி.யிடம் விஷயத்தைப் பத்திரிகைகளுக்கு வெளியிட வேண்டாம் என்று என் அப்பா கேட்டுக் கொண்டார். அவரும் சம்மதித்து அப்படியே உத்தரவு பிறப்பித்து விட்டார். பாங்கு நிர்வாகிகளும் விஷயம் வெளியாவதை விரும்பவில்லை. அவர்களுக்கென்னவோ பணம் திரும்பக் கிடைத்து விட்டது. திருடனும் கையும் களவுமாகப் பிடிபட்டுவிட்டான். பத்திரிகையில் செய்தி வெளியானால் பாங்குக்கு வீணான அவப் பெயர்தானே? எனவே, விஷயத்தை அமுக்கிவிட்டார்கள். மாஜிஸ்திரேட் கோர்ட்டில் கேஸ் நடந்தபோது கவனித்த ஓரிரு பத்திரிகை நிருபர்களை என் அப்பா விலைக்கு வாங்கிவிட்டார்!''

''எல்லாவற்றுக்கும் சரியான பதிலைத் தயாராக வைத்திருக்கிறீர்கள்!'' என்றாள் பவானி.

'' உண்மை எப்போதும் தெளிவானது. குழப்பம் இல்லாதது. ஒரு வக்கீலான உனக்குத் தெரியாததா?'' என்றார் கோவர்த்தனன். ''பவானி! உமாகாந்திடம் நீ இனியும் ஏமாந்து போகக் கூடாது. சிறையிலிருந்து தப்பி ஓடி வந்த ஒருவனுக்கு என்றுமே நிம்மதியில்லை. அவனால் எங்கும் வேலை தேடிக் கொள்ளவோ, உத்தியோகம் பார்க்கவோ முடியாது. சுதந்திரமாக நாலு பேர் அறிய வெளியே வருவது அவனுக்குச் சாத்தியமில்லை. யாராவது அவனுக்கு அடைக்கலம் தந்து அவனை மறைத்து வைத்து வேளா வேளைக்குச் சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தால்தான் உண்டு. இதை எதிர்பார்த்து உமாகாந்தன் உன்னிடம் வருவான். சிறையிலிருந்து தப்பியதும் அவன் நேரே கல்கத்தா சென்று உன்னைப் பற்றி விசாரித்திருப்பான். நீ இங்கே சுயமாகச் சம்பாதிக்கிறாய் என்று அறிந்ததும் அது தனக்கு அனுகூலமாயிற்று என்ற எண்ணத்துடன் இந்தப் பக்கம் வந்திருக்கிறான். சி.ஐ.டி.கள் சதா பின் துரத்தியதால் இது வரை உன்னை அவனால் அணுக முடியாமல் இருந்திருக்கிறது. ஆனால் எப்படியும் அவன் உன்னுடன் தொடர்பு கொள்ள முயல்வான் என்றே எனக்குத் தோன்றுகிறது. நீ அவனை மறைத்து வைத்துக் காப்பாற்ற மறுத்தால் அவனுக்குக் கோபம் வரும். அந்தக் கோபத்தில் அவன் என்ன செய்வான், எப்படி நடந்து கொள்வான் என்றே சொல்ல முடியாது! அதே நேரத்தில் ஒரு பாங்குக் கொள்ளைக்காரன் உன்னை மிரட்டிப் பணிய வைக்கவும் நீ அனுமதிக்க முடியாது. உன் நிலைமை தர்ம சங்கடமானதுதான். ஜாக்கிரதை!''

'' என்னை எச்சரிப்பதற்காகவும் எனக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவுமேதான் நீங்கள் கல்கத்தாவிலிருந்து என்னைப் பின்தொடர்ந்து இந்த ஊருக்கு வந்து சேர்ந்தீர்களா என்ன? நீங்கள் பேசுவதைப் பார்த்தால் அப்படியல்லவா நினைக்கத் தோன்றுகிறது?''

'' அதுவும் வாஸ்தவம்தான், பவானி. நீ என் தகப்பனாரை வந்து பார்த்துவிட்டுப் போனாய், உமாகாந்தைப் பற்றி அன்புடன் விசாரித்தாய் என்பதை அறிந்ததிலிருந்து நீ உமாகாந்தின் காதலியாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்தேன். தகாத ஒருவன் மீது காதல் கொண்ட உன்னிடம் எனக்கு அனுதாபம் பொங்கியது. உன்னைப்


தேர்ந்தெடுங்கள் இதோ, புதுமையாக மலரும்
கோலாகல டிசைன்களின் வரிசை.
கட்டாவ்
டெரிகோஸா சேலைகள்

பற்றி உன் கல்லூரி மாணவ மாணவியர்கள் சிலரிடம் பேச்சுக் கொடுத்துத் தெரிந்து கொண்டேன். அப்புறம் உன் வீட்டு வேலைக்காரன் ஒருவனை என் கைக்குள் போட்டுக் கொண்டு அவ்வப்போது அங்கு நடப்பனவற்றை அறிந்தேன். தண்டனைக் காலம் முடிந்ததும் உமாகாந்த் நேரே உன்னைப் பார்க்கத்தான் வருவான் என்று உணர்ந்திருந்தேன். அச்சமயம் என் தம்பியால் உனக்கு ஏதும் ஆபத்து நேர்ந்துவிடக் கூடாது என்ற கவலை எனக்கு இருந்தது. உன்னைக் காப்பாற்ற வேண்டிய கடமையை நானே ஏற்றுக் கொண்டேன். நீ பி எல். தேறியதும் தொழில் நடத்த இந்த ஊரைத் தேர்ந்தெடுத்தாய். ஜப்பான்காரன் வரும் போது நீ கல்கத்தாவில் இருக்க வேண்டாம் என்று உன் பெற்றோர் கருதியதுதான் முக்கிய காரணம் என்று எனக்குத் தகவல் கிடைத்தது. உடனே நானும் அங்கிருந்து புறப்பட்டு வந்து இங்கே எனக்கு உத்தியோகம் கிடைக்குமாறு ஏற்பாடு செய்து கொண்டேன். உனக்காக எவ்வளவு சிரமப்படுகிறேன், பார்த்தாயா ?

''இங்கே வந்த பிறகு தொழில் முறையிலும் சமூக சேவா சங்கத்திலும் அடிக்கடி நாம் நெருங்கிப் பழக நேர்ந்தது. என் கடமை உணர்வு நாளாவட்டத்தில் காதலாகவும் அரும்பி விட்டது. மலர்ந்து மணம் பரப்பவும் அந்தக் காதல் காத்திருக்கிறது. ஆனால் பவானி என்ற வன தேவதை அந்த அரும்பு மலர அனுமதி தர மறுக்கிறாள்! என்ன செய்ய ?'' — ஒரு சோகமான நெடுமூச்சுடன் தாம் அமர்ந்திருந்த ஆசனத்தில் சரிந்து சாய்ந்தார் கோவர்த்தனன்.

பவானியின் நெஞ்சம் கோவர்த்தனனுக்காக நெகிழ்ந்து கொடுத்தது. மாடியில் இருக்கும் காதலனை எண்ணி அவள் மனம் பதை பதைத்தது. என்ன செய்வது, என்ன பேசுவது என்று புரியாமல் தயங்கினாள்.

கடைசியில், ''இவ்வளவு தூரம் என்னிடம் சிரத்தை எடுத்துக் கொண்டிருப்பதற்காக நான் உங்களுக்கு ரொம்பவும் கடமைப் பட்டிருக்கிறேன்'' என்றாள்.

''கடமைப்பட்டிருக்கிறேன், நன்றி சொல்கிறேன், வந்தனம் தெரிவிக்கிறேன்! திரும்பத் திரும்ப இதுதானா ? இவற்றை இவ்வளவு சுலபமாகச் சொல்கிற உன் வாயில் காதலிக்கிறேன் என்ற சொல் மட்டும் நுழையமாட்டேன் என்கிறதே, ஏன்?'' — எரிச்சலும் ஆத்திரமுமாகக் கேட்டார் கோவர்த்தனன். பவானிக்கு அழுகையே வந்துவிடும் போலாகி விட்டது. அவரை எப்படியாவது அனுப்பி வைத்தால் போதும் என்கிற நிலையில், ''இந்தக் களேபரமெல்லாம் ஒருவாறு அடங்கட்டும். தப்பியோடிய கைதி மறுபடியும் சிறைப்படட்டும். அப்புறம் நம்மைப் பற்றி யோசிக்கலாம்'' என்றாள்.

''அதுவும் சரிதான்'' என்றார் கோவர்த்தனன். ''இங்கு வந்துள்ள சி. ஐ. டிகள் வெறும் உதவாக்கரைகள். சென்னையில் கமிஷனருக்கு ஃபோன் போட்டுக் கெட்டிக்காரர்களாக இன்னும் நாலு பேரைத் தேர்ந்தெடுத்து அனுப்பச் சொல்கிறேன்'' என்று கூறியவாறே எழுந்து வாசலை நோக்கி நடந்தார் கோவர்த்தனன். ''நான் வரட்டுமா, பவானி ? உமாகாந்த் பற்றி நான் கூறியதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும். ஹி இஸ் எ டேன்ஜரஸ் ஃபெல்லோ ! சிறைப்படுவதற்கு முன் ஒரு போலீஸ் கான்ஸ்டபிளைக் குத்திக் காயப்படுத்தியிருக்கிறான். சிறையிலிருந்து தப்பிய போதும் இரண்டு காவலர்களைத் தாக்கிக் காயப்படுத்தியிருக்கிறான். மறுபடியும் பிடிபட்டால்....'' கோவர்த்தனன் காரில் ஏறிக் கதவைச் சாத்திக் கொண்டார்.... ''எந்த ஜட்ஜானாலும் குறைந்தபட்சம் பத்து வருஷம் தீட்டி விடுவார் ! விஷயம் தெரிந்து அவனுக்குப் பாதுகாப்பு அளிப்பவர்கள் யாரானாலும் அவர்கள்பாடும் அகப்பட்டுக் கொண்டால் திண்டாட்டம்தான். ஹார்பரிங் எ கிரிமினல். இரண்டு வருஷமாவது கம்பி எண்ண வேண்டியிருக்கும் !''

பவானியின் மேனி இதைக் கேட்டு நடுங்குவதைப் பார்த்தார் கோவர்த்தனன். கொடூரமான ஒரு திருப்திப் புன்னகையுடன் காரைக் கிளப்பிச் செலுத்திக் கொண்டு போனார்.

(தொடரும்)

விளையாட்டுக்குப் பின்னால் ஒரு வேதனைக் கதை !



Ring A Ring O roses
A Pocket full of Poises
A tishoo ! A tishoo ! we all fall down
A Ring, A Ring of Roses A Pocketfull of Poises
Ash-a Ash-a All stand Still

கான்வெண்ட் பள்ளிகளில் படிக்கும் கிண்டர் கார்டன் குழந்தைகள் பாடி ஆடும் நர்சரி ரைம் தான் இது. ஆனால் இந்த நான்கு வரிகளுக்குப் பின்னால் ஒரு சோக சரித்திரமே உள்ளது. வேடிக்கைக்காக எழுதப்பட்ட வரிகள் இல்லை இவை. கொள்ளை நோயான ப்ளேக் லண்டன் மாநகரில் ஆயிரக்கணக்கானவரை கொள்ளை கொண்டு போன போது மனத் தெம்புக்காக எழுந்த பாடல் இது. தி கிரேட் பிளேக் ஆப் லண்டன் (Great Plague of London) என்ற பெயர் பெற்ற அந்தக் கொள்ளை நோயால் லண்டன் தெருக்களிலே பிணங்கள் குவிந்தன. Ring' o Roses - ரோஜாக்கள் என்று குறிக்கப்பட்டது ரோஜா போல் சிவந்த பிளேக் கட்டிகளை. Pocket full of Poises என்பது ப்ளேக் தொத்தாதிருக்க மக்கள் 'தங்கள் பாக்கெட்டுகளில் எடுத்துச்' சென்ற வாசனைப் பொருள்கள். tiishoo, tishoo என்ற வரிகள் 'தும்மல் தொடக்கவுடன் தொலைந்தோம்' என்ற ஆற்றாமையைக் குறிக்க எழுந்தது.

கொள்ளை நோயின் கொடுமையிலிருந்து தப்ப வழியறியாது தவித்த நேரத்தில், பயத்தைப் போக்கிக் கொள்ள எழுந்த வரிகள் இவை. -திருமாவளவன்

கல்லூரிக் கதை 1

முன்னுரை

[இது ஒரு கல்லூரி ஆசிரியரின் 'உண்மைக் கதை' தம் கணவர் திரு ஜி. எஸ். பாலகிருஷ்ணனின் கதையல்ல என்று உறுதிகூறுகிறார் விஜயா பாலகிருஷ்ணன். பெயர்கள் யாவும் கற்பனை.]

நான் மட்டும் பி. ஏ. மூன்றும் வகுப்பில் தேறியிருந்தால் இன்று ஒரு பெரிய கம்பெனியின் மானேஜிங் டைரக்டராக மாறியிருப்பேன்.

முதல் வகுப்பில் முதல் மாணவனாகத் தேறப் போய் ஒரு கல்லூரியில் 'டியூட்டரா'கத் தடுக்கி விழுந்தேன். பின்னர் எம்.ஏ. பாஸ் செய்தவுடன் (அதுவும் கன்ராவி முதல் வகுப்பில் முதல் மாணவனாகத்தான்!) மீள முடியாதபடி என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டது ஆசிரியர் வேலை. இன்று நான் வழுக்கை விழுந்த (டாக்டர் பட்டத்துக்கு ஆராய்ச்சி செய்யப் போனதினால் வந்த வினை!) எல்லோராலும் மதிக்கப்படுகிற, ஹாஸ்ய உணர்ச்சியை இழந்த பட்ட பேராசிரியர்!

அரபிக் கடற்கரை ஓரம் அழகான ஊரிலிருக்கும் கைரளியா கல்லூரியில்தான் நான் என் ஆசிரியர் வாழ்க்கையைத் தொடங்கினேன்.

அதற்குமுன் நான் சூட், கோட் போட்டுக் கொண்டது கிடையாது. காதர் பாச்சா என்ற மாஸ்டர் டெய்லர் தைத்துத் தந்த புதுக் குழாயை (அப்பொழுதே 'பெல்பாட்டம்' தயாரித்த தீர்க்கதரிசி அவர்!) அணிந்து கொண்டு, 'டை' கட்டிக் கொள்ள ரயில்வே காலனியில் வசித்து வந்த டிக்கட் பரிசோதகர் பணிக்கர், பி. ஏ.யின் உதவியை நாடினேன். அவர் போட்ட முடிச்சுக்குப் பெயர் 'ப்ரின்ஸ் அப் வேல்ஸ் நாட்' (Prince of Wales Knot) என்று அவர் சாதித்தார். ஆனால் அது 'தூக்கு மேடை முடிச்சாக'ப் (Executioner's Knot) பட்டது, பின்னர் நான் சந்தித்த மாணவ மாணவிகளுக்கு.

பிரின்ஸிபால் ராமய்யர் நான் வேலைக்குச் சேர்ந்த உடனேயே 'இண்டர் மீடியட்' வகுப்புக்குப் பாடம் நடத்தச் சொல்லி அரை பர்லாங் தூரத்திலிருந்த 'ஆட்டியன் நம்பூதிரி ஹால்'க் காட்டினார்.

புது ஆடைகள் 'காஸ் பூஸ்' என்று தொங்க, பயம் நெஞ்சை அடைக்க, புத்தகமும் கையுமாக என் முதல் 'லெக்சர்' வகுப்பை நோக்கி நடந்தேன். தூரத்தில் என்னைக் கண்ட உடனேயே 'டிப்–டாப் கோரன்' 'டிப்–டாப் கோரன்' என்ற கோஷம் எழுப்பி வரவேற்றார்கள் சிஷ்யகோடிகள். (கோரன் என்பது கேரளத்தில் வழங்கும் ஒரு பெயர். நாம் 'சாப்பாட்டு ராமன்' என்று எடுத்ததெற்கெல்லாம் ராமன் தலையை உருட்டுவது போல் கேரளத்தில் கோரன் தலையை உருட்டுவார்கள்.) பிரமாதமாக 'டிரஸ்' செய்து கொண்டிருந்த என்னை அவர்கள் டிப்–டாப் கோரன் என்று ஏன் அழைத்தார்கள் என்பது விளங்குகிறதல்லவா? நான் கைக்குட்டையினால் முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டேன்.

நான் மேடை மீது ஏறி நின்றதும் வகுப்பில் பிரமாத அமைதி நிலவியது!

''ஸாருடே பேரு எந்தா?'' என்று மலையாளத்தில் வினவினான் ஒரு முஸ்லிம் மாணவன்.

நான் பெயரைச் சொன்னேன்.

''லவுடர் ப்ளீஸ்.''

''இந்த வகுப்பில் செவிடர்களும் உண்டு.''

நான் மீண்டும் பெயரைச் சொன்னேன்.

அதைச் சரிவரக் காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல் எழுந்து நின்ற தடியன், ''கோரனு?'' என்று உரக்கக் கேட்கவும் வகுப்பு 'கொல்'லென்று சிரித்தது.

''கோரன் இல்லையடா, அவர் பெயர் நாணு. மூஞ்சியிலேயே எழுதியிருக்கிறதே.''

''இல்லே, இஸ்மாயில்.''

முதல் நாள்; முதல் வகுப்பு!

விஜயா பாலகிருஷ்ணன்



''நான் 'பெட்' கட்டறேன். கோரனே தான் !''

நான் என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கையில், முப்பது நாரீமணிகள் வகுப்புக்குள் நுழைந்தார்கள். வாத்தியார் வந்த பிறகு தான் அவர்கள் வகுப்புக்கு வருவார்களாம்! தங்கள் இளம் வயது குருவைக் கண்டதும் அவர்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஒருத்தி 'களுக்'கென்று சிரித்தே விட்டாள் ! நான் அவளை முறைத்துப் பார்த்தேன். அவள் ரொம்ப அழகாக இருக்கவும், வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். அவ்வளவு ரூபவதியான பெண்ணைத் திட்ட எனக்கு ஏது துணிச்சல் ?

''ஸார், மே ஐ நோ யுவர் நேம் ?'' என்றானே ஓர் ஒட்டைச் சிவிங்கி பார்க்கலாம் !

நான் குழப்பத்துக்கு இடமின்றிக் கரும் பலகையில் என் பெயரைக் கொட்டை எழுத்தில் எழுதினேன்.

''ஸார் பி. ஏ.யா, எம். ஏ.யா?'' என்ற சந்தேகம் எழுந்தது ஒரு மாணவனுக்கு.

'' ஸார் 'ஷெட்யூல் காஸ்டா' ?'' என்று வினவினான் ஒரு போக்கிரி.

எனக்குக் கல்யாணமாகிவிட்டதா என்று துணிந்து கேட்டாள் ஒரு வனிதை.

அதற்கு ஒரு மாணவன் பதில் அளித்தான். 'கல்யாணத்துக்கு என்ன அவசரம்? ஸாருக்கு அப்படியென்ன வயதாகி விட்டது' என்று கூறினால் போதாதோ ? அப்படி சொல்லவில்லை ! '' ஸார், இன்னும் 'ஷேவிங் ஸெட்'டே வாங்கலியே !'' என்றான்.

மாணவர்கள் இந்தப் பதிலைக் கேட்டுச் சிரிக்காமல் இருப்பார்களா ? சிரித்தார்கள். சீட்டி வேறு அடித்தார்கள். வகுப்பு சினிமாக் கொட்டகை 'இன்டர்வெல்லை' நினைப்பூட்டிற்று.

நான் ஆஜர்ப் புத்தகத்திலிருந்து பெயர்களைப் படிக்கத் தொடங்கினேன். 'நாராயணன் குட்டி' என்று நான் படித்ததும் மாணவர்கள் கைதட்டிச் சிரித்தார்கள். நான் மீண்டும் அதே பெயரைப் படித்தவுடன் முன்னைவிட அதிக இரைச்சலுடன் வகுப்பை இரண்டுபடுத்தினார்கள். கடைசியில்தான் புரிந்தது..... அந்தப் பாழாய்ப் போன பெயர் நாராயணிக் குட்டி என்று !

பாடம் நடத்தத் தொடங்கினேன். நான் பத்து வரி படிப்பதற்குள், ''ஸார்! இன்னும் வேகமாகப் படிக்க வேண்டும். இல்லாவிட்டால் பரீட்சைக்கு 'போர்ஷன்' முடிக்க முடியாது'' என்றான் ஒரு மாணவன். அவன் வார்த்தைகளைச் சிரமேற்கொண்டு நான் வேகமாகப் படிக்கவும், ''ஹோல்ட் ஆன் ! ஓர் ஆள் இறங்கணும் !'' என்று கத்தினார்கள் பலர்.

அன்று மாலை அம்மா கேட்டாள், 'எப்படடா இருந்தது முதல் வகுப்பு ?' என்று.

'வெளுத்து வாங்கிவிட்டேன்' என்று ஒரு போடு போட்டேன் !



""ஆராமம் சூழ்ந்த அரங்கம்'' என்றும், ''அணிநீர் தென்னரங்கம்'' என்றும் பற்பல விதமாக ஆழ்வார்களால் போற்றிப் புகழப்பெற்ற புனித க்ஷேத்திரம் ஸ்ரீரங்கம். இத்தலத்திலே எழுந்தருளி யிருக்கும் திருவரங்கனிடம் மாறாத அன்பு கொண்டு அனவரதமும் அவனைச் சுற்றிலும் மகான்கள் சேவித்து நிற்கிறார்கள் என்பதைத் திருமழிசைப் பிரான், திருச்சந்தவிருத்தத்தில் சொல்கிறார்:

'' சிற்றெயிற்று முற்றல் மூங்கில்,
மூன்று தண்டர் ஒன்றினர்
அற்ற பற்றர் சுற்றி வாழும்
அந்தணீரரங்கமே ''

இவ்விதம் அரங்கனிடம் ஆட்பட்ட மகான்களுள் உயர்ந்த ஆசார்யனாக எழுந்தருளி யிருந்த பெரியாண்டவன் ஸ்ரீநிவாச மகாதேசிகன் மிகப் பெருமை வாய்ந்தவர். இவர் பெரிய பெருமாளான ஸ்ரீரங்கநாதனை சேவிக்க ஸ்ரீரங்கம் கோயிலை நோக்கி எழுந்தருளும் பொழுது கர்ப்பகிருஹத்தில் பெருமாளுக்கு அர்ச்சனை செய்து கொண்டிருந்த அர்ச்சகர் திடீரெனப் பெருமாளைக் காணாமல் திகைத்தாராம். பெருமாள் முன் மண்டபத்துக்கு விரைந்து தன்னைக் காண வரும் ஆசார்யாளை எதிர்கொண்டு ஆரத் தழுவி, ''சம்பிரதாயத்தை ஆளவந்தவரே – ஆண்டவனே!'' என அழைத்தாராம். அன்றிலிருந்து ஆண்டவன் சம்பிரதாயம் என்று பிரசித்தமாயிற்று.

இப்படிப் பெருமை வாய்ந்த ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் சம்பிரதாயத்தில் தற்போது தன்னிகரற்ற ஆச்சாரிய வள்ளலாகத் திகழ்பவர் 'திருக்குடந்தை ஆண்டவன்' எனப் பிரசித்திபெற்ற ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மகாதேசிகன்.

ஸ்ரீமத் பாகவதத்தில் பின்னால் எங்கெல்லாம் மகான்களின் அவதாரங்கள் நிகழும் என்பதை ஒரு சுலோகம் விளக்குகிறது.

அதன் பொருளாவது : திராவிட தேசத்தில் தாமிரபரணி, வைகை, பாலாறு, காவிரி போன்ற மகாநதிகளின் கரைகளில் மேன்மை பொருந்திய பெருந்தகைகளான ஆசாரிய சிரேஷ்டர்கள் அவதரிப்பார்கள் என்பது. இந்நதிகளிலே, ''கங்கையிற் புனிதமாய – காவிரி'' என்று தொண்டரடிப் பொடி ஆழ்வாரும், 'தெய்வநீர்' எனத் திருமங்கை மன்னனும் 'தெண்ணீர் பொன்னி நதி' எனக் குலசேகரரும் புகழும் காவிரிக்குத் தனிச் சிறப்பு உண்டு.

இத்தகைய காவிரி நதியின் கரையில் தன்னைச் சுற்றிலும் பல திருத்தலங்களைக் கொண்டு மைய க்ஷேத்திரமாக விளங்குவது திருக்குடந்தை. இங்கு இன்றைக்கு எழுபது

பக்தர்கள் உய்யப் பாதயாத்திரை

-அமுதன்-



ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீ பத்மநாபாச்சாரியார் என்ற உத்தமருக்கு ஒரு பங்குனி மாத புஷ்ய நக்ஷத்திர தினத்தில் ஒரு ஸத்புத்திரன் அவதாரம் செய்தார். அவர் கருவிலே திருவுடையவர்.

நிறைந்த ஞானமும், வைலக்ஷணமும் பொருந்திய இந்தப் புத்திர ரத்னத்துக்கு, 'ஸ்ரீநிவாஸ ராகவன்' என்று பெயரிட்டனர். உபநயன ஸம்ஸ்காராதிகளைச் செவ்வனே செய்வித்தனர். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கச் செய்தனர். நியாய, வ்யாகரண, வேதாந்த சாஸ்திரங்கள் எல்லாம் நல்லாசிரியர்களிடம் கற்கச் செய்தனர். தமிழிலும் நல்ல புலமை பெற்று, ஆழ்வார்கள் அருளிய தமிழ்ப் பாக்களை அநாயாசமாகக் கற்று, கேட்பவர் அனைவரும் பரவசமாகும் வண்ணம் உபந்நியாசங்கள் செய்யும் ஆற்றல் பெற்று, 'கண்ணன் ஸ்வாமி' என்ற சிறப்புப் பெயரை அடைந்தார்.

. இல்லறத்தை வழுவாது கைக்கொண்டு, நன்மக்களைப் பெற்றுப் பாரத தேசத்தில் செல்லாத இடமில்லை என்ற அளவில் பக்திப் பிரவசனங்கள் நடத்தினார். தம் நிகரில்லாத தனிச் சிறப்புப் பெற்று விளங்கினார். உபந்யாசங்களில் தமக்கென தனியான பாணி அமைத்து, தமது மென்மையான இனிய சாரீரத்தால் கேட்போர் அனைவரையும் பரவசம் கொள்ளச் செய்தார். நகைச்சுவையும், அனைவரும் எளிதாகப் புரிந்து கொள்ளும் உபமானங்களும் அனைவரையும் கவர்ந்தன.

இப்படிச் சென்றவிடமெல்லாம் புகழ் பெற்று விளங்கித் தமது 56வது வயதில் புகழின் உச்ச கட்டத்தில் இருந்த சமயத்தில் செல்வம், புகழ், குடும்பம் அனைத்தையும் துறந்து ஸ்ரீமதாண்டவன் ஸம்பிரதாயத்தைத் தழைக்கச் செய்யும் ஆசாரிய வள்ளலாக அவதாரம் செய்தார் கண்ணன் ஸ்வாமி. அன்று முதல் திருக்குடந்தை ஆண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மகா தேசிகன் என்ற பெயர் பெற்றார். ஸ்ரீரங்கநாத ஸ்வாமியின் ஸந்நிதியிலேயே ஆசார சீலராக மிகவும் கடுமையான நியமங்கள் அனுஷ்டித்த ஆசார்ய வள்ளல், சந்யாஸாச்ரமத்தை ஸ்வீகாரம் செய்தவுடன் தாம் ஸ்ரீரங்கத்திலேயே தங்கியிருந்தால் சிஷ்யர்கள் தம்மைக் காண வருவது சிரமம் எனக் கருதி அவர்களைத் தடுத்தாட்கொண்டு அருள் புரியும் நோக்கத்துடன் பாதயாத்திரையாக ஒவ்வொரு ஊராக எழுந்தருளத் தலைப்பட்டார். பகவான் அளித்த இரு கால்களாலேயே நடந்து ஒவ்வோர் இடத்தையும் அடைவது தவிர வாகனம் ஏறுவதில்லை. இதுவரை பல்லாயிரக் கணக்கான மைல்கள் நடந்திருக்கிறார். தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பல க்ஷேத்திரங்களுக்கும் பலமுறை கால்நடையாகச் சென்று வந்துள்ள இம்மகான் சென்ற



ஆண்டு சாதுர்மாஸ்ய சங்கல்பத்தைத் திருச்சானூர் அலர்மேலு மங்கை உறைகின்ற க்ஷேத்திரத்தில் முடித்தார். அங்கு ஸ்ரீஸூக்த மகா யக்ஞத்தை எங்கும் காண முடியாத சிறப்புடன் நடத்தி வைத்துப் பிறகு பம்பாய் நகரம் பயணமானார். பம்பாய் நகரில் பக்தர்கள் திரள் திரளாக வந்து, ஆசார்யனின் அருளைப் பெற்றனர். சென்ற ஏப்ரல் மாதம் பம்பாயை விட்டுக் கிளம்பி ஜூலை மாதம் டெல்லி வழியாக ரிஷிகேசம் வந்தடைந்து தமது பதினைந்தாவது சாதுர்மாஸ்யத்தை, இவ்வாண்டு கங்கைக் கரையில் ரிஷிகேசத்தில் முடித்துக் கொண்டார். இவர் தற்போதைய யாத்திரையில் கடந்த மாநிலங்களாவன: ஆந்திரம், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தானம், ஹரியானா, உத்தரப் பிரதேசம்.

அஷ்டாக்ஷரம் அவதரித்ததும், முக்தி தரும் நகரங்கள் ஏழில் ஒன்றுமான பத்ரிகாசிரமம் செல்ல வேண்டுமென சங்கல்பித்து, சிஷ்யர்கள் புடைசூழச் சென்ற 11–9–76 ரிஷிகேசத்திலிருந்து பத்ரிகாசிரம யாத்திரையைத் தொடங்கியுள்ளார் ஆசாரிய வள்ளல்.

வட தேச யாத்திரையை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு தென்னகம் திரும்பிய பிறகு இவரது 71வது திருநக்ஷத்திர மகோற்சவத்தை மிகவும் விமரிசையாகக் கொண்டாட சிஷ்ய கோடிகளும், பக்தர்களும் தீர்மானித்திருக்கின்றனர். ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகளின் திருவுருவப் படத்தை மேலட்டையில் தாங்கி இவ்விதழ் சிறப்புப் பெறுகிறது.

பெரியாழ்வார் பெருமானை மங்களாசாஸனம் செய்தது போலே, 'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு' என ஆசாரிய வள்ளல் ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ மகா தேசிகரை வாழ்த்தி வணங்குவோம். ஆன்மீகம் தழைக்கவும் சிஷ்ய கோடிகள் உய்யவும் அருள் புரியுமாறு பிரார்த்திப்போம்.

வாசகர் மேடை

லால்பஹாதூரை மறக்கத் துணிந்தீரா?



☐ தலையங்கம் ''அக்டோபர் இரண்டு'' காந்தி அடிகளையும், காமராஜ் அவர்களையும் ஞாபகப்படுத்துகிறது.

ஆனால் மற்றொரு முக்கியமான விஷயம் தங்களுக்கு மறந்து போயிற்றே? லால் பஹாதூர் சாஸ்திரி அவர்களின் பிறந்த தினம் அக்டோபர் 2 அல்லவா? பதவியிலிருந்த போதும், பதவியை விட்டு மறைந்த போதும் சாதாரண மனிதனாக ஏழையாகவே விளங்கியவருக்கு இரண்டு வரிகள் ஒதுக்கியிருக்கலாம்.

ஸ்ரீவைகுண்டம்
1–10–76 தேசபக்தன்

☐ இந்த வார அட்டையில் சோகமே வடிவான தலைவர் காமராஜரது படம் கண்களில் கண்ணீர் பெருக்குகிறது. **Frailty! Thy name is woman!** ஷேக்ஸ்பியர் வாசகம் இது. **Melancholy! Thy name is Kamaraj!** உங்கள் அட்டைப்படத்துக்கு இந்தத் தலைப்பு பொருந்தும்!

திருச்சி–4
2–10–76 என். பானு

☐ உஷா சுப்பிரமணியன் எழுதிய 'எப்படிக் கணக்குக் கேட்பேன்' ஓர் அழகான, புதிய தலைமுறைக் கதை. கம்பெனி எக்ஸ்பென்ஸ் அகவுண்டில் காலம் தள்ளும் பெரிய மனிதர்களைப் பற்றிய குறிப்பு மிகவும் நாசூக்காகக் கையாளப்பட்டிருந்தது.

சேலம்
4–10–76 எம். வையாபுரிப் பிள்ளை


☐ இந்திரா பார்த்தசாரதியின் 'ஆறுதல்' என்ற சிறுகதை படித்துப் பயன் பெற்றேன். சமுதாயப் பிரச்னையுடன் கூடிய உயிரோட்டமுள்ள எழுத்து: சிறுகதையின் இறுதியில், 'தாற்காலிக மருத்துவச் செலவு' என்ற வார்த்தைகள் மிகப் பொருத்தமாகவும் அழுத்தமாகவும் வந்து விழுந்திருக்கின்றன.

திருப்பூர்
30–9–76 க. கிருஷ்ணன்

☐ 3–10–76 கல்கி இதழில் இந்திரா பார்த்தசாரதி அவர்கள் எழுதிய 'ஆறுதல்' என்ற கதையைப் படித்துவிட்டு எங்கள் மனம் ஆறுதலடையவில்லை. ஆசிரியர் ஓர் உன்னத தரமுள்ள எழுத்தாளர் என்பது தமிழுலகமறியும். இக் கதையில் செங்கல்பட்டுக்கு அருகிலுள்ள களத்தூர் என்று குறிப்பிட்டுள்ளது எம்போன்றவர்களுக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது. கற்பனைக் கதைதான் ஆனால் அங்கு உண்மையான ஊர்ப் பெயரை இழுக்க வேண்டுமா?

சென்னை-1
3–10–76 சி. ஆர். நரசிம்மன்

(கல்கியில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. களத்தூரில் நடைபெற்று வரும் கோயில் திருப்பணிகளுக்கும் 'ஆறுதல்' என்ற கதைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. - ஆசிரியர்)


அதிகாலையில்
ஸ்டேன்ஸ் காபி!
நாள் முழுவதும்
புத்துணர்ச்சி!!
ஒவ்வொரு கோப்பையிலும்
அதிக புத்துணர்ச்சி!
Stanes
தி யுனைடெட் காபி சப்ளை கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்

MAC(B) 1/75

15. கிரேக்கமும் மத்திய கிழக்கும்

புது உலகம் கண்டேன்!

மத்திய கிழக்கு நாடுகளின் வறட்சிக்கு ஒரு மாற்றுகப் பசுமையும் அழகும் நிறைந்த லெபனானில் இப்போது இடையறாத போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. லெபனானின் தலைநகரான பெய்ரூத்தில் விமானங்கள் இறங்குவதுமில்லை, புறப்படுவதுமில்லை. ஒரு சுற்றுப் பிரயாணியின் திட்டத்தில் வழக்கமாகவும் இயல்பாகவும் ரோமாபுரிக்கு அடுத்தபடி முக்கியத்துவம் பெற்றிருந்த பெய்ரூத் – இப்போது பல மாதங்களாக அந்த முக்கியத்துவத்தை இழந்திருப்பதோடு பயத்துக்கும் பதற்றத்துக்கும் உரிய பிரதேசமாகி விட்டது.

மத்திய கிழக்கின் சுகவாசஸ்தலம் அல்லது வேனிற்கால நகரம் என்ற புகழை லெபனான்



● குவெய்த்தில் ஒரு பிரதான வீதி

தலைநகர் இப்போது தற்காலிகமாக இழந்திருக்கிறது. மீண்டும் எப்போது பெறும் என்றும் தெரியவில்லை.

இப்போது லெபனானின் போர் நிலை காரணமாகக் கிரீஸ் நாட்டுக்கும் அதன் தலைநகரான ஏதென்ஸுக்கும் புதிய முக்கியத்துவமும் புகழும் ஏற்படத் தொடங்கியிருக்கின்றன. லெபனானிலிருந்தும் பெய்ரூத்திலிருந்தும் பலர் கிரீஸுக்கும், ஏதென்ஸுக்கும் குடிபெயரத் தொடங்கி யிருக்கின்றனர். மிகப் பெரிய அமெரிக்க, ஐரோப்பிய வியாபார நிறுவனங்களின் தலைமையகங்கள் பெய்ரூத்தில் இயங்க முடியாமல் ஏதென்ஸுக்குக் குடிபெயரத் தொடங்கியிருக்கின்றன. தீவுகளுக்கும், கப்பல் கட்டும் தொழிலுக்கும் பெயர் பெற்ற கிரேக்க நாட்டின் வரலாற்றுச் சிறப்புப் பெரியது. வரலாற்றின் சின்னங்களும் புதைபொருள்களும் அழகிய தீவுகளும்தான் இன்றைய கிரீஸில் பெரிதும் பார்க்க வேண்டியவை.

கிரீஸின் தலைநகராகிய ஏதென்ஸில் தட்டைக் குன்றுகளின் (Flat topped hills) தொடராகிய அக்ரோபோலிஸை ஒட்டிப் பழைய நகரமும், கடலிலிருந்து அக்ரோபோலிஸின் அடிவாரம் வரை புது நகரமுமாக வாய்த்திருக்கிறது. உயரமும், தட்டையுமான கட்டிடங்கள் மாறி மாறித் தெரியாமல் ஒரே சீரான அடங்கிய கட்டிடங்களும் அகன்ற வீதிகளும் அழகிய சதுக்கங்களும் நிறைந்த நகரம் ஏதென்ஸ். ஏதென்ஸைச் சுற்றிக் கிடைக்கும் ஒருவகைச் சலவைக் கற்களால் (Pentelic Marble) புராதனமான பார்த்தினன் (Partheron) பாணியில்தான் கட்டிடங்கள் கட்டப்பட்டுத் தென்படுகின்றன. நமது மெமோரியல் ஹால் ராஜாஜி ஹால் முகப்பு அமைப்புக்களை நினைவு கொள்ளலாம்.

நான் ஏதென்ஸில் தங்கியிருந்த ஒரு பகற்போதில் அந்நகரத்தை மிகவும் இரசித்தேன். ஏதென்ஸின் பிரதான கவர்ச்சி அம்சம் 'அக்ரோபோலிஸ்'. தட்டைக் குன்றுகளில் ஏறி அச்சின்னங்களையும் இடிபாடுகளையும் சுற்றிப் பார்ப்பது செஞ்சிக் கோட்டையைச் சுற்றிக் காண்பது போல் ஓர் அனுபவம். இந்த 'அக்ரோபோலிஸை' ஐரோப்பியக் கலையின் மூலஸ்தானம் என்று சொல்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள். புராதனமான பல கிரேக்க ஆலயங்களையும், நகரிலுள்ள சில நினைவுச் சின்னங்களையும், ஒலிம்பிக் ஸ்டேடியத்தையும் பார்த்தால் ஏதென்ஸ் நமக்குப் பழகிய நகரமாகி விடும்.

'அக்ரோபோலிஸ்' – முழு நிலவில் பார்க்க வேண்டியது என்று அங்கு பலரும் வர்ணிக்கிறார்கள். ஆனால் முழு நிலவு நேரத்துக்கு நான்

மத்திய கிழக்கில் குவெய்த்தில் போய் இறங்கி விட நேர்ந்தது.

மத்திய கிழக்கில் குவெய்த், துபாய், அபுதாபி, பஹ்ரெய்ன் பகுதிகளில் ஏராளமான தமிழர்கள் வசித்து வருகிறார்கள். அதனால் குவெய்த்தில் சில நாட்கள் தங்கும் முடிவுடன் போய் இறங்கியிருந்தேன் நான். 'குவெய்த்' ஒரு சிறிய — ஆனால் முக்கியத்துவம் வாய்ந்த மத்திய கிழக்கு நாடு. கேந்திரமாக அமைந்திருக்கிறது. நாடே ஒரு பெரிய நகரம்தான். ஆனால் எண்ணெய் வளத்தினாலும் பொருளாதாரச் செழிப்பினாலும் பலம் வாய்ந்த நாடாக இருக்கிறது. விமானம் தரை இறங்குவதற்கு முன்பாக அங்கங்கே பூமியில் எண்ணெய் வளப் பகுதிகளில் தீக்கொழுந்துகள் ஜ்வாலை ஜ்வாலையாக எரிவதைப் பார்க்க முடிந்தது.

முன்பு அமெரிக்க, ஐரோப்பியக் கம்பெனிகள் பெருவாரியாக அனுபவித்து வந்த எண்ணெய் வள லாபத்தை இப்போது சுதேசிகளே ஏற்றுக் கொண்டு செல்வம் கொழிக்கச் செய்கிறார்கள். உலகத்தில் வேறு நாடுகள் இறக்குமதி செய்யத் தயங்கும் பெரிய பெரிய பூதாகாரமான ப்யூக், பான்டியாக், காடிலாக் கார்கள் எல்லாம் இப்போது மத்திய கிழக்கு நாடுகளில்தான் தாராளமாக ஓடுகின்றன. சிறிய கார்களையே தெருவில் பார்க்க முடியவில்லை. ஒரு கார் பழுதுபட்டால் மூலையில் நிறுத்திவிட்டுப் புதியது வாங்கி விடுகிறார்கள். பெட்ரோல் மலிவாக இருப்பதால் அதிகச் செலவாகும் பெரிய கார்கள் ஒரு பளுவாக இவர்களுக்குத் தோன்றுவதில்லை. ரொட்டி, குளிர் பானங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், எண்ணெய்க் கம்பெனிகளைத் தவிர வேறு பண்டங்கள் எல்லாவற்றையும் மேற்கு நாடுகளிலும் கிழக்கு நாடுகளிலும் இருந்து தாராளமாக இறக்குமதி செய்து கொள்ளுகிறார்கள்.

அருமையான பாஸ்மதி அரிசி, டொப்பிச் சம்பா அரிசி, சீரகச் சம்பா அரிசி இந்தியக் காய்கறிகள், பலசரக்குச் சாமான்கள் எல்லாம் குவெய்த்திலும் பிற மத்திய கிழக்கு நாடுகளிலும் தாராளமாகக் கிடைக்கின்றன. அந்நியச் செலாவணி சம்பாதிக்கும் நோக்குடன் ஏற்றுமதி செய்யப்படுவதால் பல இந்தியப் பண்டங்கள் முதல் தரமானவையாக அங்கு கிடைக்கின்றன. பாங்குகள், வியாபார நிறுவனங்கள், தபால் தந்தி,மின்சாரத் துறைகளில் பல இந்தியர்கள் - தமிழர்கள் மத்திய கிழக்கில் பணி புரிகின்றனர். குவெய்த் ஆயில் கம்பெனிகளில் பணி புரிவோரும் உண்டு.

பழங் காலத்துக் குவெய்த் என்பது பாலை வன மணல் வெளியும் ஊரைக் காக்க மண் மதில் சுவரும் தாழ்வான மண் வீடும் கொள்ளைக்காரர்களுடைய வரவைப் பற்றி எந்நேரமும் அச்சம் உடையதாகவும் இருந்திருக்கிறது.

சுமார் எண்பத்தைந்து லட்சத்துக்கு மக்கள் தொகையுள்ள இன்றைய குவெய்த்தோ உலகில் தனி நபர் வருமானம் *(Per Capita income)* உயர்ந்த நாடுகளில் முன்னணியில் நிற்கிறது. சாலைகளையும் சோலைகளையும் மணல் வெளியில் அரும்பாடுபட்டு உருவாக்கியிருக்கிறார்கள். கட்டிடங்களும் நவீனமாக்கப் பட்டிருக்கின்றன. கடை வீதி நவீனமாகியிருக்கிறது.

பெரும்பாலான மாதங்களில் பகலில் வெயில், இரவில் ஒரு இளசான பாலைவனத்துக் குளிர் என்பது போல 'டெஸர்ட் கிளைமேட்' நிலவுகிறது. இன்றைய குவெய்த் வீடுகளில் 'குளிர் சாதனம்' என்பது மின் விசிறியைப் போல் ஓர் அத்தியாவசியச் சாதனம் ஆகியிருக்கிறது. பழைய பாணி மண் சுவர் வீடுகள் சிலவற்றில் கூட இப்படிக் குளிர் சாதனம் பொருத்தியிருப்பதைப் பார்த்தேன்.

இந்தப் பாலைவனப் பகுதியில் மரங்களை வளர்ப்பது மிகவும் சிரமமான காரியம் என்பதால் போக்குவரத்து விதிகளின்படி கார், லாரி, பஸ் முதலிய வாகனங்கள் ஓர் உயிருள்ள மனிதன் மேல் ஏற்றப்பட்டு விபத்து நேர்ந்தால் ஓட்டுபவருக்கும், வாகன உரிமையாளருக்கும் என்ன தண்டனையோ அதை விடக் கடுமையான தண்டனை மரங்கள் மேல் ஏற்றி அழிக்க முயல்பவர்களுக்கு உண்டு என்று தெரிவித்தார்கள்.

''என்னடா கத்த மரம் மாதிரி நிற்கிறே?'' என்று மத்திய கிழக்கு நாடுகளில் யாரையும் யாரும் ஏளனமாகக் கேட்க முடியாது. அங்கு மரங்களைப் போஷிக்க ஆகும் செலவும் மரங்களின் மதிப்பும் மனிதர்களுக்கு இருப்பதை விட அதிகம். காரணம் பசுமையின் அவசியம். நிஜமான வன மகோத்சவம் அங்குதான் நடக்கிறது.

அராபிய வளைகுடா நாடுகள் *(Arabian Gulf Countries)* ஐக்கிய அராபியப் பகுதிகள் *(United Arab Emirates)* என்றெல்லாம் இந்த மத்திய கிழக்குப் பகுதி குறிப்பிடப்படுகிறது. இப்பகுதிகளில் இஸ்லாம் மதாசாரம் ஒழுக்கம் ஆகியவை மிகவும் . கண்டிப்பாக அநுஷ்டிக்கப்படுகின்றன. மது விலக்கு அமுலில் இருக்கிறது. இரவு விடுதிகள் இல்லை. பொதுவில் மக்கள் பொய், திருடு

நா. பார்த்தசாரதி



● குவெய்த்தில் ஓர் இலக்கியக் கூட்டத்தில் பெண்மணிகள்.

● நா. பா. பேசுகிறார்.

இல்லாத நல்லியல்புகள் உள்ளவர்களாக இருக்கிறார்கள். ரம்ஜான் முதலிய நோன்பு நாட்களில் நோன்பு நோற்கிறவர்கள் காணும் படியாகப் பிறர் உண்பது, புகைப்பது கூட மரியாதைக் குறைவாகக் கருதப்படுகிறது. மசூதியில் தொழுகை நேரங்களில் டெலிவிஷன் நிகழ்ச்சிகள் கூட நிறுத்தப்பட்டுத் தொழுகையின் புனித வாசகங்கள் அரபு மொழியில் காண்பிக்கப்படுகின்றன. இந்த விஷயங்களில் சௌதி-அரேபியாவை விடத் துபாய் — அபுதாபி — குவெய்த் ஆகியவற்றை ஓரளவு 'காஸ்மாபாலிடன்' என்று சொல்லுகிறார்கள். பழுப்பு நிறமும் நல்ல உயரமும் பருமனான தோற்றமும் தலையில் கறுப்புக் கம்பளிக் கயிறுடன் கூடிய வெண் துணிப் போர்வையுமாக விளங்கும் இப்பகுதி ஷேக்குகளும் அமீர்களும் கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றனர்.

பழைய சூயஸ் பிரச்னையும் — எகிப்து இஸ்ரேல் போர்களும் இப்பகுதியினரிடையே அரேபிய ஒற்றுமை என்ற உணர்வை அபரிமிதமாகத் தோற்றுவித்திருக்கின்றன. பிரிட்டனில் நிற வெறியை எதிர்ப்பவர்கள் தென்னாப்பிரிக்காவின் சில பகுதிகளிலிருந்து இறக்குமதியாகும் பண்டங்களை வாங்காதது போல் இஸ்ரேலியர்கள் — யூதர்கள் சம்பந்தப்பட்ட சென்ட் முதல் குண்டூசி வரை — கார் முதல் கப்பல் வரை இப்பகுதிகளுக்குள் அனுமதிக்கப்படுவதே இல்லை. இதில் தீர்மானமாக ஒரு கட்டுப்பாடும் ஒற்றுமையும் இவர்களிடையே இருக்கிறது. யூதர்கள் தொடர்புடைய அமெரிக்க ஐரோப்பியத் தயாரிப்புகள் கூட உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை.

உத்தியோகத்துக்காக வந்திருக்கும் தென்னிந்தியர்கள்—தமிழர்களின் எண்ணிக்கைக்குக் குறைவில்லாமல் வசதியுள்ள குவெய்த்தியர்களின் இல்லத்தில் ஆயாக்களாகப் பணிபுரியும் இந்தியப் பெண்மணிகளின் எண்ணிக்கையும் இருக்கிறது. வருமானக் கவர்ச்சி அதிகமுள்ள இவ்வேலைக்காக நிறையப் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வந்திருக்கிறார்கள்.

ஈராணையும், ஈராக்கையும் இப்பகுதியையும் பிரிக்கும் வளைகுடாவில் முத்துக் குளிப்பதும் இங்கு ஒரு முக்கியத் தொழிலாகும். இந்த முத்துக்களுக்கு முத்துச் சந்தையில் நல்ல மதிப்பும், விலையும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

வளைகுடா நாடுகளில் துபாய், அபுதாபி, பஹ்ரெய்ன், குவெய்த் ஆகியவற்றில் கணிசமான தமிழ்க் குடும்பங்கள் வசிக்கின்றன என்று கூறினேன் அல்லவா? குவெய்த்தில் சால்மியா-பகாலில் பகுதிகளில் இந்தியப் பள்ளிக்கூடம், தமிழ்ச் சங்கம், கீதா மந்திர் எல்லாம் உள்ளன. 'குவெய்த் டைம்ஸ்' என்ற ஆங்கில நாளிதழும் பல அரபு மொழிப் பத்திரிகைகளும் அங்கிருந்து வெளிவருகின்றன. தமிழ், மலையாள, ஹிந்தி திரைப் படங்களைத் தருவித்துத் திரையிடும் தனிப்பட்ட நிறுவனங்களும் உள்ளன. அத்தகைய திரைக் காட்சிகளுக்கு நல்ல கிராக்கியும் இருக்கிறது. இந்திப் படங்களுக்கு அதிகக் கிராக்கி உண்டு.

சமயம், பக்தி, ஆன்மிகப் பிரசங்கங்கள் சம்பந்தமானவற்றை கீதா மந்திர் கவனித்துக் கொள்கிறது என்றால், இலக்கிய நிகழ்ச்சிகளைத் தமிழ்ச் சங்கம் கவனித்துக் கொள்கிறது. இச்சங்கத்தின் தலைவர் திரு வாசு — ஒரு பாங்கில் பணி புரிகிறவர்.

குடிப்பதற்குக் கடல்நீரைச் சுத்தப்படுத்திப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் அதிர்ஷ்டம் தோண்டிய இடமெல்லாம் எண்ணெய்தான் கிடைக்கிறது. தண்ணீருக்குக் கடல் நீரைச் சுத்தப்படுத்த வேண்டியிருக்கிறது. சில இடங்களில் லாரிகளில் தண்ணீர் கொண்டு வரப்பட்டு ரப்பர்க் குழாய்கள் மூலம் மூன்று வது மாடி, நாலாவது மாடியில் உள்ள ஓவர்-ஹெட் டாங்குக்கு ஏற்றப்படுகிறது.

நகரை அபிவிருத்தி செய்து நவீனமாகக் கட்டவும் சாலைகளைப் போடவும் இடையூறாக இருந்தது என்ற காரணத்தால் குவெய்த்தின் பெரிய மண் கோட்டை மதிலை — ஒரு சிறு பகுதி மட்டும் வரலாற்றுச் சின்னமாக இருக்கட்டும் என்று வைத்துக் கொண்டு— 1957ல் பிற பகுதிகளை இடித்து விட்டார்கள்.

மேற்படிப்புக்கு வெளி நாடுகளுக்குப் போய்க் கொண்டிருந்த குவெய்த்தியர்களின் குறை தீர உள்ளூரிலேயே அருமையான பல்கலைக் கழகம் ஒன்றும் கட்டப்பட்டு அதன் முதல் பட்டமளிப்பு விழா 1970 டிசம்பரில் நடைபெற்றபோது 267 பேர் பட்டம் பெற்றார்கள். அதில் 213 பேர் குவெய்த்தியர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டங்களிலும் குவெய்த் அரசாங்கம் அருமையான சாதனைகளைப் புரிந்துள்ளது. நகரின் முக்கியப் பகுதியாகிய 'சஃபாத்' (Safat) பகுதியில் எல்லா நவீனக் கடைகளும், சூப்பர் மார்க்கெட்டுகளும் உள்ளன. கூட்டம் ஜே ஜே என்றிருக்கிறது. பழைய கடை வீதி நம்மூர் மார்க்கெட், கொத்தவால் சாவடி போல் மிகவும் நெருக்கமாக இருக்கிறது.

இங்கே நாம் கிளி, புறா வளர்ப்பது போல், பருந்து, ராஜாளிகளை வளர்ப்பது பல ஆண்டுகளாகக் குவெய்த்தியரின் பொழுதுபோக்காக இருந்து வருகிறது. 'அமீர்'களால் ஆளப்படும் 'குவெய்த்'தின் முதல் பொதுத் தேர்தல் 1963ல் நடைபெற்றது. இந்த ஒரு டஜன் ஆண்டுகளில் 'குவெய்த்'தின் பொருளாதாரச் செழிப்பும் படிப்படியாக உயர்ந்துள்ளது. குவெய்த் நாணயம் டினார் என்பது. ஒரு டினார் சுமார் 45 இந்திய ரூபாய்க்குச் சமம் என்ற அளவில் உள்ளது. சராசரி இந்திய உத்தியோகஸ்தரின் வருமானம் 250 முதல் 350 டினார் வரை இருக்கலாம். சில சிறப்புப் பதவிகளுக்கு இன்னும் அதிகமிருக்கலாம். செலவுகளும் வாழ்க்கைத் தரமும் கூட அதிகம்தான்.

ஏராளமான இந்தியர்களுக்கும் தமிழர்களுக்கும் வாழ்வும் உத்தியோகமும் அளித்திருப்பதால் இந்த வளைகுடா நாடுகளுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மத்திய கிழக்கு நாடுகளில் பூமியிலிருந்து எண்ணெய் மட்டும் சுரக்கவில்லை. கருணையும் சேர்ந்தே சுரக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். (பூர்த்தி)

இந்தத் தீபாவளிக்கு வாணியின் வண்ணக்கோலம்!

தீபாவளி புதிய வண்ணங்கள்:

சங்கீதா - லாவண்யா - பிரியா

தீபாவளி புதிய டிசைன்: **வாணி சுப்ரபாதம்**



வாணி சில்க்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரிகள்

92, ஸர் தியாகராய ரோட் (பனகல் பார்க் அருகில்)
தியாகராய நகர், சென்னை—600017

H.O. 132, இராயப்பேட்டை ஹை ரோட் (ஜம்மி பில்டிங் எதிரில்)
மைலாப்பூர், சென்னை 600014

இந்தத் தீபாவளிக்கு இலவசப் பரிசுகள்:

முதல் பரிசு — ஒரு டி. வி.
(ரூ. 1000/-க்கு குறையாமல் வாங்குபவர்களுக்கு மட்டும்

2—வது பரிசு — ஒரு மிக்ஸி
(ரூ. 500/-க்கு குறையாமல் வாங்குபவர்களுக்கு மட்டும்)

3—வது பரிசு — ஒரு பிரஷர் குக்கர்
(ரூ. 200/-க்கு குறையாமல் வாங்குபவர்களுக்கு மட்டும்)

விவரங்களுக்கு நேரில் அணுகவும்:

இன்றே எமது பட்டுச் சேலை சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து
இலவச பிளாஸ்டிக் தோள் பை பெறவும்

தீபாவளி வரை ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு



பாடுவோம் பாப் மியூசிக்!
15
கதை:
தமயந்தி/சாருகேசி
சித்திரம்: ராஜு
மார்க்கசகாயம் வீட்டில் —
கமலம், கமலம்! இங்கே வா. எங்கே போய் ஒளிந்து கொண்டிருக்கிறாய்?
ஆமாம். நான் நாலு வயசுக் குழந்தை, ஒளிந்து கொண்டிருக்கிறேன். கண்டு பிடியுங்கள்.
இதோ பார், மிஸ்டர் லிங்கம் என்றைக்கு நிச்சயதார்த்தம் வைத்துக் கொள்ளலாம் என்று கேட்கிறார்.
எங்கே கல்யாணம்? யாருக்கு நிச்சயதார்த்தம்?
என்ன விளையாடுகிறாயா? நம் பெண் வித்யாவுக்குத் தான் நிச்சயதார்த்தம். பிள்ளை இண்டஸ்ட்ரியலிஸ்ட் லட்சாதிபதி மிஸ்டர் எஸ். எஸ். லிங்கத்தின் சீமந்த புத்திரன்.
வெறும் மந்த புத்ரன் அம்மா!
நீங்க எப்போ பெண் பார்க்கிற ஏற்பாடெல்லாம் செய்தீர்கள்? வித்யாவுக்குச் சம்மதம் தானாமா?
வித்யா அவ்வளவு மோசமாயில்லையே?
பெண் பார்க்கிறதாவது! பாலாஜி அசாதிப் பிறவி. 'மாமா, உங்களைப் பார்த்தாயிற்று. உங்கள் பெண்ணைப் பார்க்கவே வேண்டாம்' விட்டான்!
கிண்டலா பண்ணறே! கண்ணுக்கு லட்சணமாகப் பிள்ளை. கார். பங்களா. இதுக்கு மேலே ஒரு பிள்ளைக்கு என்ன க்வாலிபிகேஷன் வேணும்?
கட்டாயம் ஒரு முக்கியமான க்வாலிபிகேஷன் வேணும்.



அது என்ன? கிளிக். நல்ல வேலையா?
ஹோ. பெண்ணுக்கு அந்தப் பிள்ளையைப் பிடித்திருக்கணும்.
ஏன், உனக்கு பாலாஜியைப் பிடிக்கவில்லையா என்ன? உனக்குப் பைத்தியம் தான் பிடிச்சிருக்கணும்!
தொழிலதிபர் எஸ்.எஸ். சிங்கத்தின் தொழிற்சாலை. இரவு.
நமஸ்தே கூர்க்காஜி.
நமஸ்தே. நீ யாரு? என்ன வேணும்?
கூர்க்காஜி, என்னைத் தெரியவில்லையா உனக்கு? அன்னிக்கு உங்க பாக்டரியிலே பாப் மியூசிக் பாடினேனே... ஹம் தும் ஏக் கம் ரே மே பந்த் ஹோ...
ஆங்... பஹுத் அச்சா. பஹுத் அச்சா. என்ன சாப் வேணும்?
ஒரு சின்ன ஹெல்ப். என்னோட ஒரு கிடார் அங்கே விட்டுட்டேன். நீ உள்ளே விட்டால் போய் எடுத்து வந்துடுவேன்.
எந்த இடத்திலே சாப்? எப்படித் தேடப் போறீங்க?
நீ அலட்டிக்காதே. சாவிக் கொத்தை இப்படிக் கொடு. நான் திறந்து பார்த்து எடுத்துக்கறேன்.
சாவிக் கொத்தா?
பயப்படாதே கூர்க்காஜி. எனக்கு வேண்டியது என்னோட கிடார் மட்டும் தான். வேறே ஒண்ணையும் தொட மாட்டேன். என்னை நம்பு...
அச்சா, அச்சா! இந்தா சாவி.



பண் பாடும் பண்பாட்டுத் தூதர்

சந்திரகாந்தி கோவிந்தராஜுலு

' இசையெல்லாம்
போற்றிசைக்கத்
தேன்குரலால் பாடும்
இசைமேதைக்குண்டோ
இணை''

ஆய கலைகள் அனைத்திலும் உன்னதமான ஸ்தானத்தை வகிக்கும் தெய்விகமான இசைக் கலையிலே, இமாலயப் புகழோடு பிரசித்தி பெற்று உலகம் போற்ற விளங்குகிறார் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள். ஞான மண்ணாகிய தமிழகத்திலே, தெய்வ ஒளியும், தமிழ் மணமும் இயற்கைப் பொலிவும் கலந்து வீசும் மதுரையம்பதியிலே, மீனாட்சியம்மன் அருளால் பல தலைமுறைகளாக நாத தீபத்துக்குப் பேர்போன குடும்பத்தில் பிறந்தார். சிறந்த இசைமேதையும் பிரசித்தி பெற்ற வீணை விற்பன்னருமான திருமதி ஷண்முக வடிவு அவர்களுக்குப் புதல்வியாகப் பிறந்து அவரையே குருவாகவும் அடைந்தார். ''இசையே இறைவன், இறைவனே இசை'' என்ற தெய்விக லட்சியத்தோடு வழிகாட்டி வருகின்ற திரு சதாசிவம் அவர்களைப் பதியாக அடைந்தது ஸ்ரீமதி எம். எஸ்.ஸின் பாக்கியம். இத்தம்பதியின் இதயபூர்வ மானசிக தெய்வமான காஞ்சி காமகோடி மகான் அவர்கள் ஆசியால் வித்யாரூபிணி எம். எஸ். அவர்களின் சாரீரம், இடம், பொருள், காலம், மொழி ஆகிய பாகுபாடுகளைக் கடந்து, மனித இனத்தின் மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத கந்தர்வ கானமாக ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

தேச சேவையில் ஆழ்ந்து ஈடுபட்டவரும், உறுதியான உள்ளமும், செயலூக்கம் மிக்கவரும், பொருளைப் பற்றின்றிக் கொடுத்துக் கொடுத்து இன்பம் காண்பவருமான திரு சதாசிவம், எம். எஸ்.ஸின் இசை சமூகப் பணிகளுக்கு உதவவே பயன்பட வேண்டும் என்பதில் கருத்தாக இருக்கிறார்.

அடக்கத்தின் சிகரமாக இருக்கும் திருமதி எம். எஸ். உபசரிப்பதற்கென்றே பிறந்த பெருமகள். இந்தியப் பெண் தர்மத்தை அரிதிலும் அரிதாகக் காத்து, எல்லையில்லாத பதிபக்தி கொண்டு திகழ்கிறார்.

மனித சக்தியால் விவரிக்க முடியாத ஒரு தெய்விகக் கலை பெற்ற ஸ்ரீமதி எம்.எஸ். பாடும் போது தெய்விகக் கலையைக் கேட்கிறோம். அவரது நாற்பது வருடப் பொதுநல சேவையைப் பாராட்டிப் பிலிப்பைன்ஸ் நாட்டின் அகில உலகப் பரிசாகிய ''மாக்—ஸே—ஸே'' விருது அவருக்குக் கிடைத்தது. அதுவும் 1974-ம் ஆண்டுதான் முதன் முதலில் பொதுநலச் சேவைக்காக இப்பரிசு அறிவிக்கப் பட்டது. அந்த முதல் ஆண்டே அது ஸ்ரீமதி எம்.எஸ்.ஸுக்குக் கிடைத்தது. பரிசுத் தொகையான 10,000 டாலரையும் ஸ்ரீமதி எம்.எஸ். அறப் பணிகளுக்கு அர்ப்பணித்தார்.

66-ம் ஆண்டு ஐ. நா. சபையில் விஜயதசமி யன்று எம். எஸ். அவர்களின் ''சங்கீத வாழ்வுக்கு'', ''பட்டாபிஷேகம்'' நடந்ததென்றால், 74-ம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டில் தில்லை நடராஜரின் மகாபிஷேக நன்னாளிலே, எம். எஸ். அவர்களின் ''அறப்பணி வாழ்வுக்கு'', ''மகுடாபிஷேகமே'' நடந்தது.



இந்திய நாட்டிலிருந்து உலகத்தின் பல நாடுகளுக்கும் ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் பண்பாட்டுத் தூதராக இவ்விசை என்னும் புஷ்ப விமானத்திலே ஏறிச் சென்று பணியாற்றியுள்ளார்.

கர்நாடக சங்கீதத்தின் பெருமையை ஓங்கச் செய்து, தேனினுமினிய தமிழும், காதுக்கினிய தெலுங்கும், சம்ஸ்கிருதமும் உலகமெல்லாம் பரப்பி, இந்திய நாடு வழங்கும் இறையுணர்வுடன்கூடிய சங்கீத முறைகளுக்கு இணையாக வேறு எந்த நாட்டின் சங்கீதமும் உலகம் தோன்றியது முதல் இருந்ததும் இல்லை, இனி இருக்கப் போவதும் இல்லை என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்.

பக்தி மார்க்கம் நிறைந்த பாடல்களைப் பாடி இறைவனோடு ஐக்கியமாகி நம்மையும் ஐக்கியப்படுத்தி விடுகிறார். க்ஷண நேரமும் உறங்காத இறைவனுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடிப் புண்ணியம் பெற்றார். வேங்கடேச சுப்ரபாதம், காமாட்சி சுப்ரபாதம் ஆகியவற்றுடன் ஸ்ரீ விஷ்ணு சகஸ்ர நாமமும் இன்று எங்கும் ஒலிக்கின்றது.

சங்கீத கலாநிதி, இசையரசி, இசைப் பேரறிஞர், பத்மபூஷண், பத்மவிபூஷண் பல டாக்டரேட்டுக்கள் முதலிய பட்டங்களையும், விருதுகளையும் புகழ்மாலைகளையும் பெற்றுச் சர்வதேசப் புகழோடு விளங்கும் எம். எஸ். தமிழகத்தின் புகழை, பாரதத்தின் புகழை இந்தியப் பெண் தர்மத்தின் புகழை இமயத்தில் ஏற்றி விட்டவர்.

பட்டம், பதவி, அந்தஸ்து, புகழ் யாவற்றையுமே கடந்து நிற்கும் உலகம் போற்றும் ஏழிசைச் செல்வி, எம். எஸ். அவர்களும், இத்தகைய ஒப்புயர்வற்ற சிறப்புகளெல்லாம் அவர் பெற மூல காரணகர்த்தாவாக இருக்கும் திரு சதாசிவம் அவர்களும், பல்லாண்டு காலம் நீடூழி வாழ, எல்லாம் வல்ல நாதப் பிரம்மமாகிய இறைவன் அருள் புரிவாராக!

எண்ணத்தில் நிலைக்கின்ற தேவ கானம்
இளம்மொழிகள் மதம்நிறங்கள் கடந்த நேசம்,

கண்ணபிரான் குழலிசை போல் பொழிவதாலே
கலைபுலவில் தனியாட்சி செய்வார், என்றும்

பண்ணிசைக்கு நடமாடும் தெய்வம், இசையில்
பாரதத்துக் கோப்பில்லை என்று செய்த

தண்ணிலவு, தானத்தின் ஊற்றும் எம்மெஸ்
சதாசிவத் துணையோடும் நீடு வாழ்க!

ராஜாஜி சிந்தனை

குழாய்க்காரனும் தத்துவ ஞானியும்

1968-ல் அமெரிக்க அமைச்சரவையிலிருந்து ராஜினாமா செய்த ஜான் டபிள்யூ கார்ட்னர் பின்வருமாறு கூறுகிறார். அவர் வழங்குவது மிகச்சிறந்த அறிவுரை.

மனிதன் எந்தக் காரியத்தைச் செய்தாலும் சரி, அதனைச் சீராகவும் செய்யலாம், மோசமாகவும் நிறைவேற்றலாம். ஒரு காரியம் சிறப்பான முறையில் நிறைவேற்றப்படுவதை நாம் போற்றக் கற்க வேண்டும். அது எவ்வளவு சாமானிய காரியமாயினும் சரி பாராட்ட வேண்டும். அதே போல் ஒரு காரியம் மோசமான விதத்தில் நிறைவேற்றப்படுவதை — அது எவ்வளவு உன்னதக் காரியமாயினும் சரி — சாட வேண்டும். திறமைசாலியான குழாய் ரிப்பேர் செய்பவன் திறமைக் குறைவான தத்துவ ஞானியை விடச் சிறந்தவன்; பாராட்டுக்குரியவன். இதை உணராமல், திறம்படக் குழாய் ரிப்பேர் செய்தலை ஏளனமாய்க் கருதுவதும் தத்துவ ஞானத்தில் திறமைக் குறைவைப் பொறுத்துக் கொள்ளுதலும் ஒரு சமுதாயத்தில் வழக்கமாகி விட்டால் அங்கே திறமைசாலியான குழாய் ரிப்பேர்க்காரனும் தோன்றமாட்டான்; தத்துவ மேதையும் தோன்ற மாட்டான்! — ராஜாஜி நினைவு மலர்.

கோரக்பூரில் மதுரான் கரீப் தாந்திதாஸ் உடல் நலிவுற்ற போது தம்முடைய ஊரிலிருந்து பல மைல்களுக்கு அப்பாலிருக்கும் அயோத்தி அனுமார் கோவிலுக்கு வருவதாக வேண்டிக் கொண்டார்.



நெடுஞ்சாண்கிடையாகத் தெருவில் நமஸ்கரிப்பார். கை எட்டிய தூரத்தில் ஒரு கோடு போட்டு எழுந்து அங்கு கால் வைத்து மறுபடியும் நமஸ்கரிப்பார்; மறுபடியும் கோடு, நமஸ்காரம் . . . இப்படியாகத் தம் பிரயாணத்தை அவர் மேற்கொண்டுள்ளார். சாதாரண மனிதர்களை நமஸ்கரிக்கக் கூடாது என்பதால் இவர் அருகில் கூடவே ஒரு நடமாடும் அனுமார் கோவிலும் போகிறது! பிளிட்ஸ்—மூத்து

கலிபோர்னிய டாக்டர் ராபர்ட் என்பவர் குழந்தைகளுக்கான எலும்பு முறிவு சிகிச்சையில் மனத்தத்துவ முறையை வெற்றிகரமாகக் கையாளுகிறார். எலும்பு முறிவுக்காகச் சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கு, காலிலோ கையிலோ கட்டப்பட்டிருக்கும் பாண்டேஜின் மீது, அந்தக் குழந்தைக்குப் பிடித்த மிருகத்தின் உருவத்தை அழகாக வரைந்து விடுகிறார். குழந்தை படத்தைப் பார்த்துக் கொண்டு வேதனையை மறந்து விடுகிறது; சீக்கிரம் குணமும் அடைகிறது.

— மெடிகல் வொர்ல்ட்-சாமி



ராசி பட்டுப்புடவைகள்

தீபாவளி முழுமை பெற !



ராதா சில்க் எம்போரியம்
சந்நிதித் தெரு,
மயிலாப்பூர்
சென்னை-600004

29, கோவிந்த் மஹல்
86-B, மரைன் டிரைவ்
பம்பாய்-400002

ராதா சில்க்ஸ்
தன் பில்டிங்ஸ்
மவுண்ட் ரோடு,
சென்னை-600002

EP-RASI-127

தீபாவளி வரை ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு

சாதாரணப் பவுடர்களால் துலக்கும்போது
பிசுக்குகள் பின்தங்கிவிடக் கூடும்.



தூய்மை பளிச்சிடத் துலக்குவது விம்
50% அதிக நுரைக்கும் சக்தி படைத்தது

துலக்குவதற்கான வேறெந்தப் பவுடரையும் விட மிக அதிக அளவு டிட்டர்ஜெண்ட் அடங்கியது விம். ஆகவேதான், அளவு-கடந்த நுரைவளத்துடன் பிசுக்குகளையும் கறைகளையும் அற்ப நொடியில் அகற்று-கிறது. பொடிக் கசடுகள் ஏதும் பின்தங்க விடுவதில்லை.

மேலும், மிக மிக நைஸான பவுடராக இருப்பதால் கீறலே இல்லாத மழமழப்புக்கு உறுதிதருகிறது. தொட்டதையெல்லாம் தூய்மை பளிச்சிடத் துலக்குவது விம்.

பிசுக்கு இல்லை! கீறல் இல்லை! கசடு இல்லை!



விம் மதிப்பு
உயர் மதிப்பு
இந்தப் பேக்
வாங்கினால் உமக்கு
25% க்கும் அதிகமாக
மிச்சமாகும்.

மாசில்லாத பளபளப்பை வீசிட வைப்பது விம்.

இந்துஸ்தான் லீவரின் இத் தரமான தயாரிப்பு 600 கிராம் மற்றும் 2.5 கிலோ பேக்கிங்குகளில் கிடைக்கிறது.
உதிரியாக ஒருபோதும் கிடைப்பதில்லை.

லிண்டாஸ்-V. 47-140 TH

அத்தியாயம் 8

பூர்வ பாவம்; பிரத்யட்ச புண்ணியம்

நடந்தவற்றைச் சேரமான் விவரிக்க விவரிக்க நாராயண நம்பூதிரியே திகைப் போடு கேட்டிருந்தார்.

கட்டிலில் சாய்ந்தபடியே மார்த் தாண்டவர்மனும், அவன் அருகில் அமர்ந்தபடி மெல்லிளங்கோதையும், சுவரில் சாய்ந்து தலைகுனிந்து நின்றபடி பத்மாவதியும், கீழே மண்டியிட்டு உட்கார்ந்தபடி தாவனி சகோதரிகளும் அந்தக் கதையைக் கேட்டுக் கொண் டிருந்தார்கள்.

உரிமை மிக்க ஒரு சகோதரியாகப் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள் தரங்கிணி.

உதயகிரி மலையில் இப்படி ஒரு ராஜாங்கம் நடப்பது தனக்கே தெரி யாமல் இருந்ததை எண்ணி நாராயண நம்பூதிரி வெட்கப்பட்டார்.

திருவஞ்சைக் களத்தோடு வேணாடு சேர்க்கப்பட்டு அவன் ஒரு பிரிவாக ஆன பிற்பாடு, அதன் பழைமை நிலைகளைத் தாம் ஆராயாதது அவருக்கே வெட்க மாக இருந்தது.

நம்பூதிரி ஏதோ ஒரு சுலோகத்தை முணு முணுத்தபடி அவரை வணங்கினார்.

'திருமேனி' என்றும், 'தம்பிரான் சுவாமி' என்றும் மரியாதையோடு அழைக்கப்படும் நாராயண நம்பூதிரியே தம்மை மறந்து ஒருவரை வணங்குகிறார் என்றால், மற்றவர்கள் விழுந்து கும்பிட மாட்டார்களா !

ஆம்; வந்திருப்பவர் யாரென்று கூடத் தெரியாமல் சேரமான் உட்பட அனைவரும் அவர் காலில் விழுந்து கும் பிட்டார்கள்.

''தென்னாடெங்கும் புகழ்பெற்ற ராஜசேகர சுவாமிகள் இவர்தான்.''

கொங்கு மண்டலம், சோழ மண்ட லம், பாண்டிய மண்டலம் மூன்றுக்குமே நிமித்திகர் இவர்தான்.

சேரமான் காதலி

கண்ணதாசன்

கதையைச் சொல்லி முடித்தபோது தான், தரங்கிணி தன் கணவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் நியாய மான காரணத்தை அறிந்து, பத்மா வதி ஒரு பெருமூச்சு விட்டாள்.

அரசன் இல்லாத வஞ்சி இப்போது தான் அவர்கள் கவனத்துக்கு வந்தது. அது மட்டும் அல்ல; பூஜியானுவின் நினைவும் சேரமானுக்கு வந்து விட்டது.

காயம் ஆறிக் கொண்டிருந்த நிலை யில் மார்த்தாண்டவர்மன் அவர்களை வழியனுப்பத் தயாரானான்.

எல்லோரும் புறப்பட்டுக் கொண் டிருந்த போது வாசலில் ஒரு பல்லக்கு வந்து நின்றது.

பல்லக்கிலிருந்து சைவத் திருமேனி கொண்ட ஒருவர் இறங்கினார்.

அவரைக் கண்டதும் சாதாரண மாக யாரையும் வணங்காத நாராயண

ஒவ்வொருவருடைய முற்பிறப்பை யும் ஊழ்வினையையும் நாடிச் சாத்திரத் தின் மூலம் ஆராய்ந்து சொல்லக்கூடிய வல்லமை இவருக்கு உண்டு.

மன்னர்களே பணி செய்யக்கூடிய மகான் இவர்.

''புறப்படும் நேரத்தில் இவரை நாம் எதிர்கொண்டது நல்ல சகுனமே!'' என்று நாராயண நம்பூதிரி சேரமானுக் கும், மார்த்தாண்ட வர்மனுக்கும் அவரை அறிமுகப்படுத்தி வைத்தார்.

சேரமானைப் பார்த்து, ''அவசரமா?'' என்று கேட்டார் ராஜசேகர சுவாமிகள்.

''அப்படி ஒன்றும் இல்லை....'' என்று இழுத்தார் சேரமான்.

''உங்களுடன் நான் தனியாகப் பேச வேண்டும்'' என்றார் நிமித்திகர்.

''உள்ளே சென்று அமரலாமே...?'' என்றார் நாராயண நம்பூதிரி.

புறப்பட்டவர்கள் மீண்டும் உள்ளே திரும்பினார்கள்.

அரண்மனை ஆலோசனை மண்டபத்தில் தரையிலே புலித்தோலை விரித்து அதன் மீது அமரப் போனார், ராஜசேகர சுவாமி.

நாராயணநம்பூதிரி அவரைத் தடுத்து உயரமான இரண்டு சலவைக் கல் சதுக்கங்களைத் தூக்கி வரச் செய்து, அதன் மீது அமரச் செய்தார்.

''மன்னவர் தனியாக இருக்க வேண்டுமா? எல்லோரும் இருக்கலாமா?'' என்று கேட்டார் நாராயண நம்பூதிரி.

''அவர்தம் குடும்பத்தினர் இருப்பதில் எனக்கு மறுப்பில்லை'' என்றார் ராஜசேகர சுவாமி.

அனைவரும் சுற்றிலும்அமர்ந்தார்கள்.

''அரசனே! என் ஐயன், அங்கிங்கெனாதபடி எங்கும் ஒளி வீசும் பரம்பொருள், உன்னைச் சந்திக்கும்படி எனக்குக் கட்டளை இட்டான். அதுவே என் வருகையின் நோக்கம்'' என்றார், சுவாமி, சேரமானைப் பார்த்து.

''நல்லது, சுவாமி!'' என்று மட்டும் சொன்னார் சேரமான்.

''நான் ஒரு சித்து வேலைக்காரனல்ல. ஆனால் உன் எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதைச் சொல்ல என்னால் முடியும். நான் கடவுளின் அவதாரம் அல்ல; ஆனால் முற்பிறப்பில் உன் கதை என்ன என்பதை நாடி சாத்திரத்தின் மூலம் என்னால் உணர்த்த முடியும். கேள்!.... இரண்டு நாட்கள் நீ ஒரு மலையில் இருந்தபின் இறங்கி வந்திருக்கிறாய்.... குறிப்பிட்ட ஒரு நாளில் நீ அந்த மலைக்குச் செல்ல வேண்டும் என்று உன் முற்பிறப்பில் வகுக்கப்பட்டிருந்தது. அந்த விவரம் உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார் ராஜசேகர சுவாமி.

''தெரியாது, சுவாமி!'' என்றார் சேரமான்.

''தெரிந்து கொள்ள விரும்புகிறோம்'' என்றார்நாராயண நம்பூதிரி.

மற்றும் ஒரு கதை கேட்க எல்லோரும் தயாரானார்கள்.

ராஜசேகர சுவாமி தொடங்கினார்.

''கடல் கொள்ளப்பட்ட கபாடபுரத்தைப் பற்றி உனக்குத் தெரியும். அந்தக் கபாடபுரத்தில் தேவதத்தன் என்றொரு வைசியன் இருந்தான். அந்த வைசியனுடைய ஒரே குமாரனாக நீ அவதரித்தாய். கால சூரியன் என்று உனக்குப் பெயரிட்டார்கள். நவமணிகளால் உன்னை இழைத்தார்கள். கடல் வாணிகமும், கூல வாணிகமும் செய்து கொண்டிருந்தவன் தேவதத்தன். வணிகர்களுக்கெல்லாம் தலைவனாகக் காட்சி அளித்தவன் அவன். ஏராளமான நாவாய்களுக்குச் சொந்தக்காரன்.

ஆகவே, செல்வத்தில் உன்னை வளர்த்தான். இல்லத்திலேயே ஒரு குருவை வைத்துக் கல்வி தந்தான். செல்வச் செருக்கில் பாலப் பருவத்திலேயே பிறரைத் துன்புறுத்தும் வேடிக்கை விளையாட்டுக்களில் நீ ஈடுபட்டாய். மண் பானைகளில் தண்ணீர் எடுத்துச் செல்லும் இளம் பெண்களை அந்த வாளிகளை உடைத்துத் துன்புறுத்தினாய். அழகான பெண்களின் ஆடைகளை நடுச் சாலைகளில் களைந்து அவர்களை அவமானப் படுத்தினாய். ஈடு இணை யில்லாத ஒரு வணிகனின் மகனல்லவா நீ! கபாடபுரத்தில் ஒவ்வொருவரும் கடனுக்காக உன் தந்தையிடம் கைகட்டி நின்றதால்



உன்னைக் கோபித்துக் கொள்ளக்கூட அவர்களால் முடியவில்லை.

இந்த நிலையில் இருபது அகவை கொண்ட இளைஞனாக நீ மாறினாய். கபாடபுரத்தில் 'கோதத்தன்' 'பூதத்தன்' என்று இரண்டு வணிகர்கள் இருந்தார்கள். அவர்களும் உங்கள் இனத்தைச் சேர்ந்தவர்களே. அதிலே கோதத்தனுக்கு **'கதலி'** என்றொரு மகளும், **'அநுபூதி'** என்றொரு மகனும் இருந்தார்கள். பூதத்தனுக்குப் **'பவளவல்லி'** என்றொரு மகள் மட்டும் இருந்தாள். கபாடபுரத்திலேயே மாடங்கள் கொண்ட வீடுகள் வணிகர் தெருவிலேயே இருந்தன. நீ அடிக்கடி கோதத்தன் இல்லத்தின் வழியாகச் செல்வது வழக்கம்.

வாலிபத்தின் துடிப்பிலே வாணிபத்தை மறந்த நீ கோதத்தன் மகள் கதலியின் மீது காதலுற்றாய். கதலி பேரழகி. செக்கச் சிவந்த திருமேனி. செதுக்கி எடுத்த திருமுகம். அலங்காரங்களில் அவள் விருப்புடையவள் அல்ல. எளிமையான ஆடை அணி



மணிகளே அணியக்கூடியவள். கற்பெனும் நகையே கடவுள் அளித்த நகை என்று கருதுபவள். 'உன் குறும்புத்தனமான போக்கு அவளுக்கும் பிடித்திருந்தது. ஆகவே அவளும் உன் மேல் காதலுற்றாள். இன்ன இடத்தில் சந்திப்பது என்று இருவரும் பேசிக் கொள்ளாமலேயே இயற்கையான சந்திப்பு நிகழ்ந்து கொண்டேயிருந்தது.

ஒரு நாள் கபாடபுரத்துக் கடற்கரையில் அவளை நீ சந்தித்தாய். சந்திர கிரகணத்துக்காக அவள் நீராட வந்திருந்தாள். கடலில் அவள் நீராட இறங்கும்போது அவளை நீ பார்த்துக் கொண்டிருந்தாய். சற்று நேரத்துக்கெல்லாம் துள்ளி வந்த அலை அவளை அடித்துக் கொண்டு போகத் தொடங்கிற்று. நீ உயிரையும் மதியாது கடலில் நீந்தி அவளைக் கரையேற்றினாய். நனைந்திருந்த அவளது அங்கங்களைத் தொட்டுத் தூக்கி நீ கரையேறுவதை அவளது சகோதரன் அநுபூதி பார்த்துக்கொண்டிருந்தான். கரையில் அவளைக்கொண்டு வந்து போட்டு, பாதங்களைத் தேய்த்து அவள் உடலெங்கும் நீ சூடேற்றுவதை அவன் கவனித்தான். ஆத்திரம் தாங்காத அநுபூதி உன் அருகில் வந்து

ஒரு நாள் ஸ்டாலின், மா-சே-துங்கிற்கு நடைமுறையில் கம்யூனிசத்தை எவ்வாறு கொண்டு வருவது என்பதைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார்.



ஸ்டாலின்: தோழரே! ஒரு பூனை சிறிது மிளகு சாப்பிட நீங்கள் என்ன செய்வீர்கள்?

மா.: இரண்டு வழிகள் உள்ளன. பூனையின் வாயில் மிளகைத் திணிக்கலாம்; அல்லது ஒரு மீனின் வயிற்றில் மிளகை நிரப்பி அதை அந்தப் பூனையிடம் கொடுக்கலாம். மீனுக்கு ஆசைப்பட்டு மிளகையும் விழுங்கிவிடும்.



ஸ்டாலின்: இரண்டு வழிகளுமே சரியல்ல. முதல் வழி திணிப்பதாக உள்ளது. இரண்டாம் வழி ஏமாற்றுவது. ஆனால் நாம் மக்கள் மீது எதையும் திணிப்பதோ அல்லது அவர்களை ஏமாற்றுவதோ இல்லையே!

மா.: அப்படியானால் நீங்கள் எவ்வாறு செய்வீர்கள்?

ஸ்டாலின்: சுலபம்! மிளகைப் பூனையின் வாலில் தடவ வேண்டும். இது உடனே அதற்கு எரிச்சலை உண்டாக்கும். அதனால் உடனே பூனை தன் வாலை நக்கிக் கொடுக்கும். இவ்வாறாகப் பூனை தானே விரும்பி மிளகைத் தின்றுவிடும். -க. சந்திரசேகரன்

(கற்பனைக் கதை)

மாறி மாறி உன் கன்னங்களில் அறைந்தான்.

அப்போது கதலி கண் விழித்தாள்.

அவன், அவள் கையைப் பற்றிப் பரபரவென்று இழுத்துக் கொண்டு தன் இல்லம் நோக்கிச் சென்று விட்டான்.

பெற்றோருக்குக் கட்டுப்பட்ட அந்தப் பேதை பிறகு உன்னைப் பார்க்க முடியாமல் அறைக்குள்ளே அடைக்கப்பட்டாள்.

அவள் அடைக்கப்பட்டிருந்த அறைக்கு எதிரே ஒரு பாம்புப் புற்று வளர்ந்தது. அதில் இரண்டு கருநாகங்கள் குடி புகுந்தன. அவையே அவளுக்குக் காவலாகவும் அமைந்தன.

நீ விரக வேதனையில் துடித்தாய்.

ஆனால் அவளோ காதலில் கற்பியல் போடு இருந்தாளே தவிர, விரகதாபத்துக்கு ஆளாகவில்லை.

வெறி உணர்வு தாங்க முடியாத நிலையில் ஒரு நாள் இரவு சில ஆட்களை அழைத்துக் கொண்டு வாளும் கையுமாக, அவள் அடைக்கப்பட்டிருந்த இடத்துக்கு நீ சென்றாய்.

அப்பொழுது கோதத்தனும், அநுபூதியும் இல்லத்தில் இல்லை. கடல் வாணிபத்துக்காக அவர்கள் கடல் தாண்டிச் சென்றிருந்தார்கள்.

உன்னையும், அந்த வீரர்களையும் அங்கே எதிர்த்து நின்றவை அந்தக் கருநாகங்கள்தான்!

அந்தக் கருநாகங்களை நீ வெட்டிக் கொன்றுவிட்டாய்.

கதலியை நீ கைப்பிடித்துத் தூக்க முயன்றபோது அவள் மறுத்தாள்.

களவியல் என்னும் காந்தர்வ மணம் பற்றி அவள் அறிவாள் எனினும், அதை அவள் விரும்பவில்லை. தடுத்தாள்; திமிறினாள். நீ அவளைப் பலவந்தமாக ஒரு தனி இல்லத்துக்குக் கொண்டு போய் விட்டாய்.

'உங்களை நான் நேசிக்கிறேன்; ஆனால் முறைப்படி திருமணம் இல்லாமல் ஒருவரையொருவர் தொடுவதை நான் விரும்பவில்லை. என்னை விட்டு விடுங்கள்' என்று அவள் கெஞ்சினாள்.

அவள் அழகைப் பார்க்கப் பார்க்கக் காமவெறி உன் தலைக்கு ஏறிற்று. என்ன செய்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் அவளோடு நீ உடலுறவு கொண்டு விட்டாய். மயங்கிய நிலையில் மூர்ச்சையடைந்து விட்டாள் அந்தப் பேதை.

மறு நாள் காலையில் இல்லம் திரும்பிய கோதத்தனும், அநுபூதியும் கதலியைக் காணாமல் துடித்தார்கள். கருநாகங்கள் கொல்லப்பட்டுக் கிடப்பதைக் கண்டார்கள்.

உன்னைத் தவிர, வேறு யாரும் அவளைத் தூக்கிச் சென்றிருக்க முடியாது என்று முடிவு கட்டினார்கள்.

உன்னிடம் பேசிப் பயனில்லை என்று உன் தந்தை தேவதத்தனிடம் வந்து முறையிட்டார்கள்.

தேவதத்தன் உன்னை அழைத்து, கதலி இருக்கும் இடம் கேட்டான். நீ, ''எனக்குத் தெரியவே தெரியாது'' என்று மறுத்துவிட்டாய்.

தேவதத்தன் அதை நம்பவில்லை.

உனக்கும் உன் தந்தைக்கும் வாக்குவாதம் மூண்டது.

கடைசியில் தன் செல்வத்தில் உனக்குப் பங்கில்லை என்று, உன் தந்தை உன்னை வீட்டை விட்டுத் துரத்தினான்.


ஆத்திரம் அடைந்த நீ அவனையும் வெட்டிக் கொன்று விட்டாய்.

கபாடபுரத்து மன்னனிடத்தில் உங்களுக்கு இருந்த செல்வாக்கினாலே அப்படிச் செய்தும் நீ தப்பினாய்.

தந்தையைக் கொன்ற கையோடு நீ நேரே கதலி வைக்கப்பட்டிருந்த இல்லத்துக்கு ஓடினாய். அங்கே படுத்த படுக்கையாகக் கிடந்தாள் கதலி.

அவள் உன்னை வெறுத்துப் பேசவில்லை. அன்போடு பக்கத்தில் அமரச் சொன்னாள். நீ அமர்ந்தாய்.

அவள், 'நான் மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறேன்' என்றாள். 'இனி ஒரு பிறவி நாம் எடுத்தால், இந்தக் காதல் உணர்வு நமக்கு வேண்டாம். நாம் சகோதரர்களாக இருப்போம்' என்றாள்.





பம்பாய் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷனில் பணிபுரியும் V. ராஜாராமின் குமாரத்தி சௌபாக்கியவதி ராஜேஸ்வரிக்கும், ஜெம்ஷெட்பூர் (TISCO) ஸ்ரீ K.R.V. சுப்ரமணியனின் சகோதரரும் (Late) ராமச்சந்திரய்யரின் புத்திரருமான சிரஞ்சீவி K. R. தியாகராஜனுக்கும் (Air-India, Calcutta) 10-9-76 அன்று பம்பாய் முதுங்கா பிரம்மபுரி ஹாலில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்

காப்பி அடிக்க முடியாதது!



ஜீவனுள்ள ஒரே காபி

நரசூஸ்

"தெர்மலோ" காபி

''தெர்மலோ'' முறை தயாரிப்பு
நரசூஸ் காபியின் தனிச் சிறப்பு.

நற்சுவை மிகுந்தது.
நறுமணம் கொண்டது.
நாளும் புதியது.
நரசூஸ் காபி!

தயாரித்த 24 மணி
நேரத்திற்குள்
தமிழகத்தில் உள்ள எங்கள்
எல்லா கிளைகளின் மூலம்
வினியோகம்
செய்யப்படுகிறது.

ADWAVE/NCC 410 TAM



நரசூஸ் காபி கம்பெனி.
சேலம்-636 007
கிளைகள்:- பாண்டிச்சேரி &
தமிழகமெங்கும்.

உன்னுடைய இடை வாளையே உருவித் தனது இடது கையைக் கிழித்துக் கொண்டு அந்த ரத்தத்தால் உனக்குத் திலகமிட்டாள். அவள் ஆவி பிரிந்தது.

அதன் பிறகு உன் கதை வேறுவிதமாகத் தொடர்ந்தது. அதனைத் தொடர்ந்து சொல்கிறேன்.

உனது தந்தை தேவதத்தன்தான் மலைமீது அவதரித்து அஞ்சலவேள் என்ற பெயரோடு உதயகிரியை ஆண்டவன்.

'சகோதரர்கள் ஆவோம்' என்று உன்னிடம் வேண்டிக் கொண்டாளே, அந்தக் கதலிதான் அஞ்சலவேளுக்கு மகளாகப் பிறந்த தரங்கிணி.

முதன் முதலில் கடல் அலைகளில் உங்கள் உடல் சந்திப்பு நிகழ்ந்ததால் இயற்கையாகவே அவளுக்குத் தரங்கிணி என்ற பெயர் வைக்கப்பட்டு விட்டது.

நீ உன் தந்தையை வெட்டியபோது, 'எந்தப் பிறவியிலும் நாம் சந்திக்கமாட்டோம்' என்று தேவதத்தன் சொல்லி இருந்தான். அதன் விளைவு தான் அஞ்சலவேள் மலைமீது உயிரோடிருந்தும் நீ சந்திக்க முடியவில்லை.''

—நிமித்திகர் ராஜசேகர சுவாமிகள் சொன்ன கதையை அனைவரும் வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

தரங்கிணி, சேரமானின் கால்களில் விழுந்து வணங்கினாள்.

இப்போது நாராயண நம்பூதிரி, மார்த்தாண்டவர்மன், மெல்லிளங்கோதை எல்லோருக்கும் பூர்வ ஜன்மத்தில் தாங்கள் யார் என்பதை அறிய ஆவல் வந்து விட்டது.

''நான் யார் சுவாமி? நான் யார்?'' என்று ஒவ்வொருவரும் கேட்டார்கள்.

''அனைத்தையும் பிறகு சொல்கிறேன். சேர வம்சத்தையே மாற்றப் போகும் ஒரு குழந்தை ஓர் அந்நியப் பெண்ணின் கர்ப்பத்தில் உருவாகிக் கொண்டிருக்கிறது. அதை இப்போதே சொல்லவா, பிறகு சொல்லவா?'' என்று கேட்டார் சுவாமி.

சேரமான் உடலெல்லாம் நடுங்கிற்று.

(தொடரும்)







குட்மார்னிங் டாக்டர்!

இருபத்தாறு வயது கமலம், தாயின் தோளைப் பற்றியவாறு மெல்ல நடந்து வந்து பெஞ்சில் அமர்ந்ததும் கூறினாள்: ''ஆறு மாத மாகத் தலை முழுகாமல் இருக்கிறேன். சிறுநீர் இறங்குவது மிகக் குறைவாக இருக்கிறது. நிறைய பார்லி கஞ்சி குடித்தும் பலனில்லை. சிறுநீர் கழிக்கும்போது எரிச்சலும் இருக்கிறது. பசி, தாகமும் அவ்வளவாக இல்லை. தினமும் காலையில் எழுந்திருக்கும்போதே மிகக் களைப்பாக இருக்கிறது. தலைவலி தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது. இரண்டு மூன்று தடவை தலை சுற்றலும் ஏற்பட்டது. கண் பார்வையும் சற்று மங்கலாக இருக்கிறது.''

கமலத்தைப் படுக்க வைத்து நான் பரிசோதனை செய்யும்போது அவள் தாயார் கூறினார் : ''அவள் கால்களைப் பாருங்கள், டாக்டர். நன்றாக வீங்கியிருக்கிறது. முதல் பிரசவம் என்பதால் கவலையாக இருக்கிறது.''

''சூலுற்ற பிறகு உங்கள் உடம்பைப் பரிசோதித்துக் கொண்டீர்களா ?'' என்று கமலத்தைக் கேட்டேன்.

''இல்லை, டாக்டர்! நான் கிராமத்தில் இருந்ததால் அதற்கு வசதியில்லை'' என்றாள்.

சிறுநீர்ப் பரிசோதனையின் முடிவு நான் எதிர்பார்த்தபடியே இருந்தது. சிறுநீரில் ஆல்புமின் (ஒரு வகைப் புரதம்) மிக அதிகமாக இருந்தது. இரத்த யூரியா மிகுதியாக இருந்ததன் விளைவாகச் சிறுநீரகம் பாதிக்கப் பட்டிருந்தது. சிறுநீரை 'கல்ச்சர்' (Culture) செய்ததில் 'பாக்டீரியா' கிருமிகள் இருப்பதும் தெரிய வந்தது. கமலத்தின் இரத்த அழுத்தமும் மிகுதியாக இருந்தது.


''உங்கள் மகளை நீங்கள் இன்றே மருத்துவ மனையில் சேர்த்துவிட வேண்டும்'' என்ற எனது யோசனைக்கு இணங்கினாள் கமலத்தின் அன்னை.

''கமலத்துக்கு என்ன வியாதி? வீட்டிலிருந்து மருந்து சாப்பிட்டால் போதாதா ?''

'' இதற்கு 'டாக்ஸீமியா' (*Toxaemia*) என்று பெயர். நோயாளிக்குக் கொடுக்கப் படும் உணவில் உப்பு சேர்ப்பதை நிறுத்த வேண்டும். சிறுநீர் எளிதாகவும் தாராளமாகவும் வெளியேற மருந்து கொடுக்க வேண்டும். தினமும் காலை, மாலை இரு வேளைகளும் இரத்த அழுத்தத்தைச் சோதித்து அறிய வேண்டியது அவசியம். நோயாளி கர்ப்பிணியாதலால் இயல்பாகவே வாரா வாரம் எடை கூடுதலாகும். அதைக் கருத்தில் கொண்டு தேவைக்கு அதிகமாக எடை கூடுதலாகாமலும், போதிய அளவு சத்து உள்ளதாகவும் உணவு கொடுக்க வேண்டும். சிலருக்கு இந்த நிலையில் வலிப்பு (*Fits*) வரவும் கூடும். அப்படி வராமல் இருக்கவும், வந்தால் உரிய சிகிச்சை அளிக்கவும் மருத்துவ மனையில்தான் வசதி உண்டு.''

'' தலைப் பிரசவமானால் வலிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமா ?''

'' அப்படியில்லை. ஏற்கனவேயே பல குழந்தைகளைப் பெற்றுள்ள தாய்மார்களுக்கும் வரும் வாய்ப்பு உண்டு — போஷாக்குள்ள உணவு சூலுற்ற நிலையில் சாப்பிடாவிட்டால், பிரசவத்துக்கு முன்னரும், பின்னரும், பிரசவ நேரத்திலும்கூட வலிப்பு ஏற்படலாம். பிரசவிக்க இருக்கும் தருவாயில் வலிப்பு வந்தால் தாயின் மூளையும் பாதிக்கப்படலாம். அப்படி ஏற்படலாம் என்று தோன்றினால், மருத்துவரே வலுக் கட்டாயமாகக் குழந்தையை உரிய காலத்துக்கு முன்பே வெளிக் கொணரும்படி (*Induced Labour*) யாகலாம். தாயின் உயிரைக் காப்பாற்ற இது அத்தியாவசியமாகிவிடலாம். 'சிசேரியன் ஆபரேஷன்' செய்து குழந்தையை எடுக்கும்படியும் நேரிடலாம். பெரும்பாலும் இந்நிலையில் குழந்தை உயிர் பிழைப்பது அரிது.....''



கர்ப்ப வாசத்தில் இருக்கும் குழந்தையை எக்ஸ்ரே படம் எடுப்பது நல்லதல்ல. எக்ஸ் கதிர்கள் குழந்தையைப் பாதிக்கலாம். எனவே இப்போது காதுக்குக் கேளாத ஒலி அலைகளைச் செலுத்தி (Ultra Sonic) கருவின் உருவைத் திரையில் காண்பிக்கும் கருவியை அமெரிக்காவில் உருவாக்கியிருக்கிறார்கள்.

''இத்தகைய ஆபத்துக்களைத் தவிர்க்க, சூலுற்ற பெண்மணிகள் என்ன முன் எச்சரிக்கையை மேற்கொள்ளலாம்?''

''மூன்றும் மாதத்திலிருந்தே மருத்துவரிடம் சென்று உடல் நிலையைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். சிறுநீர் குறைவாகப் போனால் தாமதியாமல் மருத்துவரிடம் செல்ல வேண்டும். பார்லி நீர் குடித்தால் சிறுநீர் வெளியேறிவிடும் என்று அலட்சியமாக இருந்துவிடக் கூடாது. பார்லி நீர் இதற்குரிய மருந்து ஆகிவிடாது. சிறுநீரில் ஆல்புமின் மிகுதியாகாமல் இருக்கிறதா, இரத்த அழுத்தம் மிகுதியாகாமல் உளதா என்று மருத்துவரின் மூலம் சோதித்து அறிந்துகொண்டு எச்சரிக்கையுடன் இருந்தால் 'டாக்ஸீமியா' போன்ற நோய் வராமல் தடுக்க இயலும்.''

டாக்டர் **வி. கனகவல்லி** கூறக் கேட்டு
எழுதியவர்: ஆர்.பி.

கர்ப்பிணிகள் கவனத்துக்கு...

[திரு மனோஜ்தாஸ், அவரது தாய்மொழியான ஒரியாவிலும், ஆங்கிலத்திலும் எழுதிப் புகழ் பெற்றவர். அவரது ஒரியா மொழி சிறுகதைத் தொகுதி ஸாகித்ய அகாதெமியின் 1972 ம் வருஷத்திய பரிசு பெற்றது. அரவிந்தரிடம் ஈடுபாடு கொண்டவர். அரவிந்தரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார். சாகித்ய அகாதெமி வெளியிட்டுள்ளது. தற்சமயம் புதுச்சேரியில் ஆங்கில ஆசிரியராகப் பணி புரிந்து வருகிறார்.]

இருபது வருஷங்களுக்கு முன் நடந்தது. அதை இப்பொழுது ஞாபகப்படுத்துவது, நகைச்சுவைக்காக அல்ல. அதாவது, அன்று எங்கள் ராஜ்யத்தில் மீன் வளம், நுண் கலை மந்திரியாக இருந்த பாபு வீர் கிஷோர் அவர்களையோ, அல்லது திரு மெஹ்ராணு அவர்களையோ கேலி செய்வது என் நோக்கமல்ல. அதற்கு மாறாக அவ்விருவரிடமும் இதுகாறும், அதாவது இருபதாண்டுகளாக எனக்கு இருந்து வரும் அனுதாபத்தை வாசகர்களிடம் பகிர்ந்து கொள்ளுவதற்காகத்தான் இதை ஞாபகப்படுத்துகிறேன்.

திரு மெஹ்ராணு பணக்காரர். எங்கள் கிராமத்தில் இருபது வீடுகள் உண்டு. அவற்றில் எல்லாம் வைத்து இவர் வீடுதான் பெரிய வீடு. பாரதம் சுதந்திரம் அடைந்தபோது, இவ்வீட்டுக்குச் சுண்ணாம்பு அடிக்கப்பட்டது. இதை, எங்கள் ஊர் சுற்றுப்புறமிருந்து வரும் மக்கள் ஏதோ நடக்காத அதிசயம் நடந்துவிட்டது போல் வியந்து பார்ப்பார்கள். ஐம்பது வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுது தானே முதல் தடவையாகச் சுண்ணாம்பு பூசப்பட்டிருக்கிறது!

திரு மெஹ்ராணு நல்லவர். அவர் வீடு என்றும், ''அடையா நெடுங் கதவு''. விருந்தாளிகள் வந்துவிட்டால் வயிறாரச் சாப்பாடு பண்ணி வைப்பதில் அவருக்கு அலாதியான திருப்தி. அதற்கு வசதியாக அவர் வீட்டுக் கொல்லையில் மீன் பண்ணைக் குட்டை உண்டு, பால் கொடுக்கும் மாடுகள் உண்டு.

இந்தப் பழைய பாரத நாட்டில் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்ற நான்கு ஜாதிகள் உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறோம். சுதந்திரத்துக்குப் பிறகு ஒரு புது ஜாதி தோன்றலாயிற்று. அதுதான் தேச பக்த ஜாதி. இந்த ஜாதிக்கு 1947 ஆகஸ்டுக்குப் பிறகு ஒரு புது வேகம் ஏற்பட்டது.

இந்தப் புது ஜாதியினரிடம் திரு மெஹ்ராணு அவர்களுக்கு ஓர் ஈடுபாடு ஏற்பட்டது. அவர்களைப் பாராட்டினார்; கௌரவித்தார். தம் மீன் பண்ணையிலிருந்து மீன்களை அவர்களுக்கு வழங்கினார். இப்படியெல்லாம் செய்து நாளடைவில் அவரே தேசபக்தராகி வந்ததைக் கண்டு மக்கள் வியப்படைந்தனர். சில நாட்களில் எனக்கும் ஒரு விஷயம் புரியலாயிற்று.





ஒரியாக் கதை

குல்லாயின் ரகசியம்

மனோஜ்தாஸ்

அதாவது மெஹ்ராஜு தாமும் ஒரு சட்ட சபை உறுப்பினராக வேண்டும் என்ற ஆசையை வளர்த்து வந்தார் என்பது தான். இதற்காக் அவர் சில காரியங்கள் செய்தார். இதில் ஒன்றை நானே நேரில் பார்க்க நேர்ந்தது. அதைத்தான் இங்கே குறிப்பிட வந்தேன்.

என் மாமாவின் வீடு திரு மெஹ்ராஜு அவர்களின் வீட்டுக்கு வெகு அருகில் இருந்தது. நான் சிறுவனாக இருந்த போது அடிக்கடி மாமா வீட்டுக்குப் போவேன். அந்த நாட்களில் ஒரிஸ்ஸா மந்திரி சபையிலிருந்த திரு பாபு வீர் கிஷோர் எங்கள் ஜில்லாவிலிருந்து போனவர். ஆகவே, திரு மெஹ்ராஜுவை அரசியலில் புகுத்த விரும்பியவர்கள் பாபு வீர்கிஷோரின் ஆசிகளையும் ஆதரவையும் பெற வேண்டும் என்று விரும்பினார்கள்.

மந்திரிகளின் முக்கியமான பணி வரவேற்பு விழாக்களில், பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்வதுதான் என்றிருந்ததால் மெஹ்ராஜுவின் ஆதரவாளர்கள் திரு பாபு வீர்கிஷோருக்கு ஒரு வரவேற்பு விழா நடத்த வேண்டும் என்று தீர்மானித்தனர். திரு மெஹ்ராஜுவைத் தலைவராகக் கொண்ட ஒரு வரவேற்புக் கமிட்டி அமைத்து விழாவும் ஏற்பாடு செய்தனர்.

விழா நடப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பிருந்தே உள்ளூர் ஆரம்பப் பள்ளிச் சிறுமிகளுக்கு, மந்திரிக்கு வரவேற்புக் கீதம் பாடி வரவேற்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தப் பள்ளியின் ஒரிய மொழிப் பண்டிதருக்கு, இப்பொழுது வயது அறுபத்தேழு ஆகிறது. இத்தனை ஆண்டுகளில் அவர் என்றும் கவிதை என்ன என்பது பற்றிக் கவலைப்பட்டதே கிடையாது. இப்பொழுது அவருக்கு மந்திரியை வரவேற்றுப் பாட்டு இயற்றும் அரும் பேறு கிடைத்தது. அவர் அன்று புனைந்த பாட்டின் ஒரு வரி இன்றும் என் நினைவில் இருக்கிறது.

ஓ! மந்திரியாரே! மந்திரியாரே !
எங்களுக்குச் சொல்லும்
இந்தப் பரந்த பாரை எப்படி
ஆள்கிறீர்? எங்களுக்குச் சொல்லும் !

அடுத்த அடிகள் மந்திரியின் வருகையினால் என்னவெல்லாம் மாறுதல் நேர்ந்திருக்கின்றன என்று அடுக்கடுக்காகக் கூறின. அன்று காலை சூரியன் என்றும் இல்லாத மகிழ்ச்சியோடு உதயமானானும். ஒவ்வொரு பறவை இனமும் ஒவ்வொரு ராகத்தில் குரல் எழுப்பி மந்திரியை வரவேற்றதாம். கிராமப் பெண்கள் சங்கூதி வரவேற்கிறார்களாம்.

இப்படியெல்லாம் இன்று யார் வரவேற்கிறார்கள்? அந்தக் காலமே வேறு. அதிலும் பட்டிக்காட்டுக் குழந்தைகளாகிய நாங்கள் ஒருவரோடு ஒருவர் என்னவெல்லாமோ பேசிக்கொள்வோம். — மந்திரி என்ன சாப்பிடுவார் ? அவர் தூங்குவாரா? மாட்டாரா ? அவருக்கு ஜுரம் வருமா ? சனி பிடிக்குமா ?

இது எங்கள் நிலை என்றால் மெஹ்ராஜுவைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை ! பொதுவாக, பகல் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு மணி நேரம் தூங்குவார். இப்பொழுது சென்ற பத்து நாட்களாக மத்தியானம் தூங்குவதே இல்லை. விழா ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கே நேரம் சரியாக இருந்தது ! இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டும் அவருக்கு உள்ளுக்குள் ஓர் அச்சம் ! நடுக்கம் !

கடைசியாக வெகு ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட அந்தத் திருநாள் வந்தது. மந்திரிக்காக எங்கள் கிராமத்து நுழை வாயிலிலேயே ஒரு வரவேற்பு வளைவு அமைக்கப்பட்டிருந்தது. மந்திரியார் அங்கே தம் ஜீப்பை விட்டு இறங்கினார். திரு மெஹ்ராஜு ஒரு பெரிய மாலை அணிவித்துப் பெரிதாகக் கும்பிட்டார். மந்திரி நடக்கத் தொடங்கினார். மந்திரி தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடம் ஒரு பர்லாங்கு தூரத்துக்கு அப்பால் இருப்பதால் மந்திரியாரை ஜீப்பிலேயே வரும்படி கோரினார் மெஹ்ராஜு. அதற்கு மந்திரியார் ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு ஏதோ சொன்னார். அதன் கருத்து. அதிர்ஷ்ட தேவதை அவரை எவ்வளவு உயரத்துக்குக் கொண்டு போனாலும், தாம் பூமியில் பாதம் பட நடப்பதையே விரும்புபவர் என்பது தான். இதைக் கேட்டு, திரு மெஹ்ராஜுவும் அவர் நண்பர்களும் பெரு வியப்பில் ஆழ்ந்து போனார்கள்.

திரு மெஹ்ராஜு அவர்கள் வீட்டுக்கு மந்திரியாரும் அவரைச் சேர்ந்த குழுவினரும் வந்ததும் எல்லாருக்கும் இளநீர் வழங்கப்பட்டது. பிறகு இருபது வகை காய்கறிகள், இனிப்புகள் உள்ள விருந்து நடைபெற்றது. அத்தகைய விருந்து என்றும் நடந்ததே இல்லை என்று சொல்ல வேண்டும்.

மந்திரிக்காக ஓர் அறை ஒதுக்கப்பட்டிருந்தது. மந்திரி ஓய்வெடுத்துக் கொள்ளச் சென்றார். கோடைகாலம். மந்திரியார் படுத்திருந்த அறையின் ஜன்னல்கள் தோட்டத்தின் பக்கம் இருந்தன. தோட்டத்தில் குளமுமிருந்ததால் குளிர்ந்த காற்று அறைக்குள் வீசியது.



அரபு நாடுகளில் ஒன்றான அபுதாபி நாட்டுக்கும் பெரிய பிரச்னை. சென்ற ஆண்டு எண்ணெயில் சம்பாதித்த லாபம் முழுவதையும் அந்த நாட்டினால் செலவு செய்ய முடியவில்லை. முதலில் பட்ஜெட் போட்டபோது 65 கோடி டாலர் துண்டு விழும்படியாக பட்ஜெட் போட்டார்கள். ஆனால் ஆண்டு முடிவில் 100 கோடி உபரியாகி விட்டது. எப்படி? எண்ணெய் உற்பத்தி எதிர்பார்த்ததை விடப் பல மடங்கு அதிகமாகி விட்டது. எதிர்பார்த்த இனங்களில் பணத்தையும் செலவு செய்ய முடியவில்லை. எகிப்து, சிரியா நாடுகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுத்திருக்கிறது. அப்படியும் பணம் மிச்சமாகி விட்டது. அந்த நாட்டில் இப்பொழுது சராசரி வருமானம் தலைக்குக் கிட்டத்தட்ட முப்பதாயிரம் டாலர்.

-இந்தியன் எக்ஸ்பிரஸ்-கே.ஆர்

அது அந்தப் பூதாகாரமான மந்திரியாரை இனிய நித்திரையில் ஆழ்த்தியது. மந்திரியாரின் தூக்கத்தைக் கெடுக்காமல் இருக்க, கிராமத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் சத்தம் வராமல் பார்த்துக் கொள்ளத் தொண்டர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

எனக்கோ மந்திரியாரைப் பக்கத்திலிருந்து பார்க்க வேண்டும் என்ற ஆசை.

ஜன்னல் வழியாகப் பார்த்தபோது தலையணையின் மீதிருந்த மந்திரியாரின் வழுக்கைத் தலை தெரிந்தது. அவருக்குப் பக்கத்திலிருந்த சிறிய மேஜையின் மீது அவருடைய வெள்ளைக் குல்லாய் இருந்தது. திடீரென்று ஜண்டு எங்கிருந்தோ வந்து குதித்து அறைக்குள் இருந்த மந்திரியாரின் குல்லாயை ஜன்னலின் வழியாக எடுத்துக் கொண்டது. அர்த்தபுஷ்டியுள்ள ஒரு பார்வையை என் மீது வீசிவிட்டு, ஜண்டு தோட்டத்துக்குள் மறைந்துவிட்டது. எனக்கு ஒரே ஆச்சரியம்! கத்தக்கூட குரல் வரவில்லை. இதற்குக் காரணம் ஒரு வேளை ஜண்டுவின்பால் எனக்கு இருந்த அன்புதானோ? ஜண்டு செய்த காரியம் அதற்கு உயிராபத்தையே விளைவிக்கக் கூடியதல்லவா? அல்லது நான் கூச்சல் போட்டால் மந்திரியாரின் குறட்டை நின்று விடலாம் என்ற பயத்தில் தான் என் குரல் எழும்பாமல் நின்று விட்டதோ! பெரிய குழப்பத்தில் சிக்கிக் கொண்டேன். அந்தப் பெரிய மனிதரின் குறட்டை முக்கியமா? குல்லாய் முக்கியமா?

இப்படிக் குழம்பிய உள்ளத்தோடு என் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தேன். அதற்குள் ஆங்காங்கு மக்கள் கசமுசவென்று பேசும் அரவம் கேட்டது. மந்திரியாரின் அந்தரங்கச் செயலாளர், ''என்ன விசித்திரமாக இருக்கிறதே!'' என்று அடிக்கடி பொரிந்து தள்ளி, துள்ளிக் குதிப்பதையும் பார்த்தேன்.

திரு மெஹ்ராஜு நடுங்கிக் கொண்டிருந்தார். உடல் எல்லாம் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது.

திரு மெஹ்ராஜுவின் இந்த நிலை எனக்கு ஒரு தெளிவைத் தந்தது. திரு மெஹ்ராஜுவை என்னைப் பின்தொடர்ந்து வருமாறு சைகை காட்டினேன். அவர் உடனே என்னைப் பின் தொடர்ந்தார். மூழ்கிக் கொண்டிருக்கும் மனிதனுக்கு ஒரு சிறு வைக்கோல் துண்டு கிடைத்தாலும் பற்றிக் கொண்டு கரை ஏறத் தானே பார்ப்பான்.

அவரைத் தனியே அழைத்துப் போய் நடந்த விவரத்தைக் கூறினேன். அதைக் கேட்டு ஒரு நிமிஷம் மௌனமாகப் போனார். கண்களை மூடிக் கொண்டார். தம் நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு கலகலவென்று சிரித்தார். பிறகு என்னைப் பார்த்து, ''அப்பா, மகனே! இவ் விஷயத்தை என்னிடம் சொன்னது நல்லதாகப் போயிற்று. இதை வேறு யாரிடமும் சொல்லாதே. உன் மனத்துக்குள்ளேயே வைத்துக் கொள். பிறகு உனக்கு ஒரு நல்ல பரிசு தருகிறேன்'' என்றார்.


அறைக்குள்ளேயே இருந்த மந்திரியும் மெஹ்ராஜுவும் வீட்டு வெளி முற்றத்துக்கு வருவதைப் பார்த்தேன். திரு மெஹ்ராஜு விஷயத்தை மந்திரிக்கு விளக்கினாரா இல்லையா என்பது புரியவில்லை. ஆனால் மந்திரியோ ஒரே ஆனந்த சாகரத்தில் மூழ்கியவராகக் காணப்பட்டார். அவர் முகத்தில் அரும்பிய மகிழ்ச்சிப் புன்னகை இது வரையில் அவர் முகத்தில் எப்பொழுதும் காணாத வகையினதாக இருந்தது.

இப்பொழுது அரை டஜன் குல்லாய்கள் வாங்கி வரப்பட்டிருந்தன. மந்திரியார் அவற்றில் ஒன்றைக்கூட ஏற்றுக் கொள்ளவில்லை. வெறும் தலையுடனேயே கூட்டம் நடக்கும் இடத்துக்குச் சென்றார்.

விசேஷ ஏற்பாடுகள் செய்து அமைக்கப்பட்டிருந்த மேடையில் ஏறி மந்திரி அமர்ந்தார். கூட்டத்தை ஒரு முறை பார்த்தார். ஐயாயிரம் பேருக்குக் குறைவில்லை. மந்திரியாரின் முகத்தில் தோன்றிய அந்த விநோதப் புன்சிரிப்பு இன்னும் ஒட்டிக் கொண்டிருந்தது.

மெஹ்ராஜு வரவேற்புக் கமிட்டியின் தலைவர் என்ற முறையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். மைக்கைப் பிடித்துக் கொண்டு ஒரு மணி நேரத்துக்கு, ''பாபு, வீர்கிஷோரின்'' சாதனைகளைச் சொல்லிக் கொண்டு வந்தார். கடைசியாக இப்படிப்பட்ட அரும் புதல்வரைத் தந்த அவரது காலம்சென்ற பெற்றோர்களுக்கு நன்றி நவின்றார். அவர் தமது முதல் பிரசங்கத்தை — கன்னிப் பேச்சை — வெற்றிகரமாகச் செய்து முடித்ததற்கு நான் மிகவும் மகிழ்ந்தேன். ஆனால் பெரிய அதிசயம் அவரது பேச்சின் கடைசியில்தான் இருந்தது.

அதைக் கேட்டவர்கள் பலர் திரு மெஹ்ராஜு ஒரு கடைந்தெடுத்த அரசியல்வாதி என்ற முடிவுக்கு வருவார்கள். ஆனால் நான் உங்களுக்கு ஒன்று உறுதி கூற முடியும். அவருடைய நல்ல பண்பின் காரணமாகவும் சமீபத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சியினால் விளைந்த குழப்பம் காரணமாகவும் திரு மெஹ்ராஜு அந்தப் பொய் சொல்ல நேர்ந்ததே தவிர



எல்லா விதத்திலும் சிறந்த பல்புகள்
பிலிப்ஸ் பல்புகள்
டி எல் லாம்புகள்
ஹேலோஜென் லாம்ப்
பிலிப்ஸ் இந்தியா 45 ஆண்டுகளுக்கும் மேலாக ஒளித்துறையில் புதுப்புது சாதனைகள் புரிந்து கொண்டிருக்கிறது. அதிகத் திறனும் சிக்கனமும் ஒளித்துறையில் எப்போது தேவைப்பட்டாலும் அவற்றுக் கேற்றவாறு புது சாதனைகளைப் புரிவதில் பிலிப்ஸ் முதலிடம் பெற்று வந்துள்ளது.
1938ல் தொடங்கிய இத்துறையில், பிலிப்ஸ், இல்லங்கள், வர்த்தகத்துறை, தொழில்துறை மற்றும் விசேட பணித்துறைகளுக் கேற்ற லாம்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் பிலிப்ஸ் மட்டுமே இவ்வளவு தேர்ந்தியான லாம்ப் அணிவகுப்புகளை அளிக்கவல்லதாகும். நாட்டின் முன்னேற்றத்துடன் இணைந்து இப்பணியும் தொடர்ந்து பெருகிக்கொண்டே வருகிறது.
இன்ஃப்ரா-ரெட் லாம்ப்
காம்ப்டாலக்ஸ் லாம்ப்
ஃபோட்டோகிராஃபிக் லாம்ப்
ஹைச்சொல் லாம்ப்
எம் எல் எல் லாம்ப்
பிலிப்ஸ்—லாம்ப் மற்றும் ஒளித்துறையில் முன்னோடிகள்
PHILIPS
பிலிப்ஸ்
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்


PHL-9364

புதிய


டால்ஃப்®

மூட்டைப் பூச்சித் தொல்லையிலிருந்து 100% உத்தரவாதம்

வாரக்கணக்கிலும் ...குறைந்த செலவிலும்




புதிய டால்ஃப், மூட்டைப் பூச்சிகளை ஒழித்து, உங்களுக்கு 100% விடுதலை அளிக்கிறது.



புதிய டால்ஃப், தெளிக்கப்பட்ட இடத்தில் வாரக்கணக்கில் தங்கிச் செயலாற்றுகிறது. (அது தெளிக்கப்பட்ட இடத்திலிருக்கும் வீரியமுள்ள மருந்துப் படலத்தைத் துடைத்து விடாதீர்கள்)

நெடுங்காலம் 'தங்கிச் செயலாற்றும்' அபார சக்தி!
சக்தி வாய்ந்த புதிய டால்ஃப் மூட்டைப் பூச்சித் தொல்லையிலிருந்து வாரக்கணக்கில் உங்களுக்கு விடுதலை அளிக்கிறது. ஏனெனில், அதன் இணையற்ற 'தங்கிச் செயல் புரியும் ஆற்றல்' நெடுங்காலம் நீடிக்கிறது.

மிகுந்த சிக்கனம்!
புதிய டால்ஃப் மிகவும் சிக்கனமானது. முதலில், இதற்காகும் செலவு மிக மிகக் குறைவு. இரண்டாவது, இது நெடுங்காலம் 'தங்கிச் செயல் புரிவதால்', பல வாரங்கள் வரை, நீங்கள் இதை மீண்டும் தெளிக்க வேண்டாம்!



புதிய 50 மி.லி. பேக்! ரூ. 2.47 மட்டுமே. வரிகள் தனி

டால்ஃப்®

மூட்டைப் பூச்சிகளின் தொல்லையிலிருந்து பூரண விடுதலை

பாயர் சர்வதேச ஆராய்ச்சியின் நிரூபணமான தயாரிப்பு BAYER®

CBH/4700 TH

அவர் பொய் சொல்லக்கூடியவரே அல்ல. அவர் தம் குரலை மெள்ள மெள்ள உயர்த்தி, ''சகோதரர்களே! சகோதரிகளே! நீங்கள் எல்லாரும் மேன்மை தங்கிய மந்திரியாரின் குல்லாய் மாயமாய் மறைந்து போனதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது திருடு போய்விட்டதாக நினைக்கிறீர்கள். இல்லையா? இயல்புதான். ஆனால் அப்படியல்ல, பெரியோர்களே, தாய்மார்களே, அப்படியல்ல.'' திரு மெஹ்ரானு ஒரு பொருள் பொதிந்த புன்னகை உதிர்த்தார். மந்திரியார் தம்பெரிய வழுக்கை மண்டையைத் தடவிக் கொடுத்தார். திரு மெஹ்ரானு தொடர்ந்தார். ''நீங்கள் எல்லாரும் குல்லாய் என்ன ஆயிற்று என்று அறிந்து கொள்ளத் துடிக்கிறீர்கள் அல்லவா? ஆம், இயற்கைதான்! உங்கள் ஆவல் இயல்பானதுதான்! நடந்தது இதுதான்: நம் பகுதியைச் சேர்ந்த ஒரு பெரிய மனிதர் எடுத்துக் கொண்டு போய் விட்டார். ஏன்? அதை ஒரு புனித ஞாபகார்த்தப் பொருளாக வைத்துக் கொள்வதற்காகத்தான். அவர் அதை ரகசியமாக எடுத்துச் செல்ல வேண்டியதாகப் போய்விட்டது. ஏனெனில், நமது மேன்மை தங்கிய மந்திரியார் அடக்கமே உருவானவர். மந்திரியார் தமது குல்லாயைப் புனிதப் பொருளாக நினைக்க அனுமதிக்கமாட்டார். ஆகவே, அவர் அப்படிச் செய்தார்.''

இப்படிச் சொல்லிக் கொண்டே திரு மெஹ்ரானு சற்று நிறுத்தினார். தமது பைக்குள்ளிருந்து தமது கைக் குட்டையை எடுத்தார். அந்தக் கைக்குட்டையில் ஏராளமான நாணயங்கள் இருந்தன. அதைச் சபையோருக்குக் காண்பித்தபடி, ''தாய்மார்களே! பெரியோர்களே! நமது நண்பராகிய அந்தப் பெரிய மனிதர் இதோ இந்தக் கைக் குட்டையில் உள்ள நூற்றியொரு ரூபாயை மந்திரியாரிடம் கொடுத்து மந்திரியாரின் விருப்பத்துக்கு ஏற்ப மக்களுக்குப் பயன்படும் வகையில் செலவழிக்க வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்'' என்று சொல்லி இந்தப் பணத்தை மந்திரியாரிடம் சமர்ப்பித்தார். மந்திரியும் மிகவும் பண்போடு ஏற்றுக் கொண்டார். அப்போது எழுந்த கரகோஷமும் சபையோரிடமிருந்து வந்த பாராட்டுரைகளும் புயல் போல் வீசின. மந்திரியும் திரு மெஹ்ரானுவும்கூடக் கைதட்டினார்கள். பிறகு மந்திரியார் இரண்டரை மணி நேரம் பேசினார். இடை இடையே நாலு டம்ளர் பாலைக் காலி செய்தார். பேச்சின் இறுதியில் தம்முடைய குல்லாயை எடுத்துக் கொண்ட, தமக்குத் தெரியாத அந்த ரசிகருக்கு மரியாதை செலுத்தும் வகையில் அன்று இரவு முழுதும் குல்லாய் இல்லாமல் இருப்பது என்று முடிவு செய்திருப்பதாக அறிவித்தார்.

திரு மெஹ்ரானுவின் பேச்சைக் கேட்டு முதலில் நான் அதிர்ச்சி அடைந்தேன். என்றாலும் பின்னால் எனக்கு இரு வகை உணர்ச்சி ஏற்பட்டது. திரு மெஹ்ரானுவின் சமயோசித புத்தியை வியந்து பாராட்டினேன். ஆனால் அடுத்தாற்போல் ஜண்டு என்ற குரங்கின் விஷமத்தை மூடி மறைக்க



○ உங்கள் பேனாவில் இங்க் ஒழுகுகிறதா? இதைத் தடுக்க ஒரு நல்ல வழி இருக்கிறது. பேனாவில் ஒரு சொட்டுக்கூட இங்க் இருக்கக் கூடாது.

○ உங்கள் ரிஸ்ட் வாட்சில் கீறல் விழுகிறதா? நீங்கள் கையில் கட்டியிருப்பதால்தான் கீறல் விழுகிறது. கழுத்தில் தொங்க விட்டுக்கொள்ளுங்கள்!

○ பெல்பாட்டம் பாண்ட் மண்ணில் பட்டு அழுக்காகி விடுகிறதா? இதோ ஒரு யோசனை: ஒவ்வொரு நாளும் அன்று எங்கெங்கு போவோமோ அந்தத் தெருவை எல்லாம் கொஞ்சம் காலையிலேயே எழுந்து போய்க் கூட்டிவிட்டு வந்துவிட வேண்டும்.

○ முதுகுப்புறம் உள்ள ஜாக்கெட் பட்டன் திடீரென்று கழன்று விடுகிறதா? காலையில் புறப்படும் போது ஊசி நூல் எடுத்து முதுகுப்புறம் ஜாக்கெட்டை நீளமாகத் தைத்துவிட்டால் தொந்தரவு இல்லை.

— கிருஷ்ணகுமார்

நூற்றி ஒரு ரூபாயை அவர் செலவழிக்க நேர்ந்ததே என்றும் வருத்தப்பட்டேன்.

மறு நாள் காலை மெஹ்ரானுவைப் பார்த்த போது அவர் கண்களில் அவர் குற்றம் நன்கு பிரதிபலித்தது. குறைந்தபட்சம் என்னைப் பார்க்கும்போதெல்லாம் அந்தக் குற்றப் பார்வை நன்கு தெரியும். பாவம் மெஹ்ரானு தம் வாழ்க்கையில் என்றும் பொய் சொன்னவர் இல்லை. கடைசியில் அவர் பொய் சொல்ல நேர்ந்ததென்றால் ஆயிரம் பேர் முன்னிலையிலா சொல்ல வேண்டும். அவர் இனி சத்தியசந்தரல்ல என்னும் விஷயம் கடவுளைத் தவிர இன்னும் ஒரு பிரகிருதிக்குத் தெரியும் என்றால் அது நான்தான்!

மந்திரி விடைபெறும் நேரம் நெருங்கி வந்தது. புறப்படுமுன் அவருக்குச் சர்க்கரை போட்ட தயிர் கிண்ணத்தில் வழங்கப்பட்டது. மந்திரி தயிரைக் குடித்து விட்டுப் பின்பக்கம் குளமும் தோப்பும் இருந்தபக்கம் தம்வாயைக் கழுவிக் கொள்ள வந்தார். என்னைத் தவிர பின்பக்கம்வராந்தாவில் யாரும்இருக்கவில்லை. நான் யதேச்சையாக அங்கு போய்ச் சேரவில்லை. சில நிமிஷங்களுக்கு முன் அந்த அயோக்கியக் குரங்கு ஜண்டு, மந்திரியின் குல்லாயை வைத்து விளையாடிக்கொண்டே வராந்தாவை நெருங்கிக் கொண்டிருந்தது. மந்திரி கண்களில் ஜண்டு படாமலிருக்க வேண்டுமே என்று நான் அப்போது கடவுளை வேண்டிக் கொண்டது போல் எப்போதுமே வேண்டிக் கொண்டதில்லை. ஜண்டு

குழந்தைக் குரங்காக இருந்தபோது, தந்தைக் குரங்கின் கோபத்திலிருந்து தப்ப அதன் தாய்க் குரங்கு மெஹ்ராஜுவின் வீட்டில் தஞ்சம் அடைந்தது. அப்போது மெஹ்ராஜு வீட்டில் இல்லை. வேலைக்காரர்கள் தாய்க் குரங்கைக் கொன்றுவிட்டார்கள். இதை அறிந்த மெஹ்ராஜு மிகவும் வருத்தப்பட்டார். அன்ன ஆகாரமின்றிப் பட்டினி கிடந்தார். தாய்க் குரங்குக்குச் செய்த அநீதிக்குப் பிராயச்சித்தமாகக் குட்டிக் குரங்கை எடுத்து வளர்க்கலானார். மிகுந்த பரிவோடு அதற்கு ஜூண்டு என்று பெயர் சூட்டினார்.

ஜூண்டு சிறிது வளர்ந்து பெரிய குரங்கானதும் அடிக்கடி தோப்புக்குள் ஓடி ஒளிந்து கொள்ளும். ஜூண்டு பாதி வீட்டுக் குரங்காகவும் பாதி காட்டுக் குரங்காகவும் வளர்ந்தது. அது எல்லாருடனும் விளையாடியது. எல்லாரும் அதன் விஷமங்களைப் பொறுத்துக் கொண்டனர். சிறுவர்களாகிய எங்களுக்கு அதனிடம் அலாதியான மோகம்.

ஜூண்டு குளத்தின் அக்கரையிலிருந்து எங்களை நோக்கிப் பாய்ந்து வந்தது. நான் மெஹ்ராஜுவுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் என் முயற்சி பலிக்கவில்லை. கண் இமைக்கும் நேரத்தில் ஜூண்டு பாய்ந்து வந்து மந்திரிக்கும் மெஹ்ராஜுவுக்கும் இடையில் வந்து உட்கார்ந்து கொண்டது. ஒரு முறை குல்லாயைத் தன் தலையில் போட்டுக் கொண்டு அடுத்த கணம் மந்திரியிடம் மிகப் பெருமிதத்துடன் நீட்டியது.

என் இதயம் மூன்று பங்கு வேகத்தில் அடித்துக் கொண்டது. மெஹ்ராஜுவின் முகத்தைப் பார்த்தேன். இரத்தமெல்லாம் வறண்டு, பேய் அறைந்தவன் முகம் போல் பரிதாப மாகக் காணப்பட்டது.

ஆச்சரியத்தில் ஆழ்ந்த மந்திரி, ''எ...எ.. அந்தப் பெரிய மனிதர் கொண்டு போன குல்லாய் அல்லவா இது?'' என்று தடுமாறிக் கொண்டே கேட்டார்.

மெஹ்ராஜுவின் வறண்டு போன உதடுகளிலிருந்து சற்றும் எதிர்பாராத வார்த்தைகள் வெளிவந்தன. அத்துடன் அவரும் அப்படியே மயங்கி விழுந்து விடுவார் போல் இருந்தது. அவர் கூறிய வார்த்தைகள் இவைதாம் : ''ஆம்; ஆம். இதுதான் அந்தப் பெரிய மனிதர்.....''

இதைக் கேட்டதும் மந்திரியின் கண்கள் பிதுங்கி வெளியே வந்துவிடும் போல் ஆகிவிட்டது. '' என்ன? என்ன? என்ன சொன்னீர்கள்?.... சரி !'' என்றார் மந்திரி.

திரு மெஹ்ராஜு பதில் சொல்லக்கூடிய நிலையிலேயே இல்லை. அவர் கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகிற்று. அடுத்த கணம் மீன் வளம் நன் கலைத் துறை மந்திரியின் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகுவதைப் பார்த்தேன்.

முன் பக்கத்தில் இருந்த வராந்தாவில் இருந்து அந்தரங்கக் காரியதரிசி மந்திரியாரிடம், ''ஸார், ஜீப் தயாராக இருக்கிறது. புறப்பட'' என்றார்.

மந்திரி குவளை நிறைய இருந்த தண்ணீரைக் கடகடவென்று விழுங்கிவிட்டு ஜீப்பை நோக்கி நடந்தார். மெஹ்ராஜு மந்திரியைப் பின்தொடர்ந்தார். அவர்கள் இருவர் முகங்களும் நீண்டு, கண்களும் சிவந்திருப்பதைப் பார்த்தவர்கள், பிரிவாற்றாமைத் துயர் அவர்களை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறது என்று பேசிக் கொண்டார்கள்.

மெஹ்ராஜுவின் அரசியல் பிரவேச முயற்சி இதற்கு மேல் ஓர் அடிகூட முன்னேறியதாகத் தெரியவில்லை.

(ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்: எஸ். வீ. எஸ்.)

தமாஷ் 'க்விஸ்'

காலியாக இருக்கும் அறையில் என்ன இருக்கும்?
நிரம்ப இடம் இருக்கும்!
நீ நகர்ந்தவுடன் அதுவும் நகர்ந்துவிடும். அது என்ன?
கண்ணாடியில் தோன்றிய உன் உருவம்.
எது திறந்தவுடன் மூடிக்கொள்ளும், மூடியவுடன் திறந்துகொள்ளும்?
ரயில்வே கேட். ரயிலுக்காகத் திறந்தால் ஜனங்களுக்கு மூடிக்கொள்ளும். ஜனங்களுக்காகத் திறந்தால் ரயிலுக்கு மூடிக்கொள்ளும்.
அதை உடைத்தால்தான் சிலருக்கு உபயோகப் படும். அது என்ன?
முட்டை!
எதுவரையிலும் யாரும் உயிருடன் இருப்பார்கள்?
கடைசி மூச்சு வரையிலும்!



வழியில் இரவில் ஒன்று கிடைத்தது. அதை வீட்டில் வெளிச்சத்தில் பார்த்ததும் எறிந்துவிட்டேன். அது என்ன?
காலில் தைத்த முள்!
எதைக் கடலில் எறிவார்கள்; மறுபடியும் எடுத்து வைத்துக்கொள்வார்கள்?
நங்கூரம்.
எது இரவில் வேலை செய்யும், பகலில் வேலை செய்யாது?
தெரு விளக்கு!
எது சூரிய வெளிச்சத்தில் போனாலும் அதன் நிழல் பூமியில் விழாது?
காற்று!
வயது முதிர்ந்தவர்களும் விளையாட்டுச் சாமான்களை அடிக்கடி உபயோகிப்பார்கள். அவர்கள் யார்?
விளையாட்டுச் சாமான்கள் விற்பவர்கள்!
எது ஓடிக்கொண்டே யிருக்கும். ஆனால் ஓரிடத்துக்கும் போகாது?
கடிகாரம்!
நீ எதைப் பார்க்க முடியாதோ அதைப் பிறர் பார்க்கிறார்கள். அது என்ன?
நீ தூங்குவதை!
ஒரு பந்துக்கு எத்தனை பக்கங்கள் இருக்கின்றன?



இரண்டு பக்கம். உள் பக்கம், வெளிப் பக்கம்.
எது எப்பொழுதும் தலைகீழாக நடக்கும்?
உன் செருப்பின் அடிப்பாகத்தில் அடிக்கப்பட்டிருக்கும் ஆணி.
உனது வலக்காலால் எதை உதைக்க முடியாது?
உனது வலக்காலை!

— என். என்.

கிளர்ச்சியூட்டும் காட்டன்ஸ் அளிப்பதோ சென்சுரி

சூட்டிங்குகள்—கற்பனை வளம் நிறைந்த டிசைன்களும் சென்ச்சுரி பருத்தியின் குளுமையான சுகமும் பரிபூரணமாக இணைந்தவை

ஷர்ட்டிங்குகள்-திகைக்க வைக்கும் கோடுகள் மனதை மயக்கும் கட்டங்கள். எண்ணற்ற திறுசுகள்-இவை எல்லாமே சேர்ந்து, சென்ச்சுரி பருத்தி எண்ணிலா வண்ணங்களில் குன்றாத ஒளி பெற்றுத் திகழ்கின்றது.

புடவைகள் பருத்தியின் சுகபோக இதம்-ஆம் உங்களுக்கு சென்ச்சுரி மட்டுமே இந்த சுகத்தை அளிக்க முடியும். சென்ச்சுரி புடவை உங்கள் எழில் உடலை ஒட்டித் தழுவ, கிளுகிளுப்பூட்டும் மகிழ்ச்சியிலே திளைக்கிறீர்கள். நெருப்பை எதிர்த்து உழைக்கும் அக்னியவிரோதக் புடவைகளும் உண்டு.

ஆடை அணி வகைகள் நிலவன் ததும்பும் டிசைன்கள். கனிகடம் புரியும் வண்ணங்கள். சென்ச்சுரி பருத்தியின் மென்மையும் உணர்ச்சியைத் தொடும் சிறப்பும் உங்களை என்றும் மகிழ்விக்கும்.

தி சென்ச்சுரி ஸ்பின்னிங் &
மான்யுபாக்சரிங் கோ. லிட்.,
பம்பாய் 400 025



சென்ச்சுரி
நூற்றுக்குநூறு
பருத்தித்
துணிமணிகள்.

national-913-Tamil

ம.பொ.சி



பாட்டுடைத் தலைவியின் முகத்தைத் திங்களுடன் ஒப்பிட்டு, அந்தத் திங்களும், வானத்திலிருந்தால் பாம்பு தன்னைப் பிடித்துக் கொள்ளுமென்று அஞ்சிப் பூமியில் வந்து உலவுவதாக வருணித்துப் பாடுகிறான். அந்தப் பாடல் வருமாறு:

கயல் எழுதி, வில் எழுதி,
கார் எழுதிக் காமன்
செயல் எழுதித் தீர்த்தமுகம்
திங்களோ, காணீர்!

திங்களோ காணீர்
திமில்வாழ்நர் சீறூர்க்கே
அம்கண் ஏர் வானத்து
அரவு அஞ்சி வாழ்வதுவே!

சிலம்புச் செல்வம்

மாதவியின்பால் ஊடல் கொண்ட காரணத்தால் கோவலனுடைய மனத் திரையிலே கண்ணகி தோன்றிவிட்டாள்.

மாதவியின் மனை புகுந்த கோவலன், தன் மனைவியான கண்ணகியை மறந்தான் — என்று இளங்கோ கூறவில்லை. ''வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்தான்'' என்றுதான் கூறுகின்றார். 'மனைவியை மறந்தான்' என்பதற்கும், 'மனையகம் மறந்தான்' என்பதற்கும் பொருள் வேறுபாடு உண்டுதானே!

தன் கண்ணெதிரே தோன்றும் காவிரியைக் கண்ணகியாக நினைத்துக் கொண்டு கோவலன் ஆற்று வரிப் பாடல் பாடினான். ஆம்; உள்ளத்திலே கண்ணகி; உதட்டிலே காவிரி!

காவிரியின் நாயகனான சோழ மன்னன், வடக்கேயுள்ள கங்கையாற்றைக் காதலித்து அவளோடு கூடி வாழச் சென்று விட்டாலும் காவிரிப் பெண்ணானவள் அவன்பால் ஊடல் கொள்வதில்லை. ஏன் தெரியுமா? அதுதான் பெண்களின் கற்பு நெறி என்பதால்!

இங்கே ஓர் அரசியல் நெறியையும் சேர்த்துச் சொல்லுகிறார் இளங்கோவடிகள். அதாவது, சோழ நாட்டு மன்னன் கங்கை நாட்டைக் கைப்பற்ற வடபுலம் சென்றிருந்தாலும், அவன் இல்லாத நேரத்திலே உள்நாட்டில் அராஜகம் தோன்றுவதில்லையாம்! சோழன் செங்கோலன் ஆதலால், அவன் இல்லாத நேரத்திலும் குடி மக்களால் தருமமும் ஒழுங்கும் கடைப்பிடிக்கப்படுகின்றன — என்பதாம். இரு பொருள் தரும் பாடல்கள் இவை.

பாண்டி நாட்டையும் கைப்பற்ற வேண்டித் தெற்கே கன்னியாகுமரிப் பிரதேசம் வரை சோழ மன்னன் சென்றிருந்தாலும், அதற்காக அவன்பால் காவிரிப் பெண்ணானவள் ஊடல் கொள்வதில்லை; ஏனெனில் அதுதான் அறக் கற்புடைய மங்கையரின் குல ஒழுக்கம்— என்று கோவலன் கூறுகின்றான்.

இதற்கு மேல் அகத்திணை இலக்கிய நெறிப்படி கானல் வரிப் பாடல்களைக் கோவலன் பாடுகின்றான். நெய்தல் நிலமான கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள மீனவப் பெண் ஒருத்தியைக் காதலித்து, அவள்பால் மனத்தைப் பறிகொடுத்த தலைவனின் கூற்றாகக் களவியல் துறைகளைப் பாடுகின்றான்.

கோவலன் ஏற்றுள்ள பாத்திரமான கானல் வரிப் பாட்டுடைத் தலைவன், தான் கண்ட தலைவியின் இடையும் முகமும் மொழியும் புருவமும் விழிகளும் தன்னை இடர் செய்கின்றனவென்று பாடுகின்றான்.

பொழில் தரு நறுமலரே,
புதுமணம் விரிமணலே,
பழுதறு திருமொழியே,
பணைஇள வனமுலையே.

முழுமதி புரைமுகமே,
முரிபுரு வில்இணையே.
எழுதரு மின்இடையே
எனைஇடர் செய்தவையே.

திரைவிரி தருதுறையே,
திருமணல் விரிஇடமே,
விரைவிரி நறுமலரே,
மிடைதரு பொழில்இடமே.

மருவிரி புரிகுழலே,
மதிபுரை திருமுகமே,
இருகயல் இணைவிழியே,
எனைஇடர் செய்தவையே.

வளைவளர் தருதுறையே,
மணம்விரி தருமொழியே,
தளைஅவிழ் நறுமலரே,
தனியவள் திரிஇடமே.

முளைவளர், இளநகையே,
முழுமதி புரைமுகமே,
இளையவள் இணைமுலையே,
எனைஇடர் செய்தவையே.

தன் தலைவி மீனவப் பெண்ணாதலால், அவள் தந்தை கடலுள் புகுந்து மீன் வலை வீசி மீன்களைக் கொல்லுவது போல் அவளும் தன் உடலுள் புகுந்து தன் உயிரைக் கொல்லாமல் கொல்லுகிறாள் என்கிறான் தலைவன் மற்றொரு பாடலில். பாட்டுடைத் தலைவன் வேறொருவன் என்பதை மறந்து அந்தப் பாட்டோடு தானும் ஒன்றிப் பாடினான் கோவலன். (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தின் சார்பில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.

புதுமையின் பொலிவுக்கு

ஹமாம்



நறுமணம் சிந்தும் ஹமாம்...
உங்களுக்கும் உங்கள் குடும்ப
முழுமைக்கும் புதுமைப் பொலிவு
வழங்கிடுமாம்...உள்ளத்தில்
குதூகலம் பொங்கிடச் செய்திடுமாம்.

ஹமாம்

அதிக நாள் நீடித்துழைக்கும்
டாய்லெட் சோப்.

டாம்கோ தயாரிப்பு—
வாங்க நல்லது
விலை குறைந்தது...
வேலையோ சிறந்தது.
தி டாடா ஆயில் மில்ஸ் கம். லிட்.

CMTH-15-R 172 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேயா காசு

